கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



பேராசிரியர் சபா.ஜெயராசா
சி.ரமேஷ்
இ.சு.முரளிதரன்
த.கலாமணி
அ.யேசுராசா
முல்லைக்கோணேஸ்
பொ.கருணாகரமூர்த்தி
க.சட்டநாதன்
இராஜினிதேவி சிவலிங்கம்
மூதூர் மொகமட் ராபி
மலரன்னை
விவேகானந்தனூர் சதீஸ்
எஸ்தர் விஜிந்தகுமார்
சௌந்தரி
சாந்திநேசக்கரம்
சு.க.சிந்துதாசன்
அலெக்ஸ்பரந்தாமன்
த.ரிலக்சன்

113

மாசி - 2018

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2018 - மாசி

# பொருளடக்கம்



நேர்காணல்:

மலரன்னை - 25

சிறுகதைகள்

முல்லைக்கோணேஸ் - 07
பொ.கருணாகரமூர்த்தி - 18
க.சட்டநாதன் - 29
இராஜினிதேவி சிவலிங்கம் - 38
மூதூர் மொகட் ராபி - 44

கவிதைகள்

விவேகானந்தனூர் சதீஸ் - 10
எஸ்தர் விஜிந்தகுமார் - 11
சௌந்தரி - 17
சாந்தி நேசக்கரம் - 23
சு.க.சிந்துதாசன் - 37
அலெக்ஸ் பரந்தாமன் - 37

அட்டைப்படம்

த.ரிலக்சன்

கட்டுரைகள்

**இலங்கைத்தமிழ்ச் சூழலில்
இலக்கியத் திறனாய்வின் அசைவியம்**
பேராசிரியர் சபா ஜெயராசா - 03


**மீட்பார்களின் பயணமும்
ஒழுங்கமைவின் சிதைவுகளும்
- பார்த்தீனியம் நாவலை முன்வைத்து**
சி.ரமேஷ் - 12



**சுரோடிங்கரின் பூனை**
இ.சு.முரளிதரன் - 24

**தீரன் ஆர்.எம்.நௌஸாத் எழுதிய
“ஒய்த்தா மாமா” சிறுகதை பற்றிய ஓர் உளவியற் பார்வை**
த.கலாமணி - 34

**தர்மசேன பத்திராஜவை நினைவு கூர்ந்து...**
அ.யேசுராசா - 40



# ஜீவநதி

**2018 மாசி இதழ் - 113**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



**ஜீவநதி சந்தா விபரம்**

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K.Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## தேர்தல் கால வாக்குறுதிகள்


ஒரு நாட்டின் ஜனநாயக ஆட்சித்தன்மையின் அடையாளமே தேர்தல் என்பர். இத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமையும் சொந்த விருப்பில் ஆட்சியாளரைத் தேர்வு செய்யும் சுயாதீனமும் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதையே 'ஜனநாயகம்' உணர்த்துகிறது. அவ்வாறெனின் ஒரு நாட்டின் மக்கள் அனைவருமே 'நாட்டு நடப்புகளை' தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். ஆனால், 'நாட்டு நடப்புகள்' அரசியற் பின்னணியில் இடம்பெறுபவை. எனவே அரசியல் பற்றிய தெளிவே நாட்டுநடப்புகளை மக்கள் நன்கு விளங்கிக்கொள்ளத் துணைபுரியும்.

ஒரு நாட்டு மக்களுக்கு எழுத்தறிவு, எண்ணறிவு எத்துணை அவசியமோ அரசியல் அறிவும் அத்துணை அவசியம். அரசியல் விழிப்புணர்வு இல்லாத ஒரு சமுதாயம் 'மலட்டு'ச் சமுதாயமாகவே கருதப்படும். இவ்வகையில், மக்களுக்கு அரசியல் விழப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய 'வழிவகைகள்' பற்றி அதிக அக்கறை கொள்ள வேண்டும். ஆனால், இந்த அக்கறை பொதுவாகவே எவரிடத்தும் இருப்பதாகத் தெரியவில்லை. தேர்தல்கால விஞ்ஞாபனங் களையும் தேர்தல் வாக்குறுதிகளையும் மாத்திரமே மக்களை அரசியல் விழிப்புணர்வு பெறச் செய்வதற்கான கருவிகளாகப் பயன்படுத்துவதென்பது அர்த்தமற்றது. 'இத்தேர்தல் கால வாக்குறுதிகள் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்படக் கூடியவை என்பது பற்றியே அல்லது அவை எவ்வளவு தூரம் நிறை வேற்றப்படக் கூடிய அதிகாரமட்டத்திலிருந்து வழங்கப்படு கின்றன என்பது குறித்தோ விளங்கிக் கொள்ள முடியாத அளவுக்கே நம் மக்கள் இருக்கிறார்கள்' என்ற அரசியல் ஞானமே தேர்தல்கால வாக்குறுதிகளை 'அள்ளி வீசுவதற்கு'க் காலாகின்றது.

- க.பரணீதரன்

### ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ்- பூபாலசிங்கம் புத்தகசாலை, புக்லப் - திருநெல்வேலி,
கொழும்பு வெள்ளவத்தை - பூபாலசிங்கம் புத்தகசாலை,
செட்டித்தெரு பூபாலசிங்கம்,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி.



# இலங்கைத் தமிழ்ச் சூழலில் இலக்கியத் திறனாய்வின் அசைவியம்

பேராசிரியர் சபா.ஜெயராசா

இலக்கியங்கள் மேட்டுக் குடியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தியமை போன்று, மரபுவழித் திறனாய்வும் சமூகத்து மேலடுக்கினரின் இலக்கிய நோக்கையே வெளிப்படுத்தியது.

புலவரும், வீரர்களும் சமூகத்தின் உயர்குடிப்பிறப்பினராயும் பாணர் தாழ் குடியினராயும் இருந்த நிலையைப் பேராசிரியர் க. கைலாசபதி தமது வீரயுகக் கவிதைகள் பற்றிய ஆய்விலே குறிப்பிட்டுள்ளார்.

புலவர் மரபும் செய்யுள் மரபும் யாப்பு நெறியினையும் உயர்ந்தோர் விழுமியங்களையும் கட்டிக்காத்து நின்றமை, ஏற்றத்தாழ்வுள்ள சமூக நிலையைப் பாதுகாக்கும் புலமை வழிச் செயற்பாடாயிற்று.

உரை நூல்களிலே மரபு வழித்திறனாய்வு முறைமை முகைய விழ்த்தது என்று கூறினாலும் அவற்றில் செய்யுள்களுக்குரிய பொருள் கொள்ளும் விபரிப்புக் களே மேலோங்கியிருந்தன. புலமை நிலையில் இலக்கியங்களை ஆராய்ந்து சீர் தூக்கலே அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்த மரபே வித்துவ சிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளை, மரபினரிடமும் நீடித்தது. அந்த மரபில் வந்தவர் தான் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

“இலங்கைத்தமிழ்த் தேசியம்” என்ற நோக்குடைய புலமைநிலைத் திறனாய்வுக் கோலங்களே அவரிடத்துக் காணப் பெற்றன. இலங்கைத் தமிழ்த் தேசியம் அவரிடத்து எழுகை கொள்வதற்கு யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் என்ற தேசிய இயக்கத்துடன் இருந்த தொடர்புகளும் அவர்களின் கருத்தியலும் காரணங்களாயின.

அவரை இரசனை முறைத் திறனாய்வாளர் என்று குறிப்பிடுவதிலும் பார்க்க, புலமை நிலைத்திறனாய்வாளர் என்று அடையாளப்படுத்துதலே பொருத்த மானது. அவர் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமை யாற்றிய அதே அனுபவங்களோடுதான் மரபு வழி இலக்கியங்களை நோக்கினார்.

நவீன இலக்கிய வடிவங்கள் அவருக்கு ஒவ்வாத நிலையில் இருந்தன. அக்காலத்தைய ஆசிரியர் கலாசாலைப் பாடத்திட்டங்களில் நவீன இலக்கிய வடிவங்களுக்கு இட மளிக்கப்படவில்லை. பல்கலைக் கழகப் பாடத்திட்டத்திலே தான் அவற்றுக்கு இடமளிக்கப்பட்டிருந் தது. அந்த நிலமை, பண்டிதர்களுக் கும் பல்கலைக்கழகத்தினருக்கு மிடையே முரண்பாடுகளையும் தோற்றுவித்தது.



பண்டித வர்க்கத்தினர் நவீன இலக்கிய வடிவங் களைத் தரங் குறைந்தவை என்றும், தாழ்ந்தவை என்றும், கருதினர்.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையவர்கள் யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழைப் பயன்படுத்தி நாடகங் கள் எழுதிய செயற்பாட்டினையும் தரங்குறைந்த செயற்பாடு என்றே பண்டிதமரபினர் கருதினர்.

மொழி பற்றிய ஒற்றைப் பரிமாண நோக்கே பண்டிதமரபினரிடம் காணப்பெற்றது. மொழியின் இயங்குநிலையையும் அதனை அடியொற்றிய இலக்கி யங்களையும் அவர்களால் விளங்கிக் கொள்ள முடியா திருந்தது.

மரபுவழி இலக்கண முறைமைக்கும், செய்யுள் முறைமைக்கும் உயிர்ப்புக் கொடுப்பதன் வாயிலாக நவீன இலக்கிய வடிவங்கள் மற்றும் பேச்சு மொழி ஆகிய அறைகூவல்களை எதிர்கொள்ள முடியுமென்ற நோக்கில் இலங்கைத்தமிழ்த் தேசியமும் செய்யுள் மரபும்கலந்த சுழற்சியைப்பண்டிதமணி தேர்ந்தெடுத்தார்.

அந்தவகையில் பண்டிதமணி அவர்கள் சின்னத்தம்பிப்புலவர். சேனாதிராயமுதலியார், முத்துக் குமார கவிராயர், வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை, சோமசுந்தரப்புலவர் முதலியோரை ஆய்வுக்குத் தேர்ந்தெடுத்தார்.

அவரிடத்துப் புகுந்த நவீனத் துவத்தின் செல்வாக்கு பழைமையின் இறுக்கத்தை நெகிழ்ச்சிப்படுத்த உதவியது. அத்தகைய நெகிழ்ச்சி யுடன் மகாபாரதம், இராமாயணம், திருக்குறள், கந்தபுராணம், அன்பி னைந்திணை முதலியவற்றை அணு கினார். பண்டிதமணி எழுதிய கதிர்காம வேலன் பவனி வருகிறான், இலக்கிய வழி, சைவ நற்சிந்தனை கள், பாரத நவ மணிகள், கந்தபுராண கலாசாரம், கந்தபுராண போதனை, சமயக்கட்டுரைகள் முதலியவை பழையவற்றைப் புதிதாக இயம்பும் காட்சிகளைக் கொண்டவை.



கலாசாலைக் கற்பிக்கும் முறைமையை அடிப்படையாகக் கொண்ட திறனாய்வுக் கோலங்களே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை யிடத்துக் காணப்பெற்றன.

அக்காலத்திலே பாடல் களுக்கு நயம் எழுதுதல் என்றசெயற் பாடு ஆசிரிய கலாசாலைப் பாடத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதுவும் பண்டிதமணியிடத்துச் செல் வாக்கினை ஏற்படுத்தி இருக்கலாம்.

புலமைத்துவம் வழியாக செய்யுள் இலக்கிய அழகை வெளிப்படுத்தலே பண்டித மணியின் திறனாய்வு முறைமையாக இருந்தது.

இந்திய மரபில் 'சுவைத்தல்" அல்லது "இரசனை கொள்ளல்" என்பது பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரத்தை அடியொற்றி மேலெழுந்தது. தொல் காப்பியம் சுவைத்தலும் மெய்ப்பாடுகளும் பற்றிய விபரிப்பை முன்வைத்தது.

அந்த மரபுகளை அடியொற்றியே "இரசிகர்" என்று அழைக்கும் மரபு வளர்ச்சியடைந்தது. அவர்கள் வழங்கியதை சுவைப்போராக இருந்தனர். கல்வி வளர்ச்சியின் போது பனுவல்களில் ஊடுதலையீடுகளை (INTERVENTION)மேற்கொள்ளல் இடம்பெறலாயிற்று. உரை யாசிரியர்களும் அந்த மரபில் வந்த பண்டிதர்மணியும் அந்தச் மரபில் வந்த பண்டிதர்மணியும் அந்தச் செயற்பாட்டினை மேற்கொண்டனர்.

பண்டிதமணியின் அறிவை அரவணைப்பில் வந்த கனக.செந்திநாதன் ஊடுதலையீடுகளை மேற் கொள்வதைக் காட்டிலும், வழங்கியதைச்சுவைக்கும் செயற்பாட்டை நவீன இலக்கியங்களை அடியொற்றி மேற்கொண்டார்.

ஒரு புறம் மரபுவழி இலக்கிய விசையோடும் இன்னொரு புறம் நவீன இலக்கிய விசைகளோடும் ஊடாட்டம் கொண்ட இருமை நிலையின் நீட்சி கனக செந்திநாதனிடத்துக் காணப்பெற்றது.

அக்காலத்தைய இலக்கியக் கல்வியில் ஆளுமைகள் பற்றிய முதன்மை பெற்றிருந்ததும் குறிப்பிடத் தக்கது. இலக்கியத்தின் நகர் திசை களை (TREND) நோக்காது. தனி ஆளுமைகளை அடியொற்றியே "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" என்னும் நூலினை (கனக.செந்தில் நாதன், 1964, அரசு வெளியீடு) எழுதினார்.

அத்தகைய தளத்தில் நின்றே பண்டிதமணி பற்றிய நூல் மற்றும் கவிஞர் மு.செல்லையா பற்றிய "திறவாத படலை" முதலாம் நூல் களை எழுதினார்.

ஆசிரிய கலாசாலைப் பாடத் திட்டத்தை அடியொற்றி எழுந்த



சந்தர்ப்பம் கூறல், அணிநலன்களைக் கூறல், சொற்சுவையோடு உறவாடுதல் முதலிய செயற்பாடுகள் பொ. கிருஷ்ணபிள்ளை, க.பொ.இரத்தினம், பண்டிதர் சச்சிதானந்தன், வித்துவான் க. வேந்தனார், பண்டிதர் சு.வேலுப்பிள்ளை, கனக செந்திநாதன் முதலியோரிடத் துச் சுவறி நின்றன.

செய்யுள் இரசனை முறைமையை கனக செந்திநாதன், சு.வே. ஆகியோர் சிறுகதை, நாவல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தியதுடன் அவர்களும் நவீன புனை கதைகளை எழுதும் முயற்சியை மேற் கொண்டனர்.

ஆக்க இலக்கியம் படைப்போரே திறனாய்வாளராகத் தொழிற்படும் மரபு, தமிழ்ச்சூழலிலே எழுகோலம் பெற்றது. ஆங்கில மொழி வழியாக உட்புகுந்த நவீனத்துவத்தின் வருகையோடு புதிய திறனாய்வு முறைகளும், மொழிபற்றிய மாற்று அணுகுமுறைகளும் இலங்கைத் தமிழ்ச் சூழலுக்குக் கிடைக்கப் பெறலாயின.

க.இ.சரவணமுத்து, ச.பஞ்சாட்சரசர்மா ஆகிய இரட்டையர்கள் "மாறும் இலக்கணம்" என்ற தலைப்பில் இலக்கண மாற்றம் பற்றிய உரையாடல் களை முன் வைத்தனர்(மறுமலர்ச்சி: கார்த்திகை *1947*, தை *1948*) இலக்கியம் மாற்றமடையாது என்ற கருத்துநிலையிலே தகர்ப்பு ஏற்படலாயிற்று.

மார்க்சியம், புனைவியம் முதலாம் கோட்பாடுகளின் பரவல் ஆங்கிலக் கல்வியினூடாக நீட்சி கொள்ள பேச்சு மொழிக்கும் ஆக்க இலக்கிய எழுத்துக்களுக்குமிடையே தொடர்பு வலுப்பெறலாயிற்று. இலங்கையர்கோன், க.தி. சம்பந்தன், சி.வைத்தியலிங்கம், சோ. சிவபாதசுந்தரம் ஆகியோர் தமது ஆக்கங்களில் பேச்சு மொழியைப் பயன்படுத்தலாயினர். தொடர்ந்து மறுமலர்ச்சிக் குழுவினரும் அதனைப் பயன்படுத்தலாயினர்.



பேச்சு மொழியைப் பயன்படுத்திய செயற்பாட்டில் முற்போக்கு எழுத்தாளர் பயன்படுத்தியமைக்கும் ஏனையோர் பயன்படுத்தியதற்குயிடையே வேறுபாடுகள் உண்டு. ஏனையோர் பேச்சு மொழியைச் செவ்விதாக்கிப்பயன்படுத்தினர்.

எடுத்துக்காட்டாக வரதரின் ஒருவசனத்தை வகை மாதிரிக்குக் குறிப்பிடலாம். "நான் பத்திரமாயிருக்கிறேன் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்"(மறுமலர்ச்சி 18.45.633) அந்த வசனம், யாழ்ப்பாணப் பேச்சு மொழியில் பின்வருமாறு காணப்படும்.

இருக்கிறேன் - இருக்கிறன்

கொள்ளுங்கள் -கொள்ளுங்கோ

அதேவேளை முற்போக்கு எழுத்தாளர்கள் பேச்சு மொழியைச் செவ்விதாக்கம்செய்யாது பயன் படுத்தினர்.

*1956* ஆம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டமும், அதனோடு தொடர்புபட்டு மீயெழுச்சி கொள்ளத் தொடங்கிய தமிழ்த்தேசிய இயக்கமும், இடதுசாரிகளின் ஆரம்ப காலச் செயற்பாடுகள் தமிழ்மற்றும் முஸ்லீம் தேசிய இனங்களுக்கு ஆதரவாக இருந்தமையும் தாய்மொழிக்கல்வியின் வளர்ச்சியும் இலங்கையின் தமிழ் இலக்கியத் திறனாய்வில் பரந்துபட்ட செல்வாக்குகளை ஏற்படுத்தின.

அக்காலகட்டத்தில் நிகழ்ந்த வாசகர் பெருக்கமும், மார்க்சிய எழுத்தாக்கங்களின் அறிமுகமும், இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்னர் தரிசிக்காத மாற்று விசைகளைத் தோற்றுவித்தன. தமிழ்த்தேசியம் இலங்கைத் தமிழ்த்தேசியமாக மாற்றம் பெறுவதற்கு முற்போக்கு எழுத்தாளரின் எழுத்துக்களும் திறனாய்வு வினைப்பாடுகளும் பங்களிப்புச் செய்தன.

தேசிய இலக்கியம், மண்வாசனை, இழிசனர் மொழிக்கு இலக்கிய அங்கீகாரம், சாதிய ஒடுக்குமுறையினைத் தகர்க்கும் எழுத்துக்கள், சமூக மாற்றத்துக்கான நடப்பியற் புனைவுகள் தடம் பதிக்கலாயின.

இலக்கியத்தில் சமூக நோக்கையும், சமூக மாற்றத்துக்கான கருவிகளுள் அதுவும் ஒன்றென்ற அழுத்தத்தையும் கொடுத்த திறனாய்வாளருள் பேராசிரியர்கள் க.கைலாசபதியும், கா.சிவத்தம்பியும் முக்கியமானவர்கள். மார்க்சிய பொருள் முதல்வாதத் தருக்கத்தை இலக்கிய ஆய்வுகளுக்கு அவர்கள் நேரடியாகப் பிரயோகித்தனர்.

*1960* ஆம் ஆண்டுக்கும் பின்னர் அவ்வகைத் திறனாய்வு எழுச்சி கொள்ளத் தொடங்கியது. அந்த எழுச்சியினூடே மார்க்சிய இலக்கிய நோக்கும் அழகியல் வாதமும் முரண்பாடு கொள்ளத் தொடங்கின.

அந்நிலையில் இரு சாராரிடத்தும் மட்டுப்பாடுகள் காணப்பட்டன. ஆக்க மலர்ச்சிப் பலம் குன்றிய நிலையில் மார்க்சிய வட்டத்துக்குள் நின்றவர்களின் எழுத்துக்கள் விதந்துரைப்புக்கு உள்ளாக்கப்பட்டமை மார்க்சியர்களின் அணுகுமுறையில் மட்டுப்படலாயிற்று.

மறுபுறம் மார்க்சிய நிராகரிப்புக்குரிய கருவியாக அழகியல் வாதத்தைக் கையில் எடுத்தோர் அழகியலுக்கு உரியவாறான வரைவிலக்கணம் கொடுக்க முடியாது திணறினர். எஸ்.பொன்னுத்துரை சிக்மன்



பிராய்ட்டின் அழகியல் தளத்தில் நின்று அழகியலை நோக்கினார்.

அவற்றின் பின்புலத்தில், மீட்டுருவாக்கம் செய்யப் பட்ட தமிழ் இலக்கியத் தளத்தி லிருந்து கனக செந்திநாதன் அழகியல் வாதத்தைத் தரிசித்தார்.

மார்க்சியத்தின் கலைக் பரிமாணங்களை ஏற்றுக் கொண்டு அதற்கும் அப்பால் பிரபஞ்ச நடப்பி யல் அழகை மு.தளையசிங்கம் வலியுறுத்தினார்.

நுஃமான், சண்முகம் சிவலிங்கம் முதலியோர் இலக்கிய ஆக்கத்தில் கருத்துநிலைப் பரிமாணங் களைக் காட்டிலும் அனுபவங்களே முதன்மை பெற வேண்டும் என்ற "அனுபவ வாதத்தை" அழுத்திக் கூறினர்.

ஆங்கில இலக்கிய மரபில் கவிதைத் திறனாய்வில் ஐ.ஏ.றிச்சார்ட்டினால் புடமிட்டுக் கூறப்பட்ட "செறிவுற்ற உணர்வுகளின்"(Feelings) விசாலிப்பை அடியொற்றி ஏ.ஜே.கனகரட்ணா இலக்கிய அழகியலை விளக்கலானார். அந்த அடிப்படையிலே தான் அவர் புஷ்கினதும் மாயகோவ்ஸ்கியினதும் கவிதைகளை ஒப்பு நோக்கினார்.

1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தீவிரமாக எழுச்சி கொள்ளத் தொடங்கிய தமிழ்த் தேசிய முகிழ்ப்பின் வழியாக இலக்கியங்களின் அழகியலைக் காணலும் நீட்சி கொண்டது. இன்னொருபுறம் பெண்ணியத் திறனாய்வும் வளர்ச்சி கொள்ளலாயிற்று.

இலங்கையின் இடதுசாரிகளிடையே நிகழ்ந்த தடுமாற்றங்களும், கமியூனிச சித்தாந்தப் பிளவுகளும், கமியூனிஸ்டுகளில் ஒருசாரார் முதலாளிய மக் களாட்சித் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டு மார்க்சியத்தை வலுவிழக்கச் செய்தமையும், முற்போக்கு எழுத்துக்களில் துல்லியமாக வெளிப்பாடு கொள்ளாத இடைவெளிகள் காணப்படுகின்றன.



மார்க்சியத்தில் நம்பிக்கை கொள்ளாதவர்களையும் முற்போக்கு எழுத்தாளர் தமது கருத்தியல் வளையத்துள் கொண்டு வந்தமை முற்போக்குச் சிந்தனைகளை நீர்த்துப் போகச் செய்தது.

தொடர்ச்சியாக நிகழ்ந்த இனக்கலவரங்களால் தமிழ்த்தேசிய இனம் பாதிப்புக்கு உள்ளாகிய நிலையும், அவற்றின் எதிர் விளைவு களாக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியமையும் அவற்றின் இலக்கிய விளைவுகளும் இலக்கிய வரலாற்று நோக்கிலும் சமூக உளவியல் நோக்கி லும் இன்னமும் விரிவான ஆய்வு களுக்கு உட்படுத்தப்படவில்லை. போர்க்கால இலக்கியங்களை ஆராய் வதற்கு முன்னர் நிலவிய பயப்பாடும், வரலாற்றைத் துணிந்து எழுதுவதற் குரிய எதிர்வினையாக இருந்தது.

புலம் சிதறியோரின் எழுத்துக் கள் ஆராயப்படும் உச்சநிலைகளைப் போன்று போர்க்காலப் படைப்புக்களின் ஆய்வுகள் இன்னமும் எட்ட வில்லை.

போருக்குப் பின்னரான காலப் பகுதியின் அவலமான அகவாழ்வின் பரிமாணங்கள் ஆய்வுகள் வழியாக இன்னமும் முழுமையான வடிவை எட்டவில்லை.

சமூக இருப்பினதும் அமைப்பினதும் அடியா தாரங்களையும் அதனோடு தொடர்புடைய அசைவியங் களையும் அவற்றுக்கும் மேலாதிக்கத்துக்குமுள்ள இணக்கங்களையும், நோக்குதல் இலக்கிய வளர்ச்சியும் வரலாறும் தொடர்பான ஆய்வுகளில் முக்கியமானது.

இலக்கியவளர்ச்சி, வரலாறு முதலாம் எழுத்துக்களில் தகவற்கையளிப்பே மேலோங்கி நிற்கின்றதேயன்று வரலாற்று வளர்ச்சியும் அசைவிய மும் இலக்கிய வடிவங்களிலே நிகழ்ந்த கூர்ப்பும் ஆழ்ந்து நோக்கப்படவில்லை.

எடுத்துக்காட்டாக கவிதையில் நிகழ்ந்த உள்ளடக்கக் கூர்ப்பை (Content evolution) பின்வரும் படி நிலைகளிலே நோக்கலாம்.

படிநிலை ஒன்று :

சோமசுந்தரப்புலவர், மற்றும் வித்துவான் வேந்தனார் பாடல்கள்

படிநிலை இரண்டு:

மகாகவி, மற்றும் முருகையனுடைய கவிதைகள்

படிநிலை மூன்று:

புதுவை இரத்தினதுரை மற்றும் சேரனுடைய கவிதைகள்

வளர்ச்சியும் வரலாறும் பற்றிய ஆய்வுகள் தகவலில் இருந்து கருதுகோள் உருவாக்கம், கோட்பாட்டு உருவாக்கம் முதலியவற்றை நோக்கி நகர்ந்து செல்வதே அறிகை நிலையில் முக்கிய மானவை.

ஆக, இலக்கிய விமர்சனங் களும் ஆய்வுகளும் தகவற்கையளிப் போடும் விபரிப்போடும் கட்டுப்பட்டிராது, அவற்றுக்கும் மேலான கோட்பாட்டு உருவாக்கத்தை நோக்கிய நகர் திசையைக் கண்டறிய வேண்டும். இலக்கியங்களின் அதீத பெருக்கமும் சிக்கலும் நிகழ்ந்து வரும் சமகாலத்தில் திறனாய்வும் அவற்றுக்கு முகம் கொடுத்து நிமிர வேண்டியுள்ளது.

முல்லைக்கோணேஸ்



# முகங்களோடு வாழ்தல்

தறுமன்ர வீட்ட விட்டு வெளிக்கிடும் போது மணி பத்தைத் தாண்டியிருந்தது. அவன்ரை வற்புறுத்தலாலதான் இவ்வளவு நேரமும் சுணங்க வேண்டி வந்தது.

"மச்சான் நான் வாற கிழம போயிடுவன். இனி எப்பெப்பவோ நாட்டுக்கு வாறன் எண்டு தெரியாது. வீட்ட போய் இப்ப என்ன செய்யப் போறாய் கொஞ்ச நேரம் இரன் கதைப்பம்."

சொல்லிக் கொண்டே உள்ளே இருந்து விஸ்கிப் போத்தல் ஒன்றோடு வந்தான். அவன்ர அன்பான வேண்டுதலை விடவும் விஸ்கிப் போத்தலக் கண்டதும் வீட்ட போற எண்ணத்தில் கொஞ்சம் தாமதம் விழுந்தது. அதை விடவும் சித்திரான்ர கதையத் துவக்கி விட்டதும் நேர காலம் தெரியாமல் இவ்வளவு நேரம் இருக்க வேண்டி வந்திட்டுது.

அவன் போத்தல திறக்கும் போதே உடம்பு ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்தது. இரண்டு கிளாஸ்களிலும் ஊத்தும் சத்தமே தொண்டைக்குள் இறங்கியது போல ஒரு கிளுகிளுப்பு. அவன்தான் முதலில் கிளாசைத் தூக்கினான். எனக்கு முன்பாக நீட்டி "சியேஸ்" என்றான். நானும் "சியேஸ்" சொல்லி விட்டு ஓரே மூச்சில் விழுங்கினேன். அவன் அதில் அரைவாசியைக் குடித்து விட்டு ரீப்போவில் மீதியை வைத்தான்.

"சிகரெட் பத்துறியோ என்று கேட்டுக் கொண்டே வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த "மல்பொறோ" சிகரட் பக்கற்றை நீட்டினான்.

"வேண்டாம் மச்சான். தண்ணி எவளவும் அடிப்பன் இது பழக்கமில்ல" என்றேன்.

அவனும் வற்புறுத்தவில்லை. மீதி வைத்திருந்த விஸ்கியைக் குடித்துவிட்டு சிகரட்டை உதடுகளில் வைத்து லைற்றரை அழுத்தினான். லைற்றர் வெளிச்சத் தில் அவனது முகம் சரியாய் நீக்குறோவைப் போலவே இருந்தது. கரிய நிறமும் முடியைக் கட்டையாக வெட்டியிருந்த விதமும் ஆபிரிக்கனைப் போலவே தோற்றம் காட்டியது.

"என்ன சொல்லுது சரக்கு?" என்றான்.

"பேந்தென்ன ஜெகஜோதியாய் இருக்கு" என்று நான் சொல்லும் போதே அடுத்த பக்கையும் விட்டான். இம்முறை நான் கிளாசை எடுத்து வாயில் வைக்கும் போது

"அப்ப உன்ரை பழைய ஆள் எங்கேடா இப்ப இருக்கிறாள்" என்றான்.

உதட்டில் வைத்த கிளாசில் இருந்து ஒரே மூச்சாக இரண்டாவது மிடறும் போன போது உள்ளூர ஒரு சொர்க்கம் மிதந்து வருவது போல இருந்தது.

"ஆர மச்சான் கேக்கிறாயடா?" என்றேன்.

"அப்ப என்ன வேறயும் ஆரேம் விரும்பியிருந்தனியே?" சொல்லியபடி என்னை ஊடுருவுவது போல ஒரு நமட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

நான் குனிந்தபடி அவன் வைத்திருந்த மிக்சரில அள்ளி ஒரு வாய் போட்டுக் கொண்டேன். உள்ளுக்குள் போன விஸ்கி அடி வயிற்றில் ஒரு எரிவு காட்டிப் பின் மேலெழுந்து உச்சி வரை ஒரு சிலிர்ப்புக் காட்டியது.

தறுமன் சிகரட்டை உள்ளிளுத்துப் புகையை விடும் போது அது பரவி காற்றில் கரைந்தது. அவன் சித்திராவத்தான் கேட்கிறான் என்று தெரிந்தது. அவன் நோர்வேக்குப் போக முதலே சித்திராவுக்கும் எனக்கும் இருந்த தொடர்பக் கொஞ்சம் அறிந்திருந்தான். இப்ப முழுசாய் அறியிறதுக்குப் பிளான் பண்ணீட்டான் போல. எனக்கும் அவளுக்கும் இருந்த நேசத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக என்னட்ட இருந்து வாங்கிக் கொண்டிருந்தான். நானும் உலக்கயன் மாதிரி மீதியில்லாமல் ஒவ்வொன்றாய் அவிட்டு விட்டுக் கொண்டிருந்தன்.

உள்ளுக்குள் இறங்கிய விஸ்கி எதையாவது கடிக்க வேண்டும் போல பசியை சற்றுக் கிளப்புவதாக இருந்தது. மிக்சரை அள்ளி வாயில் திணித்துக் கொள்ளும் போது சிரிக்க வேண்டும் போலிருந்தது. சித்ராவ நினைக்கும் போது அழ வேண்டும் போலுமிருந்தது.

சித்திராவக் கடைசியாய் பார்த்த அந்த இரவைத் தறுமனுக்குச் சொன்னன்.

என்னை ஒருக்கால் அவளின்ரை வீட்டுக்கு முன்னால நிக்கிற ஆலமரத்தடிக்கு வரச்சொல்லி றஞ்சனிட்டச் சொல்லி விட்டிருந்தாள். நானும் பயந்தபடி போனன். இரவு எட்டு மணியிருக்கும். முன்நிலவாயிருந்தாலும் ஆல மரத்துக்குக் கீழ் கும்மிண்ட இருட்டு. ஆலம் விழுதுகள் முதுகில் ஊரவே ஆரோ தொடுவது போல பயந்து பயந்து நிண்டன். மச்சான். சித்திரா படலயத் திறந்து அங்கால யும் இஞ்சாலயும் பாத்திட்டு றோட்டத் தாண்டி விறுக்கு விறுக்கெண்டு வந்தாள். எனக்கு உதறத் துவங்கீட்டுது. முன்னப்பின்ன பொம்பிளப் பிள்ளையளோட கதைச்சறியன். இவள் என்னடா எண்டால் இருட்டுக்க வாறாள். ஆருங் கண்டால் கத கந்தல்தான். ஐயா உரிச்செடுத்துப் போடுவேர். அவளோட கடிதத்திலயும் போகேக்க வரேக்க அவள் சிரிக்கிறதும் கைகாட்டுறதும் தான் எங்கட தொடர்பாடல். இதென்னடா எண்டால் இருட்டுக்க வந்து நிக்கிறாள். எனக்கு வேர்த்து விறுவிறுத்தது. வந்ததும் திரும்பி வீட்டுப்பக்கம் ஆரும் தென்படுகினமோ எண்டு பாத்துப் போட்டு என்ர கையப் பிடிச்சாள். எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. அவளது கை மிருதுவாக என்மேல் பட்டதும் எனன சுகமாக இருந்துது. மச்சான் ஆனா அத ரசிக்கிறதுக்கோ அனுபவிக்கிறதுக்கோ அந்த நேரம் எனக்கு பயத்திலயே முடிஞ்சு போயிற்று.

"என்ன சித்ரா... ஏன்.. வ...ரச் சொன்னனீர்?"

நாக்குத் தடுமாறி தொண்ட காஞ்சு சொற்கள் வர மறுத்தது.

"உங்கட கடிதத்த அக்கா எடுத்துப் பாத்திட்டா. முதல்லயே அவவுக்குச் சந்தேகம் இருந்தது. நீங்கள் வைக்கில்ல போகேக்க நான் கை காட்டினத ஒருக்கால் கண்டிட்டா"

என்ன செய்யிறதெண்டு படபடத்தாள். கொஞ்சம் இடைவெளி விட்டு பிறகும் சொன்னாள்.

"அக்கா, அம்மாவுக்கும் சொல்லிப் போட்டா. மாமாவுக்கும் இதத் தெரியப்படுத்தப் போறாவாம் எண்டு வீட்ட ஒரே சிக்கலாய் இருக்குது. என்ன செய்யிறதெண்டு தெரியாமல் கிடக்கு"

எனக்கு ஒரே குழப்பமாய் இருந்தது. கையும் ஓடேல்லக் காலும் ஓடேல்ல.

"சித்திரா! நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ... இப்ப ஆரங் கண்டாலும்... நீங்கள் வீட்ட போங்கோ... நாளைக்கு நான் என்ன மாதிரியெண்டு சொல்லுறன்"

தறுமன் சுவாரஸ்யமாய்க் கேட்டுக் கொண்டிருந்தான். இன்னுமொரு "பக்" அடித்தால் நல்லாய் இருக்கும் போல இருந்தது.

"ஊத்து மச்சான்" என்றேன்"

அவன் விஸ்கியக் கிளாசில ஊத்தி நீட்டினான். வாங்கியபடியே சொன்னேன்.

"எத்தினயோ பேர் வெளிநாடு போகேக்க சொன்னாங்கள் மச்சான், போன பிறகு மறக்காமல் உனக்கு ஏதாவது "ஹெல்ப்" பண்ணுவம் எண்டு. ஆனா ஒருதரும் ஒரு போன் கூட எடுக்கிறேல்ல மச்சான். நீ ஒராள்தான் இன்னும் மறக்காமல் இருக்கிறாய்"

"பிறகென்ன நடந்தது?" என்று சித்ராவின் விசயத்துக்கே வந்தான்.

"பிறகென்ன மச்சான். பயத்தில அவளின்ர பக்கம் ரெண்டு கிழமயாய்த் தல வைச்சுப் படுக்கேல்ல. நான் ஒதியமலைக்குப் போய் குவாட்டஸ்ஸில நிண்டு கொண்டன். ரெண்டு கிழம கழிச்சு சிலாவத்தைக்கு வந்தன். சித்ராவப் பார்க்க வேணும் பொல இருந்தது. சைக்கில எடுத்துக் கொணடு அவளது ஒழுங்கையால் போனன். வீட்டில அவளின்ர சிலமனில்ல. சந்திக்குப் போய் ஆச்சியின்ர கடையடியில றஞ்சனாக்கள் நிப்பாங்களோ எண்டு நினைச்சபடி சைக்கிலை உழக்கும்போது சித்ராவின் அக்கா எதிரே வந்தாள். நான் அவளைக் கடக்கும் போது என்னை ஒரு மாதிரியாகப் பாத்துக் கொண்டு போனாள். அந்தப் பார்வேல அவள்

என்னை ஏளனமாகப் பாத்தாளோ. அல்லது கோபத்தோடு பார்த்தாளோ, இல்லேண்டா ஏமாந்த பேக்கிலாய் எண்டு நினைச்சாளோ எண்டு சொல்லத் தெரியாமலிருந்தது.

நான் நினைச்ச மாதிரியே ஆச்சியின்ர கடையடியில யாரோடயோ கதைச்சக் கொண்டு றஞ்சன் சைக்கிலில் இருந்தபடி ஒரு காலை நிலத்தில் உன்றி நிண்டான். எங்கட விசயம் அவனுக்கும் ஓரளவு தெரியும். வீடும் அவளின்ர வீட்டுக்கு நாலு வீடு தள்ளி யிருந்தது. கிட்டப்யேபர் அவனிட்டக் கதய விட்டபோது அவன் சொன்னது எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது. சித்ராவ அவளின்ரை மாமா வந்து தன்னோட நிண்டு படியெண்டு திருகோணமலைக்குக் கூட்டிக் கொண்டு போயிட்டாராம், என்றான்.

எந்த ஒன்றும் பக்கத்திலிருக்கும்போது அதின்ர அரும தெரியாதாம், தூரத்திலோ அல்லது கை நழுவிப் போகும் போதோ தான் அதின்ர அரும தெரியுமாம், எண்டு ஐயா அடிக்கடி சொல்லுவார். அது போல அவள் ஊரை விட்டுப் போனபோது தான் அவள் எனக்குத் தேவதையாகவும் என்னோடயே அவள் இருக்க வேண்டும் போலவும் இருந்தது.

இத நான் சொல்லும் போது எத்தனையோ வருஷங்கள் கடந்து விட்டிருந்தாலும் குரலில் ஒருவித தளம்புதலும் கண்களில் கண்ணீர் தளும்பியதையும் தறுமன் கண்டு கொண்டான் போல.

"பொறு மச்சான் ஒரு "பக்" ஒண்டு ஊத்துவம்" என்றான்.

எனக்கும் அது தேவைபோலவேயிருந்தது. இரண்டு கிளாஸ்களிலும் முன்னைய தடவைகளைவிட இம்முறை கூடவே நிரப்பினான். நான் எதுவும் கலக்காமலே ஒரே மிடறில் விழுங் கினேன். இப்போது ஒரு வித மாய உலகத்தில்இருப்பது போலவும், தறுமனின் குரல் எங்கோ குகையில் ஒலிப்பது போலவும் இருந்தது.

"பிறகென்ன மச்சான் நடந்தது?"

தறுமனின் குரல் சீரற்றுக் கேட்டது.

"பிறகென்ன மச்சான் அவள் எப்பிடியாவது எனக்குக் கடிதம் போடுவாள் எண்டு பாத்தோண்டிருந் தன். ஆறேழு மாதங்களாய் ஒரு தொடர்பும் இல்ல. நானும் கொஞ்சக் காலமாய் ஒதியமலையிலேயே நிண்டு கொண்டன். பிறகு கேள்விப்பட்டன், அவளத் திருகோணமலையில அவளின்ரை மாமாட மகனுக்குக் கலியாணம் செய்ய முடிவெடுத்திருக்கிறார்களாம் எண்டு"

தறுமன் இடையில் குறுக்கிட்டான்.

"அப்ப அவளுக்கும் விருப்பமிருந்ததாமோ?"

"ஓமாம் எண்டுதான் கேள்விப்பட்டன். பெடியன் பிறிமா பக்ரறியில வேலயாம்"

"அப்ப அதுக்குப் பிறகு நீ அவளக்காணேல்ல?"

"இல்ல மச்சான், அந்த இரவு கடைசியாய்க் கண்டதுதான்"

கொஞ்ச நேரம் இருவரும் எதுவுமோ பேசவில்ரை. அமைதி மிகவும் குரூரமாக இருந்தது. விஸ்கியும் காணும் போல இருந்தது. அவனிட்ட இருந்து வெளிக்கிடக் கொஞ்சம் சுணங்கித்தான் போட்டுது. மனிசி வேற கத்தப் போறாள்.

சின்னக் குளத்தில் சம்முக்கோழிகள் "குவிக்... குவிக்" என்று ஒலியெழுப்பியபடி இருந்தன. இராப்பூச்சிகளின் சத்தம் ஒருவித பயத்தைத் தருவதுமாய் கேட்டுக் கொண்டேயிருந்தது. இப்போது பனைகளின் மேல் நிலவெழுத்து பிரகாசித்தது. காற்று மென்சுதல் கொண்டு உரசிப்போனது. தண்ணீரில் நிலவின் விம்பங்கள் கோடு கோடாய்ச் சிதறின. கரை யில் இருந்து ஆட்காட்டி மூன்று ஒலியெழுப்பியபடி எழுந்து பறந்தது. சம்புகளில் இருந்து கொக்குகளும் சம்புக் கோழிகளும் சிறகடித்துக் கலைவு கண்டன.

சந்தியைக் கடந்து ஐந்து நிமிச நடை நடந்தால் வீடு வந்து விடும் தூரமிருக்கும்போது சிறுநீர் கழிக்க வேண்டும் போலிருந்தது. பனைமரமொன்றின் மறைவில் சென்று விட்டுத் திரும்பும்போது நான்கு சைக்கிள்களில் ராணுவத்தினர் எதிரே வந்தார்கள். இரவென்பதால் சற்றுப் பயம் நெஞ்சில் ஊரத் தொடங்கியிருந்தது. வந்தவர்களில் ஒருவன்,

"ஹவுத" என்றான்.

சிங்களம் பேசத் தெரியாவிட்டாலும் அவன் கேட்பது புரியக் கூடியதாக இருந்தது.

"நான் என்ர பிறண்டின்ர வீட்ட போய் வாறன் சேர்... கொஞ்சம்லேற்றாயிட்டுது" என்று குழைந்தேன்.

மற்றவன் எனது கதையில் நாத்தடுமாறியதோ அல்லது விஸ்கி மணம் வீசியதோ.

"பீலாத?" என்றான்.

என்னைக் குடித்திருக்கிறியோ என்றுதான் கேட்கிறான் என்பது புரிந்தது.

"ஓம் சேர் பிறண்ட் நேர்வேல இருந்து வந்திருக்கிறான் பார்ட்டியொன்று அதுதான் கொஞ்சம் சுணங்கீட்டுது" என்றேன்.

"பார்ட்டி?" என்று முறைத்துப் பார்க்கிறான் என்பது இருட்டிலும் விளங்கியது.

சிகரட்டைப் புகைத்தபடி பின்னால் நின்ற ஒருவன் கொஞ்சம் தமிழில் சொன்னான். "ராவுல நீங்க போகக்கூடாது. பெறகு கேம்பில கொண்டு போய் விசாரிக்க வேணும் சரியா... இக்மண்ட யண்ட" சொல்லி விட்டு நால்வரும் தங்களுக்குள் ஏதோ சிங்களத்தில் கதைத்துக் கொண்டே விலகிப் போனார்கள்.

அவர்கள் விலகிப் போன போதும் நீண்ட நேர மாக மனதில் ஒருவித உதறல் இருந்து கொண்டே யிருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு தவபாலனின் நினைவு வந்தது. இப்படித்தான் ஒரு முறை ஒதிய மலைக்கு எனது குவார்ட்டஸிற்கு வந்திருந்த தவபாலன் குளக்கட்டையும் இடிந்த கோயிலையும் போட்டோ எடுத்து விட்டுக் காட்டுக்குள் இருக்கும் ஒதியமலைக் குன்றைப் படம் எடுப்பதற்காகக் காட்டில் இறங்கி

பற்றைகளையும் கொடிகளையும் விலக்கிக் கொண்டு சென்ற போது ரைபிளோடு போராளிகள் இருவர் இடைமறித்தார்கள். அதில் ஒருவன்,

"அண்ண நில்லுங்கோ" என்றான்.

நாங்களிருவரும் அந்த இடத்தில் அவர்களை எதிர்பார்த்திருக்கவில்லை. மற்றப் போராளி கேட்டான்,

"இஞ்ச எங்க போறியள்?"

தவபாலன்தான் பதில் சொன்னான்,

"நாங்கள் இந்த ஒதியமலைக் குன்றை ஒருக்கால் படமெடுக்க வேணும் அதுதான் போறம்"

"அங்க எல்லாம் போகேலாது வந்த வழியில திரும்பி நடவுங்கோ ... இந்த இடங்களுக்கெல்லாம் நீங்கள் வரக்கூடாது... எங்கட முக்கியமான பொயின்டு கள் இருக்கிற இடம். எந்தநேரமும் ஆமி வரலாம். அதவிட எங்கட முகமுகள் இருக்கிற இடங்களுக்கெல்லாம் கண்ட பாட்டில வரக்கூடாது" என்றான் உரத்த தொனியில்

தவபாலன் விடவில்லை.

"தம்பி ஒரு நாட்டில இருக்கிற எந்தப் பிரஜை யும் எந்த மூலைக்கும் போறதுக்கு உரிமை இருக்கு"

போராளியில் ஒருவன் சிறியவனாக இருந்தாலும் காரமாகவே கதைத்தான். "அண்ண அப்ப அனுராதபுரக் காட்டுக்க போய் போட்டோ எடுங்கோ அங்க இதவிடப் பழைய காலக் குகைகள் மலைகள் குன்றுகள் எல்லாம இருக்கு."

தவபாலனுக்குக் கோபம் வந்து விட்டதை அவனது கைகால்களிலும் கதையிலும் ஏற்பட்டிருந்த படபடப்பில் இருந்து அறிந்து கொண்டேன்.

"தம்பி எங்கட மண்ணிலயே எங்கள விடுறியளில்ல. அவங்கட காட்டில அவங்கள் விடுறேண்டவங்களே. நாங்களும் இந்த மண்ணில பிறந்து வளர்ந்தாக்கள் தான்... நாங்கள் என்ன உங்கட கேம்ப றெக்கியெடுக்கவே போறம்"

அவர்களுக்கும் சற்றுக்கோபம் உண்டாகி யிருந்தது போல அதில் ஒருவன் சொன்னான் "நீங்கள் திரும்பிப் போகேல்லயெண்டால் கேம்புக்குக் கொண்டு போய் பொறுப்பாளரிட்டத்தான் விட வேண்டி வரும் சொன்னாக் கேளுங்கோ..."

அதற்கு மேலும் அவர்களோடு கதைத்துப் பிரயோசனமில்லை என்பது தெளிவாகியது. நான் தான் சொன்னேன்.

"தவா வாங்கோ திரும்புவம். ஏன் இவங்களோட நிண்டு வீணாய் வாக்குவாதப்படுவான்"

தவபாலனுக்குத் தான் வந்த நோக்கம் நிறை வேறவில்லையே என்ற ஆதங்கம் மனசில் அலைந்தபடி யிருக்க இருவரும் திரும்பினோம். அது தொண்ணூறாம் ஆண்டளவில் நடந்த சம்பவமாக நினைவிலிருந்தது.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு தவபாலன் நீண்ட காலங்களாக என்னைச் சந்திக்கவேயில்லை. பிறகு 2008 இல் செல்லடியியில் முள்ளிவாய்க்காலில் இறந்தான் என்று கேள்விப்பட்ட போது மிகவும் துக்கமாக இருந்தது.

இப்பொழுது தெருவில் எதுவித நடமாட்டமு மில்லை. நான் மட்டும் தனியாக நடந்து கொண்டி ருந்தேன். சந்தியை அண்மித்தபோது நிலவு உச்சியில் நின்றது. நிலவொளியில் மரக்கிளைகள் அசையும் போது ரம்மியமாக இருந்தது. ஏனோ இன்று அதை ரசிக்க மனம் உந்தவில்லை.


காற்றும் சுயாதீனமாகக் கையசைத்துப் போவது போல வீசிக் கொண்டிருந்தது. சந்தியில் கொஞ்ச மாடுகள் மிக அமைதியாகக் கிடந்த வண்ணம் அசை போட்டன. அவைகளில் மொய்த்திருந்த இலையான்களை வால்களால் அசைத்து அசைத்துக் கலைத்தவாறு அசைபோட்டன.

---

# குரல்கொடுங்கள்

விவேகானந்தனூர் சதீஸ்

சுற்று மதிற் சுவர்களுக்குள்
சுதந்திரம் பறிக்கப்பட்ட
சிற்றறை கம்பிகளுக்குள்
சிறகொடிந்த பறவைகளாய்
துர்க்கித்து தொழுகின்றோம்
துயருற்று அழுகின்றோம்
சுகபோகம் சுகிப்பதற்கல்ல
சொந்தங்கள் மீள்வதற்கு...
இனவிடுதலை கோரிய நாம்
புலன்விசாரணைப் பொறிமுறையில்
வார்த்தைகள் தடுமாற
வலிகளால்துடித்தோம்
விம்மினோம் விசும்பினோம்
வேதனைகள் அனுபவித்தோம்
வேண்டாத வார்த்தைகளை
வேண்டியதாய் ஏற்றுக் கொண்டோம்...
பொழுது புலருமென்று
பல வருடம் விழித்திருந்தோம்
வடம்பிடித்து உறவுகளே
விடுதலைக் குரல் கொடுங்கள்!



உன் கதைகளில் என் பால்யக்
காலங்களில் இறந்து போயிருக்கிறேன்
உன் விரல் பிடித்து எழுதிய கவிதைகள்
உணர்வை கண்டு உன் விரல்களைத்
தாள்கள் சிறிது நேரம் பிடித்துக் கொள்ளும்
நீ எழுதும் கவிதை  உணர்வில் கசியுமடா!!

ஜன்னலொன்றில் படர்ந்திருக்கும்
அதிகாலை பனித்திவலைகள் உன்
இழப்பை போன்று கனம் தாங்காமல்
மெதுவாக இறங்கும்
கவிஞனே உன் பிரிவினது கொரூரம்
எரியும் கோடையில் பயணிக்கும் வண்டி
மாடுகளின் நுகத்தடியாக அழுத்தும்

ஏன் இறந்தாய் இப்போது எங்கிருக்கிறாய்?
என் கலாபக் கவிஞனே

நீ விடுதலையை எழுதினால் விடுதலை
விடுதலை அடையும் உன் தமிழ் ஈழம்
உன் சொந்த தேசத்தை இழந்த சகுனப்
பொழுதுகளை நீ தேட சென்று விட்டாயோ?

நீ வானத்தை பிளந்தக் கதையை
சொன்னாய்  இன்று வானம் எப்படி
பிளக்கும் என்பதை உன் பிரிவில்
காண்கிறேன்

உனக்கென்று சொந்தம் கொள்ள
தேசமில்லை அதை நீ சொந்தமாகவும்
கொள்ளவில்லை
யாருடைய கைகள் செய்த சதி இது??

ஒரு அரசனுக்கு தெரியும் எதை செய்ய
வேண்டும்  எதை செய்யக் கூடாதென்று
உனக்கும் தெரிந்திருந்தது அதை செய்தாய்

ஒரு விறகு வெட்டியின் கோடரியைப்
போல பெறுமதியானது
வேறெதுவுமில்லை பட்டமரத்தையும்
வெட்டும் பச்சை மரத்தையும் வெட்டும்
உன் கவிதைகளே கோடரி!!

நல்லதொரு மனம் உனக்கு என்று
உன் தோழர்கள்
அழுகிறார்கள் அதற்கு
உன் அகமும் முகமும் சாட்சி!!
உன்னைச்சுற்றி வெளிநாட்டுப் பூக்கள்
இருந்தன
உன்னைச் சுற்றி நயாகரா ஓடியது



# உன் கவிதைகளில் இறக்கிறேன் விடுதலை கவிஞன் செழியன் அவர்களுக்கு பேரஞ்சலி

**- எஸ்தர் விஜித்நந்தகுமார் -**

பணம் கையில் எப்போதும்
பன்னாட்டு வாத்தியங்கள் இருந்தது
விலையுயர்ந்த மது உனக்கு பறிமாறப்பட்டது
உன் பக்கத்தில் ஆயிரம் பேர் இருந்தார்கள்
நீயோ உன் காயமடைந்த இதயத்தையும்
உன் கவிதைகளையும்
வைத்துக்கொண்டு தனித்திருந்து
புழுதி நிறைந்த தெருவையும் உன்
தந்தை நடந்த பாதையையும் பனம்பழம்
விழும் சத்தத்தையுமே
நினைத்துக்கொண்டிருந்தாய்
நீ மீண்டும் வராத சூரியன்
மறைந்துவிட்டது உண்மைதான்
உன் வெளிச்சக்கிரணங்களை
எழுத்துக்களாய் உன் மக்களுக்கு
வைத்துவிட்டு போகிறாய்
ஒற்றைக் காலிழந்த கதிரையாக மனம்
மட்டும் இப்போது!!

விடுதலைக் கவிஞன் செழியனுக்கு
வீராதி வீர வணக்கங்கள்
கற்களற்ற நதியாக நீ எம்முள்ளே
நகருவாய்!!
நீயொரு அமராகாவியம்



# மீட்பார்களின் பயணமும் ஒழுங்கமைவின் சிதைவுகளும்

## பார்த்தீனியம் நாவலை முன்வைத்து

மிகைப்படுத்தப்பட்ட முற்கற்பிதங்களுடனும் ஒற்றைப் பரிமாணத்தினூடாகவும் திட்டமிடப்பட்ட முறையில் வரலாறு புனைவினூடாக மீளுருவாக்கம் செய்யபடும் போது மனதின் நோக்குக்கும் பார்வைக் கோணத்துக்கும் ஏற்ப வரலாற்று நிகழ்வுகள் தவிர்க்கப்படுவதுடன் விடுபடுதல்கள் இயல்பாகவே எழுகின்றன. வரலாறு தனிமனித விதந்தேத்தலையும் துதிபாடலையும் மையப்படுத்தி எழும் போது வரலாறு புனைவாக மாற்றுருவாக்கம் செய்யப்படுமேயன்றி படைப்புருவாக்கம் எச்சந்தர்ப்பத்திலும் வரலாற்றின் புனைவாக அமையாது என்பது வெளிப்படை. இச்சட்டக வெளிக்குள் தன்னைப் புதைத்துக்கொண்ட வெளிவந்த நாவலே கலைவாணி இராஜகுமாரன் என்னும் தமிழ்நதியால் எழுதப்பட்ட பார்த்தீனியம் நாவலாகும்.

போராட்ட வரலாறு குறித்த பன்முகப்படுத்தப் பட்ட ஆழமான புரிதலின்மையும் புலி அரசியலின் பாற் கொண்ட அதீத ஈடுபாடும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய விடுதலை இயக்கப் போராளிகள் குறித்த எதிர்ப்புணர்வும் நாவலின் இயங்குவெளியைச் சிதைத்து விடுகின்றன. ஈழப்போராட்டத்தின் உறுதிக் கட்டுமானம் சிதையத் தொடங்கிய காலவெளியை மீள்வாசிப்புக்குட்படுத்தும் போது அவை ஆழமாகப் பரிசீலிக்கப்படவேண்டும். கொள்கைத் திட்டங்களை வரையறை செய்து கொண்டு வரலாற்றை நோக்காது மனிதநேயப் பார்வையுடன் வரலாற்றுத் துயர்களை, இழப்புக்களை, சம்பவங்களை இயல்பான கோணத்தில் நேர்த்தன்மையுடன் நோக்கி ஈழத்து அரசியல்

சி.ரமேஷ்

வரலாற்றை மீள்வாசிப்புக்கு உட்படுத்தவேண்டும். துயர் கவிந்த தமிழ் மக்களின் சிலுவைப்பாடுகளின் வெளிப்பாடுகள் ஒரு பக்கச் சார்பாக நோக்கப்படும் போது வரலாற்றுப் புனைவொன்றின் பிரதி தன்னியல் பிழந்து ஒற்றைப்பரிமாண அரசியலுக்கூடாக முகம் பதிக்கும் என்பதற்குத் தக்கசான்று தமிழ்நதியின் பார்த்தீனியம் ஆகும்.

சூரியன் தனித்தலையும் பகல் எனும் முதல் தொகுப்பின் மூலம் தமிழ் இலக்கிய உலகில் அடையாளங் காணப்பட்ட கலைவாணி இராஜகுமாரன் என்னும் தமிழ்நதி *1996* இலிருந்து கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்களை எழுதி வருபவர். இறுதியாக தமிழ்நதியால் எழுதப்பட்ட "பார்த்தீனியம்" *1983*க்குப் பிற்பட்ட ஈழத்தினை குவிவு படுத்தி எழுதப்பட்ட நாவலாகும். குறிப்பாக *1987* ஒப்பந்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கை, இந்திய இராணுவத்தால் ஈழத்தமிழர் எதிர் நோக்கிய அவலங்களை வெளிப்படுத்தும் வகையில் எழுதப்பட்ட இந்நாவல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் எழுச்சியையும் இச்சூழலில் அவர்கள் எதிர் கொண்ட துயர்களையும் பேசுகிறது. ஒரு பக்கசார்பு மனோ நிலையில் எழுதப்பட்ட இந்நாவலில் பெரும்பாலான பகுதிகள் விபரணங்களாகவே காணப்படுகின்றன. தமிழ் மக்களுக்கு இந்திய இராணுவம் செய்த அநீதிகளையும் அவர்களின் துணையுடன் மாற்றுக் குழுக்களால் அரங்கேற்றப்பட்ட சகோதரப்படுப்கொலைகளையும் நாவலில் சம்பவக் கோவையாக்கி ஆவணப்படுத்த விளைவது அவரின் சார்புநிலை மனோ இயங்கியலின் விளைவெனக் கூறினாலும் நாவலில் எடுத்துரைக்கப் பட்ட சம்பவங்களோ, நிகழ்வுகளோ பொய்யில்லை. இந்திய இராணுவத்தின் அநாகரிகப் போக்கால் வடக்கு, கிழக்கு மக்கள் எதிர் கொண்ட இன்னல்களையும் இந்தியாவுக்கு எதிரான தமிழ்மக்களின் மனோ நிலை மாற்றங்களையும் அப்பட்டமாக புனைவற்று தமிழ்நதியின் நாவல் வெளிப்படுத்துகிறது. நாவலில் சித்திரிக்கப்படும் பன்னிரண்டு நாள் உண்ணாவிரதப் போராட்டத்தின் முடிவில் இருபத்தி மூன்று வயதில் திலீபனின் உயிர் பறிக்கப்பட்டதை அடுத்து தமிழ் மக்களின் நம்பிக்கைகள் சிதறு தேங்காய் போல சில்லுச் சில்லாகச் சிதறிப் போனதையும் நாவல் அருமைநாயகத்தினூடாக சித்திரித்துச் செல்கிறது. ஆயுதக்களைவு, ஆட்கடத்தல், இயக்கங்களுக்கிடையிலான மோதல், பிரம்படிப்படுகொலை முதலான விடயங்களை தமிழ்நதியின் நாவல் பேசினாலும் அவை உணர்வுத் தளத்தில் விபரிக்கப்படவில்லை. பக்கச் சார்பற்ற நிலையில் ஈழத்தில் நிலைகொண்ட இந்திய இராணுவச் சூழலை சயந்தனின் ஆறாவடு ஏலவே வெளிப்படுத்தியிருந்த நிலையில் தமிழ்நதியின் இந்நாவல் ஈழத்தமிழர்களின் பொதுமனோநிலையில் மாற்றியக்கங்கள், இராணுவம் குறித்தான எவ்வகையான கற்பிதங்கள் உண்டோ அவை குறித்தான சார்பு நிலைப் பதிவுகளாகவே வெளிப்படுகிறது. இயக்கங்




களுக்கிடையிலான மோதல்களை நாவல் வெளிப்படுத்தினாலும் அம்மோதலுக்கு அடிப்படையாக அமைந்த சம்பவங்கள் குறித்த பதிவுகளையோ போராட்டத்தின் உட்சிடுக்குகளையோ வெளிப்படுத்தவில்லை.

பாவற்குளத்தில் வசிக்கும் குறும்புக்கார மாணவர்களில் ஒருவனான வசந்தன் தன் காதலியான வானதியைப் பிரிந்து தவக்குமாரன், சத்தியன் வில்சன், சிதம்பரம் முதலான பதினொருவர்களுடன் இந்தியா சென்று ஆயுதப் பயிற்சியை மேற்கொள்கின்றான். வசந்தன் பரணியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஐந்தாவது படையணியில் ராதாவின் மேற்பார்வையின் கீழ் பயிற்சியை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பி அரசியல் வேலைகளிலும் இயக்கப் பணிகளிலும் ஈடுபடுகிறான். இயக்கத்தின் மீது பற்றுறுதியும் தலைவர் மீது பேரன்பும் கொண்ட பரணி மக்கள் மீது நேயம் கொண்ட அரசியல் போராளியாகவும் பல்வேறு சமர்களில் பங்கு கொண்ட விடுதலை வேங்கையாகவும் உருமாறி ஈற்றில் இயக்கத்தை துறந்து காதலும் கைகூடாத நிலையில் உதிரியாகி தனித்து விடப்படுவதுடன் நாவல் நிறைவு பெறுகிறது. பரணி வானதி ஆகிய இரு பிரதான பாத்திரங்களின் ஊடாட்டத்தை மையச்சரடாகக் கொண்டு நாவலை நடத்திச் செல்லும் தமிழ்நதி இந்திய இராணுவத்தின் காலப் பகுதியில் செய்யப்பட்ட கடுமையான சித்திரவதை கள், குற்றச் செயல்கள், பாலியல்ரீதியான குற்றங்கள், கொலைகள் என்பனவற்றைப் பேசுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறார். பார்த்தீனியம் என்ற பெயர் சூட்டப் பெற்றமையும் இந்நோக்கத்தின் விளைவாகும். புலிகளை அழிப்பதன் பொருட்டு இந்திய இராணுவம்

சகோதர இயக்கங்களைப் பயன்படுத்தி கொண்ட பின்னணி குறித்தும் இந்நாவல் விரிவாக ஆராய்கிறது.

ஆச்டெரேசியே வகைப் பூந்தாவரமான பார்த்தீனியம் நட்சத்திரம் போன்ற வெண்பூக்களால் படரப்பட்ட அழகிய தாவரமாகும். இது 3 அல்லது 4 அடி வரை வளரக் கூடிய ஆழ்வேர்களைக் கொண்டது. இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்ட சமயத்தில் அவர்களால் கொண்டு வரப்பட்ட செம்மறி ஆடுகளின் பிலுக்கைகளில் இருந்து பரவிய தாவரமாக இது காணப்படுகின்றது. இத்தாவரத்தின் மகரந்தம் மற்றும் வித்துக்கள் விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கு சுவாசக்கோளாறுகளையும், ஒவ்வாமைகளையும் ஏற்படுத்துகின்றன. இவற்றை உண்ணும் பசுக்களின் பால் ஒரு வித கசப்புத்தன்மையுடன், நச்சுத்தன்மையையும் கொண்டது. இயற்கையெதிரியாக அறியப்படும் இத்தாவரம் மண்ணின் வளத்தையும் உறிஞ்சி எடுத்து விடுகிறது. இலங்கையில் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்தி தமிழர்களுக்கு நன்மைகளைச் செய்யும் பொருட்டு இந்தியாவினால் அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் புலிகளை அழித்தொழிக்கும் நோக்கில் பொது மக்களுக்கு எண்ணில்லாத துன்பங்களை விளைவித்தது. இதன் உள்ளகக் குறியீடே பார்த்தீனியம். 27 Dec 2016 அன்று இந்திய அமைதிப் படை இலங்கையில் செய்தது என்ன? என்ற தலைப்பில் தினக்குரல் இந்திய இராணுவப் புலனாய்வுத் தலைமை அதிகாரியாகச் செயற்பட்ட கேணல் ஆர்.ஹரிகரனின் பேட்டியைப் பிரசுரித்திருந்தது. அதில் உரைக்கப்பட்ட கருத்துக்கள் இந்தியாவின் உள்ளகநோக்கையும் இரண்டகநிலையையும் வெளிப்படையாக தெளிவுபடுத்தி இருந்தது. இலங்கை அதிபர் "ஜெயவர்த்தனாவுக்கு நம்பிக்கை அளிப்பதற்காகவே இந்திய அமைதி காக்கும் படைகள் அனுப்பப்பட்டன." எனக் கூறியிருந்தார். எனவே இந்தியாவின் கபட நாடகத்தையும் இரட்டை நிலைப்பாட்டுத் தன்மையையும் இது தோலுரித்துக் காட்டுகின்றது. அமெரிக்காவைச் சேர்ந்த சிகரில்லா அபச்சி மக்களுக்குப் "பார்த்தீனியம்" மருந்தாகப் பயன்படுத்தப்பட்ட போதும் அதனால் தீமையே அதிகம். அது போல இந்தியாவால் 13ஆம் திருத்தச்சட்டம், மாகாணசபை போன்ற ஒரு சில நன்மைகள் விளைந்த போதிலும் இந்திய அமைதி படையினரால் விளைந்த கேடுகளோ ஏராளம். எனவே பார்த்தீனியம் என்னும் தலைப்பு இந்நாவலுக்கு கச்சிதமாகப் பொருந்துகிறது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டை வழிமொழிதல், இந்திய இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட வன்கொடுமைகளை வெளிப்படுத்தல் என்னும் நோக்கிளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நாவல் புனையப்பட்ட கதையாடல் வாயிலாக ஈழப் போராட்டத்தின் குறிப்பிட்ட கால வரலாற்றைப் பேசிச் செல்கிறது. தமிழ்நதியின் போக்குக்கும் நோக்குக்கும் ஏற்ப இந்நாவல் இந்திய இராணுவம் தமிழ் மக்களுக்கு இழைத்த சீர்கேட்டை வெளிப்படுத்துகின்றாரேயன்றி விடுதலைப் புலிகளின் உள்ளக அரசியல் முரண்பாடுகளையோ அல்லது அக்காலப்பகுதியில் அவர்களால் நிகழ்த்தப்பட்ட மனித வன்முறைகளையோ வெளிப்படுத்தவில்லை. எனவே ஈழத்தமிழரின் வரலாறு தமிழ்நதியின் மனப்போக்குக்கு ஏற்ப துதிபாடுதல், வழிபடுதல், விடுபடுதல்களுடன் கூடிய புனைவுடன் கூடிய வரலாறாக அமைகின்றதே யன்றி முழுமையான வரலாறாக அது அமையவில்லை. எனவே போதாமைகளுடன் கூடிய எதிர்விளைவுகள் பற்றிய பிரக்ஞையுடனே பார்த்தீனியம் நாவலை அணுக வேண்டியிருக்கின்றது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் மாத்தையா, கிட்டு, ராதா, ஜெயம், பொன்னம்மான். புலேந்தியம்மான், திலீபன் உள்ளிட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதிகளும் அதே பெயரிலேயே கதாபாத்திரங்களாக வருகின்றனர். அக்காலப்பகுதியில் உபதலைவராக விளங்கிய மாத்தையா தவறான கண்ணோட்டத்திலேயே சித்திரிக்கப்படுகின்றார். இது தமிழ்நதியின் புலிச் சார்புத்தன்மையையே எடுத்துக்காட்டுகின்றது. கோபாலசாமி மகேந்திரராஜா என்னும் இயக்கப்பெயரையுடைய மாத்தையா விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராகவும் 1989 இல் விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் முன்னணி என்னும் அரசியல் கட்சியினுடைய தலைவரகவும் செயற்பட்டவர். 1987 –1988 காலப்பகுதியில் வன்னிப்பிரதிநிதியாக இருந்த இவர் அக்காலப்பகுதியில் சகோதரப் படுகொலைகளை முன்னின்று நடாத்தியவர் 1989 ஆம் ஆண்டு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் சுட்டுக்கொலைச் செய்யப்பட்ட சம்பவத்திற்குப் பின்னரே மாத்தையா இந்திய உளவு நிறுவனமான றோவுடன் (RAW Reasearch and Analysis Wing) இரகசிய தொடர்புகள் பேணினார் என்னும் குற்றச்சாட்டு விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டது. அதுவரை அவரை நோக்கி ஒரு விரல் கூட அசைந்ததாக நான் அறியவில்லை. அத்தகைய ஒருவரை ஆரம்பம் முதல் இழிவாகச் சித்திரிப்பது தமிழ்நதியின் புலி அபிமானத்தின் வெளிப்பாடு எனலாம்.

நாவலில் பேசப்பட்ட விடயங்களுக்கு அப்பால் விடுபடுதல்கள் அதிகளவில் காணப்படுகின்றன. தரவுகள் பற்றிய போதாமைகளுக்கப்பால் தமிழ்நதியின் புலிசார்பு குறிப்பான, தமிழர் வாழ்வில் முக்கியமான தெனக் கருதப்படும் சம்பவங்கள். நிகழ்வுகளைக் கூட பேச அனுமதிக்கவில்லை. குறிப்பாக அக்காலப்பகுதியில் முருகேசு ஆலாலசுந்தரம், வி.தர்மலிங்கம் ஆகியோரின் படுகொலைகள் மக்களை அதிரவைத்தன. இவர்கள் ஈழ தேசிய விடுதலை முன்னணியினரால் சுடப்பட்டதாகக் கூறப்பட்டாலும் இந்தியாவின் புலனாய்வு அமைப்பான ரோவின் கட்டளைக்கிணங்க தமிழீழ விடுதலைக் கழகமே நிகழ்த்தியதாகப் பரவலாக இன்றும் தமிழ் மக்களால் நம்பப்படுகிறது. திம்புப் பேச்சு

வார்த்தைகளுடன் இதனையும் இணைத்து நாவல் எழுதப்பட்டிருந்தால் நாவல் பிறிதொரு தளத்துக்கு சென்றிருக்கும். அது போல இக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகளால் மேற்கொல்லப்பட்ட சிறி சபாரத் தினம், ராஜினி திரணகம, பத்மநாபா முதலானோரின் படுகொலைகள் நூலில் உள்ளடக்கப்படாமையும் தமிழ்நதியின் புலிச் சார்புநிலைக்கு தக்க சான்றாகும். வரலாற்றின் ஊடாக புனைவை மேற்கொள்ளும் போது வரலாறு சார்புநிலையற்று வெளிப்படுத்தவேண்டும் இதனை தமிழ்நதியின் நாவலில் காணமுடியாமல் போனது தமிழர்களின் துர் அதிஸ்டமே.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சிகள் குறித்து குறிப்பிடும் அத்தியாயங்களில் உயிர்ப்பில்லை. அதில் மிகைப்படுத்தப்பட்ட விவரணத்தன்மைகளே அதிகம் உள்ளன. குணாகவியழகனின் நஞ்சுண்டகாடு உணர்வும் உயிர்ப்புமாக பயிற்சி முகாம்களில் இடம் பெறும் தொடர் பயிற்சிகளைக் கூறிச் செல்ல உணர்வின் தீவிரத்தன்மையுடனும் புனிதத்தின் கட்டு மானங்களுடனும் தமிழ்நதியால் மொழியப்படுகின்ற பயிற்சிகள், பயிற்சி முகாமின் விபரணைகள் யதார்த்த இயங்கியல் போக்கில் இருந்து விடுபட்டு போகின்றமையைக் காணலாம். குணாகவியழகனின் நாவலில் சம்பவ விவரிப்புகளுக்கூடாக புனைவைக் கட்டமைக்கும் அனுபவங்களுடன் கூடிய கதை சொல்லுதலின் மொழி பயிற்சி முகாம் குறித்த விடயங்களைச் சாத்தியமாக்குகின்றது. இது போல உதயனின் u.p.83 உத்தரபிரதேசத்தில் நிகழ்ந்த பயிற்சிகளை விவரணத்தன்மையில் மொழிந்தாலும் அப்பயிற்சியில் கலந்து கொண்டவனின் உணர்வு நிலையை அது உளப்பூர்வமாகச் சித்திரிக்கிறது.

தமிழ்நதியின் பார்த்தீனியம் நாவலில் கட்டுரைத் தன்மையான விவரணமொழியே பெரும்பாலான இடங்களை ஆக்கிரமிக்கிறது. இந்திய இராணுவத்தின் பேரழிவுச் சித்தரிப்பினை எடுத்துக் கூற மினிமலிசம் என்னும் எளிமையாகச் சொல்லும் குறைத்துரைத்தல் முறையைத் தமிழ்நதி இந்நாவலில் கையாண்டு இருப்பாரேயானால் அது நாவலை எளிதாக வாசகர் கண்டடைவதற்கும் அதனோடு ஊடாடுவ தற்கும் வாய்ப்பாக அமைந்திருக்கும். அத்துடன் உணர்வுகளை மிகையில்லாமல் நம்பகமாகச் சொல்ல வும் இந்நடை கைகொடுத்திருக்கும். ஆனால் நாவலில் இடம்பெறும் தேசம், தேசியம், புலிகள் குறித்தான தொழுகைகள் வழிபாடுகள், இந்திய இராணுவம் குறித்தான எதிர்ப்புணர்வு மீதெழும் உணர்வுநிலை மனோபாவம் நாவலின் மொழியைப் பல்வேறு இடங் களில் சிதைக்கிறது. அத்தியாயம் 45இல் அறிமுக மாகும் சுபத்திரா தனக்கு நடந்த பாலியல் கொடுமை களை வானதியிடம் கூறும் இடங்கள் தமிழ்நதியின் வக்கிர மனோ நோக்கை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது. எந்த யாழ்ப்பாணத்து குடும்பப் பெண்ணும் தான் சிதைக்கப்பட்ட கதையை முன்பின் அறிமுக மாகாத பெண்ணிடம் வரிவரியாக விவரிக்கமாட்டாள். "இந்த உடம்பை நினைச்சா அருவருப்பா இருக்கு. ஒருத்தன் என்ரை வாய்க்குள்ள... சாப்பிட முடி யேல்லை. அவன்ரை மூத்திர மணந்தான் ஞாபகம் வருகுது" என முன்பின் தெரியாத வானதியிடம் சுபத்திரா கூறுவது இந்திய இராணுவத்தின் இழிந்த செயலை வெளிப்படுத்த தமிழ்நதியால் கையாளப்பட்ட அருவருப்பான மொழிதல் உத்தியெனலாம். இன்றைய சூழலில் உடனடியான பதிவுகள் உணர்வுபூர்வமாக வருவது வரவேற்கத்தக்கது. ஆனால் உணர்வுரீதியான புனைவுகள் என்னும் பெயரில் ஆபாசமாக வருவது கண்டிக்கத்தக்கது.

இதுபோல பல்கலைக் கழக முன்னாள் மாணவன் அருணகிரி விஜிதரனின் கடத்தல் வெறுமனே பதிவுகளாகவும் சம்பவங்களின் கோர்வைகளாகவுமே காணப்படுகின்றன. யாழ் பல்கலைக்கழகத்தில் பாரியளவில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டம் தமிழ்நதியால் கொச்சப்படுத்தப் படுகிறது. நாவலில் பல இடங்கள் இப்போராட்டத்தைக் கொச்சப்படுத்தப்படும் வகையில் வெளிப்படுகின்றன. 1986ஆம் ஆண்டு பல்கலைகழகத்தில் பகிடிவதைகளில் ஈடுபட்ட மாணவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின ரால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டனர். இதனால் கொதிப்புற்ற மாணவர்கள் சகோதரப்படுகொலைகள் களையப்படவேண்டும் பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வன்முறைக்கெதிரான அமைப்பொன்றை உருவாக்கி போராட்டங்களை நிகழ்த்தினர். இதற்கு தலைமை தாங்கி விஜிதரன் போராட்டங்கள் முன்னெடுத்த சூழலில் 4.11.86 அன்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு அன்றிரவே கொலை செய்யப்பட்டார். விஜிதரன் கொலைசெய்யப் பட்டதை அறியாமல் 18.11.86 முதல் பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. பெருமெடுப்பில் அதில் மாணவர்கள் பங்குபற்றினர்.

அச்சமயத்தில் 22.11.86 சனிக்கிழமை அன்று முல்லைத்தீவு மேற்குப்பகுதி பாடசாலைகளின் மாணவர் ஒன்றியங்களும் பாடசாலை பழைய மாணவர்களும் ஒன்று சேர்ந்து பாதயாத்திரை ஒன்றை மேற் கொண்டனர். பொதுமக்கள் என்ற பெயரில் விடுதலை அமைப்பொன்றினால் அப்பாதயாத்திரையை முடக்கப் பட்டது. விஜிதரன் விடுதலைக்கு முன்னின்று உழைத்த விமலேஸ்வரன், சேரன், சபாநாவலன், இராயகரன் முதலான மாணவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் ஒன்றும் விடுக்கப்பட்ட சூழலிலும் விஜிதரனின் பெற்றோர்களுக்கு விஜிதரன் வெளிநாடு ஒன்றில் வைத்து விடுதலை செய்யப்படுவார் என விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கிட்டு கூறியதன் அடிப்படை யிலும் அப்போராட்டம் கைவிடப்பட்டது. ஆனால் நாவலின் இருபத்தேழாம் அத்தியாயத்தில் அக்கொலை ரதியின் கூற்றினூடாக நியாயப்படுத்தப்படுகிறது. "விசரா

உனக்கு? றாக்கிங் பண்ணுறாங்கள்...ப்ரா சைஸ் என்னெண்டு கேக்கிறாங்கள், எண்டு முட்டைக்கண்ணீர் வடித்துக் கொண்டு திரிஞ்சது நீ தானே... பகிடிவதை செய்தவர்களுக்கு ஆதரவாக விஜிதரன் இருந்தான் என்ற காரணத்தாலேயே அவன் கடத்தப்பட்டதாக பல்கலைக் கழகத்தினுள் கதை உலாவிற்று" என்ற கூற்றுக்கள் அப்பாவி மாணவனின் கொலையை நியாயப்படுத்து கின்றன. பகிடிவதைக்குத் தண்டனை மரணம் என்பதை தமிழ்நதி ஒருவரால் தான் நியாயப்படுத்த முடியும்.

விஜிதரனுக்காக உண்ணா விரதமிருந்த ஔவை, குகன். செல்வநாயகம், பிரசாத், விமலேஸ்வரன், விஜயகுமாரி முதலானோரை நாவலில் வானதி என்ற பாத்திரம் பார்க்கச் சென்று அவர்களின் முகத்தை ஆராய்கிறது. வானதி பாத்திரம் மகத்தான கண்டுபிடிப்பு ஒன்றை நிகழ்த்துகிறது. அது தான் உண்ணாவிரதம் இருந்து சோரவேண்டிய நண்பர்களின் முகங்கள் வானதி பார்க்கும்போது தெளிவாக இருக்கின்றன. உண்டு விட்டு அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதாக கூறி தமிழ்நதியால் வானதி மூலம் சோடிக்கப்பட்டு இட்டுக்கட்டப்படும் அவ்வுரையாடல் என்றோ நடந்த உன்னதமான மாணவர்களின் போராட்டத்தைக் கொச்சப்படுத்துகிறது. இப்பின்னணியில் எழும் பதிவுகளும் நாவலில் உணர்வுபூர்வமாகக் கூறப்படவில்லை.

விடுதலைப் போராட்டத்தின் மகத்துவத்தையும் போராளிகளின் தியாகத்தையும் வெளிப்படுத்தும் வகையில் தமிழ்நதியால் படைக்கப்பட்ட பாத்திரங்கள் அப்பணியைச் செவ்வனே செய்திருந்தன. போராளிகள் தாய்மண் மீது கொண்ட அன்பினையும் தேசியத் தலைவர் மீது கொண்ட விசுவாசத்தையும் பரணி பாத்திரம் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கின்றது. நாவலில் இடம் பெறும் மரியான், ஜெசி, மதுரன், வினோதன், ரமேஷ், ஜனா. மோகன், செந்தூரன் முதலான பல பாத்திரங்கள் விடுதலைப் புலிகளின் முக்கியத்துவத்தையும் போராளிகளின் போராற்றலையும் வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட பாத்திரங்கள். அதிலும் செந்தூரன் பாத்திரம் தன்னோடு தப்பியோடி வரும் சக தோழி இராணுவத்தின் காவலரண் வேலியில் சிக்குண்டு தப்பமுடியாது தடுமாறிய வேளையில் அவளைக் காப்பாற்றி விட்டு அவளுக்காக தன்னுயிரை நீக்குகின்ற பாத்திரமாகும். தியாகங்களின் வழி கட்டியெழுப்பப்பட்டதே விடுதலைப் புலி இயக்கம் என்னும் கூற்று தமிழ்நதியால் இப் பாத்திரம் மூலம் மெய்ப்பிக்கப்படுகிறது. அப்பாத்திரமும் அப்பணியைக் கச்சிதமாகச் செய்கிறது.

மாற்று இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளை கொடூரமானவர்களாகவும் கேவலமானவர்களாகவும் காட்டுவதற்கென்று தமிழ்நதியால் உருவாக்கப்பட்ட தெய்வம், சீலன், மாணிக்கதாசன், பரந்தன் ராஜன் முதலான போராளிகள் புலிவேட்டையில் ஈடுபடுபவர்களாகவும் ஈனமற்றவர்களாகவும் சித்திரிக்கப் படுகின்றனர். உண்மையிலேயே மாணிக்கதாசன், பரந்தன் ராஜன் போன்றவர்கள் மனித வேட்டையாடிய மிருகங்களாகக் காணப்பட்டாலும் இக்காலப்பகுதியில் E.P.R.L.F இல் இருந்த பத்மநாபா, சிவா, பாறுக், நேசன், பாபு, சுகு முதலான போராளிகள் பலர் மனிதநேய முள்ளவர்களாகவும் மக்கள் மீது அன்பு கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். அவர்களைக் காயடிப்புச் செய்து நாவலை நகர்த்திச் செல்வது நாகரிகமான செயலன்று. அதிலும் மரியசீலன் என்னும் பாத்திரத்தைத் தலித்தாகச் சித்திரித்து தன்னை ஈனமற்று மனிதாபிமானமற்று நடாத்திய சமூகத்தை பலிவாங்க அவன் ஆயுதம் தரிப்பதாகச் சித்திரிப்பது தமிழ்நதியின் வக்கிரமனப்பான்மையின் பிறிதொரு வெளிப்பாடாகும். மாற்று இயக்கப் போராளிகள் தலித்தாகத் தான் இருக்க வேண்டும் என தமிழ்நதி சித்திரிப்பது நாகரிமான செயலாகப்படவில்லை. விடுதலைப் புலிகளால் கொடூரமாகப் பலிவாங்கப்பட்ட, பாதிக்கப்பட்ட பலர் மாற்று இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளாக உருமாறியுள்ளனர். அது குறித்த பதிவுகளோ, குறிப்புக்களையோ நாவலில் காண முடியாதுள்ளது. அரசியல் சாய்வுகளுக்கு அப்பால் நின்று வரலாற்றைப் நோக்குகின்ற தூல சிந்தனையின்மையின் விளைவே இதுவெனலாம்.

நாவலின் பிரதான நோக்கங்களில் ஒன்று கறைபடியாத, புனிதமான அமைப்பாக விடுதலைப் புலிகளைச் சித்திரிப்பது. நாவல் எந்நோக்கத்துக்காக எழுதப்பட்டதோ அந்நோக்கை நாவல் செவ்வனே செய்தது எனலாம். விடுதலைப் புலிகள் பற்றிய விமர்சனங்களை முன் வைப்பவர்களாக அமைகின்ற தனஞ்சயன், கீதபொன்கலன், ஜீவானந்தம் முதலான பாத்திரங்களும் பார்த்தீனியத்தின் இறுதிப்பகுதியில் விடுதலைப் புலிகளின் அரசியல் செல்நெறியை ஏற்றுக் கொள்பவர்களாகவே மனமாற்றம் அடைவதும் இதனை தெளிவுபடுத்துகிறது. விடுதலைப் போராட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்துச் சென்றனர் என்பது வெளிப்படை. அப்போராட்டம் கொச்சப் படுத்துவது, காயடிப்பது எனது நோக்கமன்று. ஆனால் அவர்களால் மனிதபிமானமற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை துரோகத்துக்கான தண்டனையாக வழிமொழிவது தவறு. அதனையே நான் கண்டிக்கிறேன்.

தணிகாசலம், அருமைநாயகம், வேல்முருகு, சஞ்சீவன், தனபாக்கியம் முதலான பாத்திரங்கள் யாழ்ப்பாண மண்ணோடு கலந்து ஒட்டி உறவாடுகின்ற பாத்திரங்களாக அமைந்தாலும் அவையும் நாவலின் நோக்குநிலை கருதி உருவாக்கப்பட்ட பாத்திரங்களாகும். ஆயினும் இலங்கை அரசாலும் இந்திய இராணுவத்தாலும் நிலைகுலைந்த யாழ்ப்பாண சமூகநிலையை எடுத்துக்காட்டும் வகையில் உருவாக்கப்பட்ட இப்பாத்திரங்கள் போராட்ட காலத்தில் மக்கள் உணவு, உடை, வதிவிடமின்றி அல்லற்பட்டு வழ்வை எதிர் கொண்ட நிலையை எடுத்துரைக்கும் பாத்திரங்கள் என்னும் வகையில் வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்திய அமைதிப்படையினர் ஈழத்தில் செய்த கொடுமைகளை அவர்கள் இங்கு நிலைகொண்ட காலப்பகுதியில் ஜெயகாந்தன், சோ முதலான எழுத்தாளர்கள் மறுதலித்து அவர்கள் செய்த பாதகச் செயல்களை நியாயப்படுத்தியும் வந்தனர். பிற்பட்ட காலப்பகுதியில் விடுதலைப் புலிகளாலும் அதன் ஆதாரவாளர்களாலும் இப்பிரச்சாரம் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜெயமோகன் கூறியதுடன் "வரலாற்றின் கசப்பான பழிவாங்கல்" எனவும் இதனை நியாயப்படுத்தினார். கவிஞர் திருமாவளவன் ஜெயமோகனுக்கு இது குறித்து எழுதிய மின்னஞ்சலுக்குப் பின் தன் கூற்றினை மாற்றிக் கொண்டார். இந்நிலையில் இந்நாவலின் வருகை காத்திரமானது. இலக்கிய கர்த்தாக்களும் முன்னாள் இந்தியப்படை அதிகாரிகளும் மறுத்து வரும் நிலையில் இந்திய இராணுவத்தின் வன்கொடுமையை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் தமிழ்நதி சகோதரப் படுகொலைகளுக்கூடாக வளர்ந்த ஈழப் போராட்டத்தின் குரூர யதார்த்தத்தை கண்டு கொள்ள தலைப்படவில்லை. உண்மைகளும் அனுமானங்களும் கலந்து உருவாக்கப்பட்ட இப்பிரதி தனிமனித விருப்புக் கேற்ப வரலாற்றை விலகி நோக்கல், வரலாற்றைத் திரித்து நோக்கல் என்னும் அடிப்படையிலேயே எழுதப்பட்டுள்ளது. ஈழத்தின் உண்மைநிலையை அறிந்த யமுனா ராஜேந்திரன் போன்ற ஒரு சிலரும் இப்பிரதியை "பேரழிவின் மானுட சாட்சியம்"(தடம் - ஜீன் -2016 பக். 33-36) ஆக காணவிளைகிறார்கள். இது ஆபாத்தான செயன்முறையாகும். இது போல தர்மு பிரசாத் முதலானோர்கள் பாதீனியம் நாவலை- பேரழிவின் பிறழ் சாட்சியமாகக் கருதுகின்றனர் (ஆக்காட்டி யூலை செப். பக்.18-22) முற்று முழுதாக பிரதியை நிராகரிக்கும் இச்செயற்பாடும் இலக்கியத் துக்கு ஆரோக்கியமானதன்று.

ஈழத்து தமிழ் வரலாற்றுச் சூழலில் போர்க் கால அனுபவங்களை உள்வாங்கி படைக்கப்பட்ட நாவல் என்பதாலும் இந்திய இராணுவத்தின் வன்முறைப் போக்கை பெண் புனைவுக் கூடாக வெளிப்படுத்தும் நாவல் என்பதாலும் தமிழ்நதியின் பாதீனியம் நாவல் முக்கியமானது.

ஈழப் போராட்டத்தின் குறிப்பிட்ட ஒரு சாராரை முன்னிறுத்தி எழுதப்பட்ட நாவல் என்பதாலும் முக்கியமான விடுபடுதல்களுடன் கூடிய வரலாற்று ஆவணமாக இந்நாவல் விளங்குவதாலும் இந்நாவல் தொடர்ச்சியான விவாதத்துக்குரிய பேசுபொருளாக அமையும் எனன்றால் அது மிகையில்லை.

---

# எனது மக்கள்

**சௌந்தரி**

எனது மக்கள்
ஞாபகசக்தியை
காலத்தோடு குறைத்துவிட்டனர்

எனது மக்கள்
கறுத்தத் தெருவில்
களைப்பாறத் தொடங்கிவிட்டனர்

இழந்துபோகா
இழப்பை இழந்தும்
இயல்புநிலைக்குத் திரும்பிவிட்டனர்

இரத்தம் சிந்திய வானம் இருண்டுபோனது
தைரியமான தலைமுறை சோம்பலானது
வீரம் எழுதிய விரல்கள் ஓய்ந்து போயின
வீரர்களின் நினைவுகள் அழிந்துபோயின

இரவு முழுவதும் மழைப்பதும்
பகலில் அனைத்தையும் மறப்பதுமாய்
மனித ஆத்மாக்கள் அலைகின்றன

எனது சிலர் மண்ணில் புதையுண்டனர்
எனது சிலர் காணாமல் போய்விட்டனர்
எனது சிலர் தெருவில் நிற்கின்றனர்
எனது சிலர் சிறையில் வாடுகின்றனர்

இவர்கள் காலை எப்போது மலரும்?
இவர்கள் திரை எப்போது திறக்கும்?
இவர்கள் தேசத்தை எவர் வந்து உழுவார்?
இவர்கள் துன்பத்தை எவர் வந்து தீர்ப்பார்?

இவர்களுக்காக செங்கதிர் வீசுமா?
யார் இவர்களின் எரியும் சூரியன்!

அடிமை வாழ்வை எதிர்த்து நின்று
பாதி வழியில் துரோகம் அழித்த
வீரத்தின் கல்லறைகள் எங்கே?

கடலின் நடுவே பாதையமைத்து
அலைகள் மூழ்கி எழுந்து நின்ற
மேகத்தின் வழிகாட்டி எங்கே?

நாம் கண்ட கனவு
கனவு காணும் கனவல்ல
பொய்யான தேசபக்தி வாதமல்ல

சுதந்திரம் கறை படிவதில்லை
வீரர்களை அழையுங்கள்

மரணம் தின்ற தேசத்தை
நிலத்தை நீரை சுரங்கத்தை
ஆறு மலை வெளிகளை
மந்தை மற்றும் மனிதரை
நாம் மீட்க வேண்டும்
அதுவரை நாக்குவாயாக
எங்கள் மொழி பேசவேண்டும்



பொ.கருணாகரமூர்த்தி



# இராணுவத்தில் சித்தார்த்தன்

புத்தூர் வடக்குச் சந்தியிலிருந்து சுன்னாகம் போகும் வீதியில் வரும் நிலாவரைக் கிணற்றுக்கு ஒரு கி.மீ முன்பதாக வரும் சிறிய செம்பாட்டுக் கிராமந் தான் நவற்கீரி. வாழை, வெங்காயப் பயிர்ச் செய்கைக்குப் பெயர்போன பூமி. அங்கே வாழ்ந்த எளிய விவசாயக் குடும்பஸ்த்தர் சண்முகம்.

எல்லா இளைஞர்களைப்போலவும் கல்லூரிக்குச்சென்று சோதனைகளில் சித்தியடைந்து ஏதோவொரு தொழிலைப் பெற்றுக்கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றவேண்டிய ஒரு பிள்ளை மாறாக இயக்கத்தில் சேர்ந்துகொண்டு தற்கொலைப் போராளியாகி விடுதலைக்குத் தன்னையே கொடுத் திருக்கும் குடும்பம் அது. அப்பா சண்முகத்துக்கு தன் மகனையிட்டுப் பெருமையாக இருந்தாலும் "தான் பெற்றுத்தூக்கி அளைந்து காலடியில் விளையாடி வளர்த்தபிள்ளை இப்போது சூனியவெளிக்குள் ஆகுதியான அநித்தியக்கூத்தை" நினைக்கும் போதெல்லாம் நம்பமுடியாமல் அவர் மனமும் ஒரு சூனியவெளிக்குள் புகுந்துவிடும்.

அனுராதபுர விமானத்தளத்தாக்குதலான ஒப்பி ரேஷன் - எல்லாளனில் கொல்லப்பட்ட அனைத்துப் போராளிகளின் உடல்களையும் இராணுவத்தினர் உழவு இயந்திரப்பெட்டியில் நிர்வாணமாக வரிசைக்குக் கிடத்தி நகரம் முழுமைக்கும் கொண்டுசென்று காட்சிப்படுத்தினார்கள். அந்நிகழ்வின் காணொளியில் அவ்விளைஞர்களின் உடலங்களைக்கண்ட பிள்ளை களைப் பெற்ற சிங்களத் தாய்மார்கள்கூட "யார் பெற்ற பிள்ளைகளோ... அநியாயம் அக்கிரமம்" என்று தலையில் அடித்துக்கொண்டார்கள்.

கொஞ்சம் நடுநிலையான ஊடகங்கள் ஒப்பிரேஷன் - எல்லாளன் தாக்குதலில் 6 குண்டுவீச்சு விமானங்களையும் ஒரு உலங்குவானூர்தியையும் அழிப்பதற்குப் பகரமாக 21 இளந்தற்கொடைப் போராளிகளை அனுப்பி அழித்தது அநியாயம்,

அக்கிரமம், அவிவேகம் என்றெல்லாம் அரற்றின.

உக்கிரமான 30 ஆண்டுகாலப் போர் விளைவித்த இளவயது மரணங்களும் விதவைகளும் முதிர்கன்னிகளும் வாழாவெட்டிகளும் மலிந்த தமிழ்ச் சமூகத்தில் இன்னும் இளைஞர்கள் உயிர்தரித்திருப்பது தான் அதிசயம். நித்திய இருளில் விடியலும் பகலும் கனவென்றானது.

சண்முகத்தின் மனைவி கலையரசிக்கும் வயது 41 தான் ஆகிறது, விகசித்த முகத்தோடு சதா கலகலப்புடனிருப்பவள் மகனைப் பிரிந்தநாள் முதல் சிரிப்பதை மறந்திருந்தாள், அதுபோலவே தன்னை அலங்கரிப்பதையும் பட்டு உடுத்துவதையும் தவிர்த் திருந்தாள். தினசரி அடுப்பெரிக்கவே அக்கப்பாடு படும் சராசரி விவசாயக் குடும்பங்களுக்கு நாடு போருக்குள் அகப்பட்டு வலியைத் துய்க்கையில் பட்டுச்சேலையுடுத்துவதன்ன சிறிய சந்தோஷங்களுக் கான சந்தர்ப்பங்களே அருகலாக இருந்தன.

*

சண்முகம் குடும்பத்துக்கு மொத்தமும் 4 பிள்ளைகள். மூத்தவன் மாதவன் டோஹாவுக்குப் போய் பாரவுந்துச்சாரதியாய் ஏதோ புலுண்டுறதில (தேட்டம்) குடும்பம் இயங்குது. அவனுடைய உதவியோடுதான் சண்முகம் நவற்கீரியில் குடியிருந்த கல்லுக்காணியையே வாங்கிக் கல்லுடைத்துப் பண்படுத்தி நிலாவரைத் தண்ணீரின் சகாயத்தால் வெங்காயம் மிளகாய் தக்காளி, கத்தரி, பயத்தங்காய் பயிரிடுகிறார். இந்த இழவெடுத்த போரால யாழ் மண்ணின் விளைச்சல்கள் கொழும்புக்கு நகரத்திலே பணப்பயிர்ச்செய்கையால பெரிசாய் சுகமென்றில்லை. பணப்புழக்கம் குறைந்ததில் மக்களின் நுகரும் சக்தி நலிந்துவிட்டது. இரண்டாமவன்தான் வான்புலி துஜீவன், அடுத்தவள் மாலதி. க.பொ.த, உயர்தரம் முயன்றவள். உயர்கல்வி வாய்ப்பு அமையவில்லை. கடைசிப்பையன் பத்தாவது படிக்கிறான், வரும் மார்கழியில் பரீட்சை.

மாலதிக்கு தூரத்துச்சொந்தத்தில லண்டனில ஒரு பையனைப் பேசிவைச்சிருக்கு. பையனுக்கு கலாமோகன் என்று பெயர். வெளியூர்த்தரகர் பையன் மாணவருக்கான வதிவிட அனுமதியில் லண்டனில இருக்கிறான் என்று கொண்டுவந்து பொருத்தியபிறகு தான் கலாமோகன் ஒரு சுற்றுவழியில் இவர்களுக்குச் சொந்தமாக இருப்பதுவும் தெரியவந்தது. கலாமோகன் வணிக முகாமைத்துவத்தில் (MBA) மேல்மாணிப் படிப்பு முடியவும் லண்டனில் ஒரு வணிகக்குழுமத்தில் கொழுவிவிட்டான், கைவசம் தொழிலிருந்தாலும் கமறொனின் அரசு அவனுக்கு நிலையானதும் ஒருத்தியை அழைத்து தன்னுடன் வைத்துக்கொள்ளும் வலுவான வதிவிடவனுமதியை வழங்குவதில் இழுத்துப்பறித்துக் கொண்டிருக்கிறது.

அப்பிரச்சனைக்குரிய ஒரே மாற்றுவழி இந்தியாவுக்கோ சிங்கப்பூருக்கோ பெண்ணை வரவழைத்து பதிவுத்திருமணத்தை முடித்துக்கொண்டு லண்டனுக்கு வந்து தன்னை மனைவியுடன் சேர்ந்து வாழ அனுமதிக்குமாறு பிரிடிஷ் அரசிடம் விண்ணப்பிப்பதுதான். பையன் சம்பந்தமான அனைத்துக் கோப்புகளும் மெல்லக் கசிந்து இரங்கி பெண்ணுக்கு வதிவிட அனுமதியை வழங்கியபின்னால் இணையை அங்கே அழைத்துக்கொள்ளுதல். அதுவும் உடனடியாக நிகழ்ந்துவிடாது, ஓராண்டோ ஈராண்டோ இழுபடும். தாமதமானாலும் இப்போ அநேகரும் செய்வதும், செயற்படுத்த இருப்பதான ஒரேமார்க்கமும் அதுதான்.

*

மாலதிக்கு இந்தியாவுக்குச் செல்வதுக்கான விஸாவுக்கு விண்ணப்பித்தபோதுதான் புதிய சிக்கல் ஒன்றுந் துளிர்த்தது. உக்கிரமாகப்போர் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில், இன்றிருப்பதைவிடவும் இந்தியவிஸாவுக்கு விண்ணப்பிப்பதிலும் அதைப் பெற்றுக்கொள்வதிலும் ஏராளம் கெடுபிடிகள் இருந்தன.

விண்ணப்பதாரி வதியும் பிரதேசத்துக்கான / மாவட்டத்துக்கான இராணுவப்பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து அவன் / அவள் போராட்டக் குழுக்களுடன் சம்பந்தமில்லாதவரென்ற சான்றிதழை யும் விஸாவிண்ணப்பத்துடன் சேர்த்து இணைக்கச் சொல்லி இந்தியத்தூதரகம் கோரியது. இராணுவப் பணிப்பாளரிடம் அனுமதிபெறுவதாயின் அதுக்கு விண்ணப்பதாரியின் பகுதிப்பிரதேச அலுவலரின் அத்தாட்சிப்பத்திரம் தேவை. பிரதேச அலுவலர் (Divisional Secretariat) அதை உறுதிப்படுத்த வேண்டின் அவர் பிறந்தவூர் கிராமஅலுவலரிடம் உறுதிப்பாட்டுப் பத்திரம் தேவை. பிறந்த இடங்களைவிட்டு மக்கள் செல்விகிதமும் இடம்பெயர்ந்து வாழும் ஒரு காலத்தில் எந்தக்கிராமத்தின் அலுவலர் எந்தக்கிராமத்து மூலையி லிருந்து இயங்குகிறார் என்பதைக் கண்டுபிடிப்பதே வல்லையாயிருக்கும். ஒன்றோடொன்று பின்னப்பட்ட சிக்கலான இச்செயற்பாடு அனைவரையும் விசன மூட்டியது. இவர்கள் எல்லோரிடமும் அனுமதி பெறுவதை விடவும் இலேசாகச் சோனியாவிடமோ, பிரணாப் முகர்ஜியிடமோ அனுமதியைப் பெற்றுக் கொண்டுவிடலாம். ஈழத்தமிழருக்கு விஸாவழங்கும் நடைமுறையையாவது இந்தியா தளர்த்தித் தமிழர் களிடம் சற்றே தாராளமாக இருந்திருக்கலாம். புலம்பெயர்ந்து வேறொருநாட்டில் வதியும் ஒரு இலங்கையர் விஸாவுக்கு விண்ணப்பிப்பதானால்கூட அவர் சார்ந்த பத்திரங்கள் தரவுகள் அனைத்தும் இலங்கையிலுள்ள இந்திய தூதுவராலயத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பப்பட்டு அவர்களால் மேலே இராணுவம், காவல்திணைக்கள உதவியுடன் புலனாயப்பட்டுப் பச்சைக்கொடி காட்டப்பட்டாலே விஸா வழங்கப்படும், அல்லது நிராகரிப்புத்தான். ஒரு முறை நிராகரிக்கப்பட்டுவிட்டால் மறுமுறையும் விஸா எடுக்கப் “பிரம்மப்பிரயத்தனம்” செய்யவேண்டும்.

கிராம அலுவலருக்கு வேண்டிய சம்பாவனையையூட்டி மாலதி துஜீவனின் சகோதரி என்பதை மறைத்து பிரதேசசெயலரிடம் அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்ற பின்னாலும் ஊரின் நல்லூழியக் காரரின் கைங்கரியமோ, இல்லை அவளது பெயர் மாலதியாக இருந்து தொலைத்ததாலோ (மாலதி ஈழப்போராட்டத்தில் முதல் வித்தாகிய தமிழ் மாவீராங்கனை) இராணுவந்தான் தம் உளவாய்வு களால் அறிந்துகொண்டார்களோ, முயன்ற மூன்று தடவைகளும் மாலதிக்கான நற்சாட்சிப்பத்திர விண்ணப்பத்தை இராணுவப்பணிப்பாளர் காரியாலயம் நிராகரித்துவிட்டது. மாலதிக்கும் 27 வயசாகிவிட்டது. “குமர் முத்தினால் குரங்கு” என்பார்கள். பிறகு அவளைக் கட்ட எவன் விரும்பி வருவான்? திருமணம் நிச்சயமாகிய பின்னரும் இக்கரை யில் இவளும் அக்கரையில் அவனும் வாடிக் கொண்டிருக்கின்றனர். மாலதிபற்றிய கவலையே சண்முகத்தையும் கலையரசியையும் குறுக்கால போனவனின் கவலையோடு சேர்ந்து தின்று கொண்டிருக்கிறது.

*

எட்டரைச்சுத்து மாட்டுவண்டி ஒன்று வேலியில் உரசாமல் கொழுவாமல் போகக்கூடிய அவர்களின் வீட்டுக்கான ஒடுங்கலான பாதையில் யாழ்ப்பாணம் இராணுவ பிராந்திய அதிகாரி சமிந்த நாணயக்காரவின் டிரக்வண்டி இரைந்துகொண்டு வேலியில் சடைத்துநின்ற பாவெட்டை, கிழுவங் கதியாலினது குறுக்கோடிய சில கிளைகளையெல்லாம் முறித்துக்கொண்டு நுழைந்துபோய் சண்முகம் வீட்டு வாசலில் நின்றது. வேலியில் குறுக்குப்பிடிக்க பனை மட்டைகளைக் கருக்குச்சீவிக்கொண்டிருந்த சண்முகம் டிறக் வண்டியைப்பார்த்ததும் பயந்து உடல் விதிர்த்துப்போனார். இதிலேயே வைத்துச்சுடு வாங்களோ, அள்ளிக்கொண்டுபோய் மறைவாய் வைத்துத் தட்டுவாங்களோ என்பதைத்தவிர வேறெதை யும் அவரால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. ஜீப்பைவிட்டுக்குதித்து இறங்கிய சமிந்த நாணயக்கார, கும்பிட்டபடி வாசலுக்கு வந்த சண்முகத்தைப்பார்த்து “ நீங்கள்தானே சம்முவம்” என்றார் அதிகாரதோரணை யுடன். அவருக்கு காவலுக்கு மேலும் இரண்டு இளம் இராணுவத்தினர் உடன் வந்திருந்தனர்.

அந்த இராணுவதிகாரியை சண்முகம் ஒரு போதும் பார்த்ததில்லை. தோள்களிலும், நெஞ்சிலும் மூன்று அணில்வரிகள் உள்ள பட்டைகள் மாத்திரம் அணிந்திருந்தார், பயந்து கெடிக்கலக்கத்திலிருந்த சண்முகம் அவர் என்ன தரத்திலுள்ள அதிகாரியாயிருப் பார் என்பதை ஆராயும் மனநிலையில் இல்லை.

“ ஓம் ஐயா... ஓம் ஓம் ஓம் நான்தான்...அது ”

“ நாங்கள் ஒங்கள விசாரிக்கத்தான் வந்தது, உண்மை சொன்னாப் பிரச்சனை இல்லை. ஒண்டுக்கும் பயப்பட வாணாம்” என்றார்.

எந்த ஒரு இராணுவத்தினனுமே சண்முகத்தை இந்த ஜீவிதத்தில் வாங்க போங்கவென்று விளித்துப் பேசியதில்லை. அதனாலேயே மேலும் பயமாக இருந்தது அவருக்கு, அதை மறைத்துக்கொண்டு

“ சரி......ஐயா ” என்றபடி மீண்டும் கும்பிட்டார் சண்முகம்.

“துஜீவன் ஒங்க மகன்தானே... ”

“ஓம் ஐயா”

“என்ர தலைச்சன் பிள்ளை ”

“அப்பிடீன்னா...நீங்க அடொப்ட் பண்ணி வளர்த்த பிள்ளையா.”;

”இல்லை ஐயா...என்ர சொந்தப்பிள்ளை, மூத்த பிள்ளையைத்தான் தலைச்சன் என்றது.”

“என்னப்பா கொடுத்து வளர்த்தீங்க அவனுக்கு”

இப்போ சண்முகத்துக்கு மாத்தையா என்ன கேட்கிறாரென்று புரியவில்லை. அலமலங்க அவரைப் பார்த்தார்.

“ இல்லை... துஜீவன் அனுராதபுரம் ஏர்பேஸ் தாக்குதலில் இறந்தவொரு மாவீரன்தானே...”

மாவீரன்போன்ற சொற்கள் எல்லாம் இராணுவத்திடமிருந்தல்ல எந்தவொரு சிங்களவர் வாயிலுருந்தும் எப்போதுமே வந்துவிடாது.

பாகிஸ்தான் வங்கத்தை ஆக்கிரமித்தபோது ஆயிரக்கணக்கில் இளம்பெண்கள் இராணுவத்தால் தூக்கிவரப்பட்டு முகாம்களிலும், பதுங்குகுழிகளிலு மாக வன்புணரப்பட்டனர். வங்கம் சுதந்திரம் பெற்ற பின்னரும் இவர்களுக்கான இழப்பீட்டையோ, சர்வதேசநீதியை வங்க அரசு பெற்றுத்தரவில்லை, அற்பமான சில சலுகைகளைப்பெறவே அப்பெண்கள் போராடவேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் தம் தாய்ச்சமூகத்தினால் இழித்துப்பழிக்கப்படாதிருக்க அவர்களை வீராங்கனைகள் (பிரங்கோனா) எனவே அரசு அழைத்தது.

ஆச்சரியம், பயம் எல்லாவற்றினதும் கலவை யாய் தொடர்ந்து தலையைக் கவிழ்ந்துகொண்டு நின்றார் சண்முகம்.

“ இல்லை இப்படிப்போய் உயிரைக்கொடுத்து மாவீரன் ஆகிறதுக்கு ஏதும் விசேஷமான முறையில அவனை வளத்தீங்களான்னு நான் கேட்குது ”

சண்முகத்துக்கு மாத்தையா கிண்டல் பண்ணு கிறாரோ இல்லை நிஜமாய்த்தான் கேட்கிறாரோ என்று சந்தேகமாயிருந்தது.

“ கயிட்டப்பட்ட குடும்பம் ஐயா... வசதி இல்லாதனாங்கள், தோட்டவேலை, கூலி வேலை செய்து தான் சீவியத்தைத் தள்ளின்னான், மற்றப்பிள்ளை களைப் போலத்தான் இவனையும் வளர்த்தனான், 2001ம் ஆண்டு கடைசியில பத்தாம் வகுப்பு சோதனை எழுத வேணும், சோதனைக்கு முதலே சொல்லாமல் கொள்ளாமல் இயக்கத்துக்கு ஓடிட்டான். நாலு வரிசங் கழிச்சு ஒருநாள் மோட்டச்சைக்கிளில வந்தான், ஆறுதலாய் இருந்தொரு வார்த்தை கதைக்கேல்ல, பேந்தும் பறந்திட்டான் ஐயா... இப்ப அனுராதபுரம் சமரோடை ஒரேயடியாய் பறந்திட்டான்... ” என்று

சொல்ல புத்திரசோகத்தால் சண்முகத்துக்கு குரல் கட்டிக்கொண்டுவந்தது, கைகளால் முகத்தைப் பொத்திக்கொண்டு உடைந்து அழுதார். பிறகு இடுப்பில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்துக் கண்களைத்துடைத்தார்.

சண்முகத்தின் மனைவி கலையரசி வீட்டுக்குள்ளிருந்த ஒரே நெகிழிக்கதிரையைக் கொண்டுவந்து முற்றத்தில் வைக்கவும் நாணயக்கார மாத்தையா அதில் கம்பீரமாய் அமர்ந்தார்.

"உங்களோட வீட்டில இருந்த காலத்தில படிக்கிற காலத்தில எல்லாம் எப்பிடி... துஜீவன் கோவக்காரனாக சண்டைக்காரனாக கலகக்காரனாக இருப்பானோ..."

" ஐய்யோ...ஐயா என்ர பிள்ளை மிரிச்ச விடத்துப் புல்லுச்சாகாது, அவன் தரவளிப்பயலுகள் ஆராவது வளியில தெருவில அவனை முட்டினாச் சொட்டினாக்கூட நேர என்னட்டைத்தான் வந்து சொல்லுவானே தவிரத் திருப்பி அடிக்கத்தெரியாத அப்பாவி ஐயா..."

" சரி... அவன்ர கூட்டாளிகள் எப்படி... இயக்கப்பெடியள் யாரும் இவனுக்கு கூட்டாளிகளா இருந்தாங்களா... வந்து புத்திசொல்லிச்சொல்லி அவனையும் இயக்கத்துக்குக் கூட்டிப் போனாங்களா.."

" ஐயோ ஐயா இந்தச்சுற்றுவட்டாரத்தில அவனுக்கு இயக்கப்பெடியளோ... கூட்டுக்களோ யாரும் இருக்கேல்ல...ஒரே யொருத்தன் இருந்தான்... அவனுமிப்போ ஆளில்லை."

சொல்லி முடித்தபின்னால்த்தான் "முட்டாள்த் தனமாய் வாயைக்கொடுத்திட்டேனோ" என்று சலம்பலை நிறுத்தி யோசித்தார்.

"சம்முவம் நீங்க எங்கிட்ட சொல்றதுக்குப் பயப்பிடவாணாம்... நாங்கள் இந்தப் போராளிப் பெடியங்கள் எப்படி உருவானாங்கள், இயக்கங்கள் எப்பிடி உருவாச்சு என்கிறதை இராணுவமும் அரசாங்க மும் சேர்ந்து ஒரு ஆராய்ச்சி செய்யுது... ஒண்ணும் பயப்படுறதுக்கில்ல ஒளிக்காம உங்களுக்குத் தெரிஞ்ச அவங்கள் பற்றிய எல்லாத்தகவலையும் சொல்லுங்கோ... வேறு போராளிகளைப்பற்றிய கதைகள் தெரிஞ்சாலும் சொல்லுங்கோ எங்களுடைய ஆராய்ச்சிக்கு உதவும்... சரி, யாரு அந்த மற்றக் கூட்டாளி?"

இப்போது சண்முகத்துக்குக் கொஞ்சம் துணிச்சல் வந்தது. அவனும் இப்போ ஆள் இல்லைத் தானே. சரி சொல்லுவம் என்று நினைத்துவிட்டுச் சொல்லலானார்.

" பரதவன் என்று என்னோட மருமோன் ஒருத்தன் ஈ.பி.ஆர்.எல்.எஃப்பில இருந்தவன், அவனை யும் புலியள் **1994** இல திருநெல்வேலிச்சந்தியில வைத்துப்போட்டுட்டாங்கள்... அவனைத்தான் சொந்தமென்று சொல்லலாம்"

"புலி விமானப்படையில துஜீவன் இருக்கிறான் என்கிறதை நீங்கள் அறிந்திருக் கேல்லையா சம்முவம்?"

" விமானப்படை ஒன்று இயக்கத்திட்ட இருக் கென்றும் இல்லையென்றும் எங்களுக்கும் சமுசிமாய்த் தான் ஐயா இருந்திச்சு...காரே ஓடத்தெரியாத இவன் அதில இருந்திருக்கிறான் என்டது... அவன் அதில போய்த் தொலைஞ்சாப்போலத்தான் ஐயா தெரிஞ்சுது "

பிறகும் சண்முகத்துக்கு கண்கள் குளம் கட்டி வழிய ஆரம்பித்தன.

துஜீவனின் பத்தாம் வகுப்பு சோதனை எழுது வதற்கான அறிமுக அட்டைப் போட்டோவொன்றைத் தன் பொக்கட்டிலிருந்து எடுத்துக்காட்டிய சமிந்த நாணயக்கார " இதைவிட வேற போட்டோக்கள் ஏதும் வீட்டில இருந்தால் தாங்கோ " என்றார்.

துஜீவனின் படத்தைப்பார்த்ததும் கலையரசி தலையில் அடித்துக்கொண்டு கதறினாள். அனுராதபுரம் விமானநிலையம் தாக்கப்பட்டு துஜீவன் இல்லாமல் போன செய்திவந்ததும் அவனது பிறந்தநாட்களில் எடுத்திருந்த படங்கள் அனைத்தையும் கலையரசியின் தங்கை ஜெயந்தினி அதுகளாலும் ஏதும் பிரச்சனைகள் வரலாமென்று மறவன்புலவுக்கு எடுத்துச் சென்றிருந்தாள்.

*

" ஐயாவுக்கு இளனி கொண்டுவரட்டே..."

மாத்தையாவுக்கும் தாகமாகத்தான் இருந்தது.

"சரி, கொடுங்க... மிச்சந்தூரம் போகணுன்னா வுடுங்க வேண்டாம்."

" இதில பின் வளவுக்க நிக்குது நல்ல வத்தாவி இளனி ஐயா... நல்லாயிருக்கும்" என்றபடி பின்வளவுக் குள் ஓடிப்போய் கொக்கையினால் இரண்டு இளனி களைப் பறித்து வந்து வெட்டினார். பயம் கொஞ்சம் தெளிந்து சகஜநிலைக்கு வந்து இளனியை வெட்டிக் கொண்டிருக்கும்போது மாத்தையாவைத் துண்டாய்த் தெரியேல்லை ஆனால் கூடவந்த மற்ற ஆமிக்காரனைத் தான் முதல்ல எங்கேயோ பார்த்தமாதிரி அவருக்கு இருந்தது. ஒட்டுப்படையிலுள்ள தமிழ்ப்பெடியனாய் இருப்பானோ...சாய் அப்பிடியிருக்காது என்று நினைக் கையில் திடீரென்று அவருக்கு அந்த நெல்லியடிச் சம்பவம் நினைவில் தெறித்தது. "ஓ...இவன் அன்றைக்கு ஐஸ்கிறீம் வாங்கிக்குடிச்ச பெடியனல்லே...சரி...சரி இப்போ கொஞ்சம் மீசையும் கறுத்து கூடவே ஆளும் கறுத்துப்போயிருக்கிறான்...அவன்தான் ஆள்; இளனியை வெட்டிக்கொண்டிருக்கும்போது அவர் கண்ட நெல்லியடி முன்னிகழ்வு மனதிலோடியது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் மிதியுந்தில் அரைச்சாக்கு தக்காளிக்காயும், பிஞ்சு மிளகாயும் கட்டிக்கொண்டுபோய் நெல்லியடிச்சந்தை யில் விற்றுவிட்டு மகாத்மா படமடுவத்தைக் கடந்து வந்துகொண்டிருந்தார். அடுத்து வரும் தோட்டவெளி யில் ஈ.பி.டி.பியினரின் பாசறையும், இராணுவமுகாமும் இருக்கின்றன. அந்நிய முகத்தைப்பார்த்து நிறுத்தி ஏதும் குடைவார்களோ என்று உள்ளூரச் சற்று உதறல் இருந்தாலும் மிதியுந்தை மிதித்து வந்து

கொண்டிருந்தார். 14 வயதிருக்கக்கூடிய ஒரு ஐஸ்பழ மிதியுந்துப்பையன் அவரை விலத்திக்கொண்டு செல்லவும் இராணுவமுகாமின் வாசலில் நின்றிருந்த ஒரு இராணுவத்தினன் அவனைக் கைதட்டிக் கூப்பிட்டான். மீசையே சரியாக முளைத்திராத அந்த இராணுவத்தினனுக்கும் வயது 17 அல்லது 18 தானிருக்கும்.

ஐஸ்பழமொன்று தரச்சொல்லிக் கேட்டு விட்டுத் தன் காற்சட்டைப்பையுக்குள் கையைவிட்டு கிடந்த சில்லறைகளை வெளியே எடுத்து எண்ணியபடி

"கீயத மல்லி?" (என்னவிலை) என்றான்.

சிறுவன் " பத்துரூபாய்" எனவும்

அவனிடம் தேறிய சில்லறை ஐஸ்பழத்துக்குப் போதாது போலும்

"யண்ட மல்லி ...எப்பா" (தம்பி நீ போ...வேண்டாம். ) என்றான்.

சிறுவன் "பரவாயில்லை" என்றபடி ஒரு ஐஸ் பழத்தைத் தூக்கி ஒரு நண்பனுக்குக் கொடுப்பதைப் போல அவனுக்கு இலவசமாகவே கொடுத்துவிட்டு தன் மிதியுந்திலேறிச்சென்று கொண்டிருந்தான்.

இவன் அன்று ஐஸ்கிறீம்வாங்கிய அதே இராணுவப்பையன்தான் சந்தேகமே இல்லை. "ஐயா நீங்கள் நெல்லியடி முகாமில வேலை செய்யிறீங் களோ" என்று கேட்கலாமோவென்று ஒரு கணம் நினைத்தார். ஆனாலும் மாத்தையா இருக்கும்போது அவரின் மெய்ப்பாதுகாவலனிடம் பேசுவது மரியாதை யாக இருக்காதென்று விட்டுவிட்டார்.

சண்முகம் இளனியை வெட்டிக் கொண்டிருக்கும் போது கலையரசியின் மூளைக்குள் மின்னல் பொறித்து அந்த அற்புத எண்ணம் வந்தது.

"மெய்யப்பா... ஐயா நல்லவராய்த் தெரியுறார், பிள்ளையின்ர விஸாப்பிரச்சனையை ஒருக்கால் இவரிட்ட கதைச்சுப்பார்ப்பமே..."

"சரி,சரி... கதைச்சுப்பார்ப்பம்"

சண்முகம் கொடுத்த இளனியை சமிந்த நாணயக்கார மாத்தையா ருசித்துக் குடித்துக் கொண்டிருக்கையில் கலையரசி ஏதோ அலுவலாகப் போகிறவள் மாதிரி வீட்டுக்குள்போய் கைபேசியில் மாலதியைக்கூப்பிட்டு "இங்கே ஏதோ "செக்கிங்" செய்யவெண்டு "அவை" வந்திருக்கினம், நான் சொல்லுமட்டும் வீட்டுக்கு வந்திடாதை" என்று எச்சரித்துவிட்டு வெளியே வந்தார்.

மாத்தையா முதலாவது இளனியை ஒரே மடக்கில் குடித்துவிட்டு அடுத்ததைக் குடிக்கும்போது கேட்டார்.

"சொல்லுங்க சம்முவம் இந்தப்போரில புலியள் வெல்லுவாங்களா...?"

"வெல்லுவமெண்டு சொல்லித்தான் இவ்வளவு பெடி, பெட்டையளையும் இழுத்து வைச்சுக்கொண்டு போராடி அழியிறாங்கள்... வெல்லுவாங்களோ இல்லையோ... அதெல்லாம் கடவுள் காட்டிற வழி ஐயா..."

என்றுவிட்டு கண்களைச்சுழற்றி வானத்தைப் பார்த்தார் சண்முகம்.

"நீங்கள் எதை விரும்புறீங்கள்... மனதில வாறதை அப்பிடியே பயப்பிடாம சொல்லுங்கோ... நான் ஆர்மிக்காரன் ஏன்ட பயம் வாணாம்... மின்ன சொன்னமாதிரி இது நாங்கள் செய்யிற ஒரு கருத்துக்கணிப்புத்தான்."

"ஈழந்தான் அமையாவிட்டாலும்... வாழப்பிறந்த இளைஞர்கள் இரண்டுபக்கத்திலும் சண்டையிட்டு மேலும் அழிஞ்சுதொலையாமல் ஒரு நிலைச்ச சமாதானமும், நிம்மதியான வாழ்க்கையும் கெதியில வந்திடோணுமெண்டு விரும்புறன் ஐயா..."

" செரி செரி பார்ப்பம்... சண்டை யாருக்குத் தான் வாணும்... திரும்பி வரமாட்டன் என்று தெரிஞ்சும் அனுராதபுர ஏரோடிறோமைத் தாக்கப் போனானே துஜீவன் அவனுக்கு என்ன சொல்லிக் கொடுத்து வளர்த்தீங்க...அதையுங்கொஞ்சம் சொல்லுங்க... சம்முவம், தனியீழம் இல்லேன்னா இனி எங்களுக்கு மூச்சேவிடேலாமப்போகும் அப்பிடீன்னு ஏதாவது அவனுக்குச் சின்னவயதில படிச்சுக் கொடுத்தீங்களா... "

"சிவசத்தியமாய் அப்படி ஒன்றுமே நாங்க அவனுக்குச் சொல்லிக்கொடுக்கேல்லை ஐயா....எனக்கு அரசியல் விஷயங்களே தெரியாது படிப்பில்லாதவன் ஐயா... இந்தப்போராட்ட விஷயங்கள்பற்றி அவன் எங்களோட ஒண்டும் கதைக்கவும் மாட்டான், மூச்சு விடான் ஐயா... அமைதியாயிருந்த பிள்ளை இயக்கத் துக்கு ஓடினதும்... தொலஞ்சுபோனது எல்லாம் ஒரு கனவைப்போல இருக்கையா...நம்பமுடியேல்ல... எங்கேயோ போயிருக்கிற என்ர பிள்ளை நாளைக்கோ, நாளையின்றைக்கோ திரும்பி எங்களிட்ட வந்திடுவான் போல இருக்கையா..."

சொல்லிமுடிக்கையில் சண்முகம் மீண்டும் உடைந்து விம்மினார்.

"சரி... சம்முவம் நாங்கள் இன்னொரு சமயத்தில பேசிறது...அதுக்கிடேல உங்களுக்கு ஏதாச்சும் என்ட உதவி தேவையெண்டால் எனக்குப் போன் எடுத்துச்சொல்லிட்டு வாசல்ல காத்திருக்காம, நீங்கள் எங்கிட்ட நேரடியா வரலாம்... " என்றுவிட்டுத் தன் விசிட்டிங்கார்ட்டைக் கொடுத்துவிட்டுப்போக எழுந்தார்.

கலையரசி அருகில்வந்து "ஐயாட்ட இப்பவே கேளுங்கோவன் " என்று சொன்னார்.

"நோனா என்ன கேக்கச்சொல்லுது..."

"இல்லை ஐயா என்னுடைய மகளோட விஸா விஷயமாக ஒரு பிரச்சனை"

"என்ன அவளும் இயக்கத்தில இருக்காளா..."

"இல்லை ஐயா அவளுக்கு லண்டனில ஒரு பெடியனைக் கல்யாணம்பேசி வைச்சிருக்கிறம், இந்தியாவில போய்க் கல்யாணத்தை வைக்கலா மென்றால் விஸா எடுக்க இராணுவப்பணிப்பாளரின் அனுமதி தேவையாயிருக்கு...போய் அப்பிளை

பண்ணின்னாங்கள், துஜீவனாலயோ என்னவோ நிராகரிச்சுப்போட்டினம்... ஐயா ஒருக்கால் எங்களுக்கு கருணை காட்டி அதைப் பெற்றுத்தர வேணும்"

சமிந்த நாணயக்காரவுக்கு அப்பா தன் காதலை மறுத்ததுக்காக 18 வயதில் தற்கொலை செய்து கொண்ட சூட்டித்தங்கை பிரதீபாவின் சிவந்த முகம் நினைவில் வந்தாடியது.

ஒரு சிகரெட்டை எடுத்து நிதானமாக வாயில் பொருத்திவிட்டு பெட்டியை சண்முகத்துக்கும் நீட்டினார். சண்முகத்தைச் சிகரெட்டின் வாசம் சபலப்படுத்தினாலும் மரியாதைக்காக மறுத்தார்.

"இல்லை...ஐயா, நான் பத்துறேல்லை..."

"சரி...நெக்ஸ்ட்வீக் எனக்குப் போன் பண்ணிப்போட்டு நீங்க அங்கே போறது... நான் சொல்லிவைக்கிறன்."

சண்முகம் அவரைக்கையெடுத்து வணங்க, கலையரசி குனிந்து அவர் கால்களைத் தொட்டுக் கும்பிட்டார்.

*

சமிந்த நாணயக்கார மாத்தையாவுக்கு போன் பண்ணியபோது அவர் "சம்முவம் நீங்க இங்கேவரத் தேவையில்லை. நீங்கள் முன்னைக்கொடுத்த அப்பிளிகேஷனையே சாங்ஷன்பண்ணி அனுப்பச் சொல்லிச் சொல்லியிருக்கிறன். உங்க பொண்ணுபேர் என்ன?

"மாலதி ஐயா."

"அதுவும் ஒரு போராளியில்லையா..."

"அப்படியெல்லாம் இல்லை ஐயா...இது ஒரு அப்பாவிக்குழந்தை ஐயா "

"இல்லை... "போராளி மாலதி" யைச் சொன்னேன்... பயப்பிடாதீங்க... ஒரு கிழமையில் உங்களுக்கு ஔதென்ரிகேஷன் டொகுமெண்ட் கிடைச்சிடும். கவலைப்படாம இருங்க சம்முவம்... எல்லாம் நல்லபடியாவும்" என்றார்.

மாத்தையா சொன்னபடியே நாலைந்து நாட்களில் இராணுவதிகாரியின் உறுதிப்பாட்டுக் கடிதம் வந்து சேர்ந்தது.

விக்கினங்கள் இல்லாமல் இந்தியவிஸா கிடைக்கவும், அதேமாதம் வாராவாரம் கட்டுக் கட்டாக எழுதும் இலிகிதங்களும் கனவுகளுமாக வாழ்ந்துகொண்டிருந்த கலாமோகன்-மாலதி இணைக்குச் சென்னையில் திருமணமாகியது.

இராணுவத்தில் சில சித்தார்த்தன்களும் இருப்பார்களோ...!

*


(நிலாவரை ஸ்ரீ, அப்பிரதேசத்திலுள்ள மிக ஆழமான மேட்டுநில நீர்ப்பாசனக்கிணறு, சீதையை மீட்க இலங்கைக்கு வந்த இராமன் தன் பரிவாரங்களின் தாகந்தீர்க்க அம்பினால் துளைத்து ஏற்படுத்தியது என்பது ஐதீகம்.)

# வெல்கிறாய் நீ வீழ்கிறேன் நான்

**சாந்தி நேசக்கரம்**


முகில் கூட்டத்தை
அடித்துச் செல்கிறது காற்று.
இருள் வானம் கலைந்த
நீல மேகம்
உன்னைப்போல் தெளிகிறது.
நானும் எனது வானமும்
இருள்கிறோம்.
ஈரக்காற்று ஊசி வைத்து
என்னில் முட்டுகிறது
தூறத் தொடங்குகிறேன்.
பெருமழையின் கனம்
இருவிழியின் வழி
பெருநதி ஊற்றாய்
சொட்டுகிறது.
தத்துவங்களால்
என்னை நிரப்புகிறாய்.
தெளிவாகவே வார்த்தைகளைக்
கோர்த்து விளக்குகிறாய்.
தொலைகிறேன் - என்
மூங்கில் வனம் மீது
உன் சொற்கள்
நெருப்பு மூட்டுகிறது.
நெஞ்சுக்குள் ஒளிந்து கிடந்த
புல்லாங்குழல்
முகாரி இசைக்கத் தொடங்குகிறது.
மனம் அமாவாசையை
அனுமதியின்றி
அணைத்துக் கொள்கிறது.
தெளிந்த நீரோடையின் அமைதி
உன் கண்களில்.
புன்னகையால்
வெல்கிறாய்
புயல் புகுந்த தெருவில் நான்
உதிர்ந்து விழுகிறேன்
தாங்கும் க (ம)ரமின்றி
தனிக்கிறேன்.





# சுரோடிங்கரின் பூனை

■ இ.சு.முரளிதரன் ■





"அது நகர்கிறது. ஆனால் அது நகரவில்லை" என்கிறது பகவத் கீதை! "இருக்கு ஆனால் இல்லை" என்கிறது தமிழ் சினிமா ஒன்றின் வசனம்! இத்தகைய இருமை நிலையினை, த. அஜந்தகுமாரின் "நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன்" கவிதைத்தொகுதி குறித்த விமர்சனமும் எதிர் நோக்கியுள்ளமை அவதானத்திற்குரியது. 23.02.2017 அன்று வெளியீட்டு விழாவில் நிகழ்ந்த விமர்சனங்களின் தேறிய பெறுமானம் கவித்துவ இருப்பிற்கு எதிராகவே அமைந்திருந்தது. பின்னர், பத்திரிகைகளிலும் சிறு சஞ்சிகைகளிலும் வெளிவந்த விமர்சனங்களோ கவித்துவ இருப்பினை ஆழமாக உறுதிப்படுத்தும் வகையிலே தான் அமைந்தன. நண்பர் இராஜேஷ்கண்ணனின் விமர்சனமே "சுரோடிங்கரின் பூனையாகவே" (Scrodinger's cat) அமைந்திருந்தது. இலக்கிய உலகிலே இருமைநிலை என்பது வியப்பிற்குரியதன்று. அனைத்து படைப்புகளின் விமர்சனங்களும் "சுரோடிங்கரின் பூனையாகவே" நோக்கப்படுகின்றன. அதென்ன சுரேடிங்கரின் பூனை? என சிலரிடம் கேள்வி எழலாம்! அவர்களுக்கான எளிய விளக்கம்...!

ஒரு இரும்புப்பெட்டியில் பூனையொன்றும், ஐதரே சயனைற் (HCN) குடுவையொன்றும், சுத்தியல் ஒன்றும், கதிரியக்கத் தன்மை கொண்ட பொருள் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளன. கதிரியக்கத் தன்மை கொண்ட பொருளில் ஒரு அணு சீர் குலைந்தால் சுத்தியல் குடுவையைத் தாக்கி ஐதரே சயனைற் வெளிப்பட்டு பூனை இறக்கலாம்!(பெட்டியைத் திறந்து பாரகாத வரையில்) குவாண்டம் இயங்கியல் விதியின் நேரடுக்குப் பண்பின் படி பூனை உயிருடனும், உயிரற்றும் இருநிலைகளும் கலந்த நிலையில் உள்ளது என்னும் முரண் தரு முடிவிற்கே வருகிறோம். (பெட்டியைத திறந்து நோக்கும் போது குவாண்டம் இயங்கியில் விதியின் நேரடுக்குப்பண்பு பாதிக்கப் படுகிறது)

கடலின் ஆழத்தை விட "கடல்" என்ற வார்த்தையின் ஆழம் அதிகமானது! கடல் அழிவின் வடிவமாகவும் - வாழ்வின் ஆதாரமாகவும் முரண் இயங்கியலை உடையது! அரசியல், சமூகவியல், அழகியல், பொருளியல் என வெவ்வேறு அர்த்தத் தளங்களுக்குரியது. இத்தகைய "கடலை பரிசாகக் கொடுத்த அனுபவத்தினை தொற்றச் செய்யவே அஜந்தகுமாரின் தொகுதி முயன்றது.

"ஒரு நாள்
கடலின் நீலத்தினால்
உடலெல்லாம் விஷம்
பாரிக்க வைத்தாள்"

என கடலின் நீலத்தினை அரசியற் குறியீடுசார்ந்தும்உணரச்செய்திருந்தார்.

"என் முன்னால் உடைந்து
விழுந்திருக்கும் சருகுகளில்
யாருடையவோ
கைரேகைகள் இருக்கின்றன
கைரேகைகளில் ஒளிந்திருக்கும்
ஓவியத்தின்
கோடுகளில் பயணம் செய்கிறேன்
இன்னொரு ஓவியத்தை வரைந்தபடி!"

என்னும் வரிகளை நோக்கும் போது த.அஜந்தகுமார் இரும்புப் பெட்டி யில் வைத்த பூனையின் உயிர்ப்பினை உணர்ந்து கொள்கிறோம்.

"அழும் குழந்தைக்கு
மார்புக் கச்சையை அவிழ்க்கத்
தெரிந்திருந்தது
அவளுக்கும் சாவின் கதவுகளைத்
திறக்கத் தெரிந்திருந்தது
இருவருக்கும் அடைக்கலம்
கொடுக்கக் கிணற்றுக்குத்
தெரிந்திருந்தது"


என்னும் வெளிப்படையான வரிகளை நோக்கும் பொது பூனையின் உயிர்ப்பிலே சந்தேகம் எழுகின்றது. இருநிலை இருப்பினையும் உள்வாங்கிய இரும்புப் பெட்டியாக "நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன்" அமைந்துள்ளது. நிஜத்தினை உணர்ந்து கொள்ள ஒவ்வொரு வாசகரும் கவிதைத் தொகுதியினை வாசித்தல் அவசியமாகின்றது. இரும்புப் பெட்டியைத் திறக்கும் போது பூனை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிலையிலே தெரிய வாய்ப்புள்ளது!


# நேர்காணல்

## மலரன்னை

சந்திப்பு : க.பரணீதரன்










**அற்புதராணி காசிலிங்கம் அவர்கள் மலரன்னை என்னும் புனைபெயரில் 1993 இல் இருந்து தன் படைப்புகளை படைத்து வருகின்றார். இவர் கச்சாயில் இராசரத்தினத்தின் புதல்வி. மலரவனின் தாயார். சிறுகதை, கவிதை, நாவல், குறநாவல், நாடகம் என இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் நன்கு பரிச்சயம் மிக்கவர். இதுவரை 5 நூல்களை இலக்கிய உலகிற்கு தந்துள்ளார். தொடர்ந்து தனது எழுத்து செயற்பாட்டை மேற்கொண்டு வரும் மலரன்னையின் நேர்காணலை ஜீவநதி வாசகர்களுக்காக தருகின்றோம்.**



**பரணீ:**

**உங்களைப் பற்றி... உங்கள் குடும்பம் பற்றி...**

**மலரன்னை:**

எனது பெயர் அற்புதராணி காசிலிங்கம். மறைந்த எழுத்தாளர் "கச்சாயில் இரத்தினம்" எனதுதந்தையார். அவர் இலக்கியத்துறையில் ஈடுபட்டு சிறுகதை, நாவல், வானொலி நாடகம் என பலதுறைகளிலும் பிரசித்தி பெற்றவர். அவருடைய "பாட்டாளி வாழ்க்கையிலே" எனும் குறுநாவலும் "வன்னியின் செல்வி" என்ற நாவலும் நூலுருப்பெற்ற படைப்புகள். அவர் இலக்கை வானொலிக்கு பல நாடகங்களையும், தொடர் நாடகங்களையும் எழுதியிருக்கிறார். எனது கணவன் ஒரு மருத்துவர் எமக்கு நான்கு ஆண் குழந்தைகள். அவர்களுள் இருவர் மருத்துவர்களாகவும் ஒருவர் ஆசிரியராகவும் கடமை யாற்றுகிறார்கள். இளைய மைந்தன் மலரவன். எனது மூத்த புதல்வனும் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். அவரும் சில நூல்களை வெளியிட்டிருக்கிறார்.

**பரணீ:**

**படைப்பிலக்கியத்தில் நீங்கள் ஈடுபட ஆரம்பித்த காலம்... அதன் பின்னணி பற்றி கூறுங்கள்?**

**மலரன்னை:**

எனது குடும்ப வாழ்க்கை அமைதியாக நகர்ந்து கொண்டிருந்தபோது பெரும் பேரிடியாக வந்த இளைய மைந்தனின் இழப்பு அதிர்ச்சியை மட்டுமல்ல... மீள முடியாத சோகத்தின் விளிம்பிற்கே தள்ளவிட்டது. பிரிவுத்துயரினால் தத்தளித்த என்னை ஆசுவாசப்படுத்தும் நோக்கத்தோடு எழுதுமாறு எனது மூத்த மைந்தன் வற்புறுத்தினார். அதன் பிரதிபலிப்பாய் நான் கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினேன். அத்துடன் எனது இளைய மைந்தன் பாதி வழியில் விட்டுப்போன அவனது எழுத்துலகப் பணியைத் தொடர வேண்டும் என என் மனதிலும் ஓர் உந்துதல் ஏற்படவே, "மலரன்னை" எனும் புனைபெயரில் நான் எழுதத்தொடங்கினேன். எனது நாற்பத்தொன்பதாவது வயதில் 1993 ம் ஆண்டு நான் எழுத்துலகில் கால் பதித்தேன்.

பரணீ:

**சிறுகதைத் துறையில் அதிக ஈடுபாடு ஏற்பட காரணம் என்ன? எத்தனை சிறுகதைத் தொகுதிகள் வெளியீட்டுள்ளீர்கள்?**

மலரன்னை:

நான் எழுதும் போது எனது சிந்தனை சுற்றுச் சூழலிலிருந்து விடுபட்டு , நான் உருவமைக்கும் பாத்திரங்களுடன் ஒன்றிப்போய் விடுவது வழக்கம். எமது சமுதாயத்தில் மக்கள் படும் அவலங்களை துன்ப துயரங்களைக் கண்ணுறும் போது என் மனம் பாதிப்படைகிறது. அந்தப் பாதிப்பை எமது சமூகத்தவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உந்துதல் ஏற்படும் போது சிறுகதைதான் அதற்குப் பொருத்தமான இலக்கியவடிவம் எனக் கருதினேன். அதுவே எனக்கு அத்தருணத்தில் ஆத்ம திருப்தியை ஏற்படுத்தியது என்பதையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும். சமகால நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட எனது படைப்புகள், அதன் மூலம் நான் முன்னெடுக்கும் கருத்துகள் வாசகர் உள்ளங்களில் பதியக் கூடியதாக அமைய வேண்டும் என்பதே எனது நோக்கம். நான் எழுதிய முதலாவது சிறுகதை "பருந்தின் பசி" ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரமாகியது. இரண்டாவது கதை தமிழ்த்தாய் மன்றம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றது. இவை எனது சிறுகதைத் துறைக்கு ஆர்வத்தையும், உந்து சக்தியையும் தந்தது வலுவூட்டியதை என்னால் நினைவு கூராமல் விடமுடியாது.

நான் இதுவரை மூன்று சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கிறேன். 1993 ம் ஆண்டுப் பகுதியிலிருந்து நான் எழுதி வந்த போதிலும் 2015ம் ஆண்டு தான் எனது முதற் சிறுகதைத் தொகுதியான "வேர் பதிக்கும் விழுதுகள்" நூலுருப்பெற்றது. பதினாறு சிறுகதைகளைக் கொண்ட இத்தொகுதியை வெளியிட்ட பின்னர் 2016ம் வருடத்தில் எனது இரண்டாவது சிறுகதைத்தொகுதியை வெளியிட்டேன். "கீறல்" என்ற தலைப்புடன் வெளிவந்த இத்தொகுதியில் மொத்தமாக இருபத்தி மூன்று சிறுகதைகள் அடங்கி யுள்ளன. கடந்த வருடமான 2017 ல் "அனலிடைப் புழு" எனும் தலைப்புடன் இருபத்தி ஐந்து சிறுகதைகளைக் கொண்ட மூன்றாவது தொகுதியை நூலுரு வாக்கினேன்.

அறுபது வரையிலான எனது சிறுகதைகள் ஆவணமாக்கப்படாமலேயே போர்க்கால சூழலினால் அழிந்து போய்விட்டதனால் என்னால் இயன்றவரை கைவசமிருக்கும் சிறுகதைகளை நூலுருவாக்க வேண்டுமென்பதே எனது நோக்கமாகும்.

பரணீ:

**ஈழ விடுதலைப் போராட்டம் தொடர்பான உங்கள் எண்ணம் யாது? உங்கள் படைப்புகளில் ஈழவிடுதலைப் போராட்டம் தொடர்பாகச் தொட்டுச் சென்றுள்ளீர்களா?**

மலரன்னை:

இந்தக் கேள்விக்கு என்னிடம் நேரிடையான பதில் இல்லை. இருந்த போதிலும் என மனதில் பதிந்திருக்கும் சில விடயங்களை சுருக்கமாக விளக்க முயலுகிறேன். தன்மனமுள்ள எந்தவொரு மனிதனும் தன் பரம்பரை வாழ்ந்து சிரித்த முதுசமான வீட்டை பிறர் ஆக்கிரமிப்பதையோ, அழிப்பதையோ விரும்ப மாட்டான். இன அழிப்பிலிருந்து தம்மவரை பாதுகாக்கவும், ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடவும்,இளம் பெண்கள் மீதான வல்லறவுக் கொடுமைகள்போன்ற இன்னோரன்ன கெடுபிடிகளிலிருந்து மீள வேண்டுமென நினைப்பது மனித இயல்புதான். தவிர தட்டிக் கேட்காமல் மௌனம் சாதிப்பது அல்லது அடிபணிந்து போவது எந்த வகையிலும் பொருந்தும்.

எம்மவர்கள் சுயநலத்தையும் சுயலாபத்தையும் கருத்தில் கொண்டு ஒரு குறுகிய வட்டத்துக்கள் வாழ்ந்த அந்தக் காலப்பகுதியில் அந்த இருண்ட எல்லைக்குள்ளிருந்த அவர்களை வெளிச்சமுள்ள வெளிப் புறத்துக்கு கொண்டு வருவதற்காக எனது பேனா அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருக்கிறது. எனது ஆரம்ப கால எழுத்துக்களில் சமூகத்தின் எழுச்சி, ஒற்றுமை போன்றவையே கருப்பொருளாக அமைந்திருந்தன. எனது படைப்புக்கள் காலத்தின் கண்ணாடியாக அமைய வேண்டும் என்பதில் நான் மிகுந்த அக்கறை காட்டுவது வழக்கம். இடப்பெயர்வினால் எம்மக்கள் பட்ட அவலங்களை மையப்படுத்திய சிறுகதைகள் நாடகங்கள் பலவற்றையும் எழுதியிருக்கிறேன். இந்த மண்ணில் தமது மூதாதையர்கள் பட்ட இன்னல்களை எமது இளம் சந்ததியினர் அறிய வேண்டும். நாம் கடந்து வந்த பாதையை வரலாற்று நிகழ்வுகளை, இழப்புகளை... எழுத்துருவாக்கி, அவை ஆவணமாக்கப்பட்டு... அவை எமது இளம் தலைமுறைக்கு போய்ச் சேர வேண்டும் என்பது எனது குறிக்கோள்.

பரணீ:

**நீங்கள் மூத்த பெண் எழுத்தாளர் என்ற வகையில் ஈழத்துப் பெண் எழுத்துக்கள் தொடர்பாக உங்கள் கருத்து...**

மலரன்னை:

வயதளவில் நான் மூத்த எழுத்தாளராக இருக்கலாம். இருந்தபோதிலும் ஆக்கத் திறமையில் என்னை விடவும் மூத்த பெண் எழுத்தாளர்களின் வழித்தடங்களைப் பின்பற்றித்தான் நான் எழுத்துலகில் சஞ்சரிக்கிறேன். உதாரணமாக பத்மா சோமகாந்தன், கோகிலா மகேந்திரன், தாமரைச் செல்வி, பாலேஸ்வரி போன்ற மாபெரும் பெண் எழுத்தாளர்களைக் குறிப்பிடலாம். இன்றைய காலகட்டத்தில் எமது நாட்டில் எழுத்துத் துறையில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஆக்க இலக்கியப் படைப்பாளிகளாக, நாவலாசிரியர்களாக, பாடலாசிரியர்களாக, இன்னும் பல்வேறு திறமை கொண்டவர்களாக

பெண்கள் இன்று காணப்படுகின்றனர். அவர்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளை, சமகால நிகழ்வுகளை கூர்மையாக அவதானித்து தத்ரூபமாக எழுதுவது என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது. இன்றைய இளம் தலைமுறைப் பெண்களின் உத்வேகமான எழுத்துப் பிரவேசம் எனக்கு மகிழ்வினைத் தந்த போதிலும் ஒபபீட்டளவு ரீதியாக பெண்களின் பங்களிப்பு போதுமானதாக இல்லை என்பதே எனது கருத்து. கவிதைத்துறையில் அவர்கள் காட்டும் ஆர்வம் ஏனைய இலக்கியத்துறைகளில் அரிதாகவே இருக்கிறது. இதுவே எனது ஆதங்கமும் கூட.

**பரணீ:**

**ஈழத்துப் பெண்கள் அடக்குமுறைகளில் இருந்து சுதந்திரம் அடைந்து விட்டதாக கருதுகிறீர்களா?**

**மலரன்னை:**

அடக்குமுறைகளிலிருந்து பெண்கள் முற்று முழுதாக சுதந்திரம் அடையாவிட்டாலும் ஆரோக்கிய மான முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்பது எனது கருத்து. பெண்களைப் பொறுத்தவரையில் என்னதான் படிப்பு, பட்டம், பதவி என்று ஆணுக்கு நிகராக நின்று உரைத்தாலும் குடும்பம் என்ற கூட்டுக்குள் பெண்தான் குடும்பநிர்வாகத்தை கவனிக்க வேண்டிய கட்டாயத் துக்கு ஆளாகிறாள். ஆயினும் சில ஆண்கள் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வீட்டு நிர்வாகம், குழந்தைகளின் பராமரிப்பு போன்ற விடயங்களில் மனைவிக்கு ஒத்தாசையாக இருந்து செயற்படுவதையும் நாம் காணக் கூடியதாகயிருக்கிறது. எனினும் ஆணை விட பெண் உயர்ந்த பதவி வகிக்கும் சில குடும்பங்களில் தாழ்வு மனப்பான்மை எனும் உணர்வு மேலோங்குவ தால் அங்கு பெண் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

ஆணுக்குப் பெண் நிகர் என்று மார்தட்டா விட்டாலும், பாமர பெண்களைப் போல் இன்றைய படித்த பெண்களும் பிற்போக்குக் கொள்கைகளை கடைப் பிடிக்காமல் சுயமாகச் சிந்திக்கவும் தமது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளவும் முன்வர வேண்டும். அநீதி இழைக்கப்படும்போது அதைத் தட்டிக் கேட்கும் தைரியத்தையும் பெற்றிருத்தல் அவசியம். அதற்காக வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவதோ அல்லது வேறு விதமாக எதிர்ப்புக்காட்டவோ வேண்டிய அவசிய மில்லை. அன்பினால் எவரையும் நெறிப்படுத்த லாம். இதமான வார்த்தைகளாலும், செயலினாலும் எதையும் சாதிக்க முடியும். இது எனது கருத்து.

**பரணீ:**

**ஈழத்து நாவல் வரலாற்றில் உங்கள் மகன் மலரவனின் "போர் உலா" முக்கியமான ஈழத்து போராட்ட கால நாவலாக விளங்குகின்றது. இன்றுவரை அந்த நாவல் பற்றி பலர் குறிப்பிடுகிறார்கள். அந்நூல் பற்றிய உங்கள் கருத்து...**

**மலரன்னை:**

மலரவன் தனது கள அனுபவங்களை அவ்வப்போது தனது நாட்குறிப்பேட்டில் பதிந்து வைத்திருந்தார். அவரது ஆக்கத்திறமையினாலும் சொல்வளத்தினாலும் சம்பவங்களை மெருகூட்டி வர்ணித்திருப்பதால் அது நாவலாக உருப்பெற்று விளங்குகிறது. நாவலின் முதற்பதிப்பு 1993 ம் ஆண்டில் வெளிவந்தது. அதே ஆண்டுக்கான யாழ். இலக்கியப் பேரவையின் தேர்வில் சிறந்த நாவலுக்கான பரிசினையும் பெற்றுக் கொண்டது.

இதுவரையில் "போர் உலா" தமிழகம் உட்பட வெவ்வேறு நாடுகளிலும் ஐந்து தடவைகள் மீள்பதிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதே சமயம் இந்நாவல் நியூசிலாந்தில் வாழும் ஈழத்தமிழரில் ஒருவரான மாலினி என்பவரால் War Journey என்னும் தலைப்பில் ஆங்கிலத் தில் மொழியாக்கம் செய்யப்பட்டு, அந்நூல் பென்குவின் பதிப்பகத்தால் மே 2013 ல் வெளியிடப் பட்டுள்ளது.

தவிர "போர் உலா" நாடகமாக பிரதியாக்கம் செய்யப்பட்டு வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டது. அத்துடன் உள்ளூர், வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் தொடராக வெளிவந்தது.

போர் உலாவுக்கு அடுத்ததாக அவர் சிலாவத் துறை தாக்குதல் மீதான அனுபவங்களை எழுத்து வடிவத்தில் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தீர்மானித்திருந்த வேளையில் சற்றும் எதிர்பாராத வகையில் அவரது கை ஓய்ந்து போனது.

**பரணீ:**

**மலரவனின் நூலுருப்பெற்ற படைப்புகள் பற்றி கூறுங்கள்?**

**மலரன்னை:**

மலரவன் தன்னால் எழுத்துருவாக்கம் செய்யப்பட்ட சில கையெழுத்துப் பிரதிகளைத் தந்து அவற்றை வாசித்துப் பார்த்துஅபிப்பிராயம் கூறுமாறு என்னிடம் கேட்டிருந்தார். எனினும் அவற்றை நான் வாசிக்கு முன்னரே அவர் மறைந்து எங்களை பேரதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டார்.

சுமார் ஆறுவருடங்களின் பின் 1998 ம் ஆண்டு அவரது சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் போன்றவற்றைத் திரட்டி ஒரு நூலாக்கினோம். அவரது கவிதையொன்றின் தலைப்பான "என் கல்லறையில் தூவுங்கள்" என்ற பதத்தையே நூலுக்கும் இட்டோம். அத்துடன் அவரது ஹைக்கூ கவிதைகளை தனியாக ஒரு நூலாக்கினோம்.

ஆயினும் அவரது நாவலான "புயற்பறவை" 2003 ம் ஆண்டு தான் நூலுருப்பெற்றது. அந்த நாவலுக்கு 2003 ம் ஆண்டுக்கான சிறந்தநாவல் பரிசு, வடமாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் வைத்து வழங்கப்பட்டது.

**பரணீ:**

**ஈழ இலக்கிய வரலாற்றிலும், விடுதலைப்போராட்ட வரலாற்றிலும் மலரவன் பங்கு பற்றிக் கூறுங்கள்...**

**மலரன்னை:**

*சிறு வயதிலிருந்தே மலரவன் ஆளுமைமிக்க ஒருவராக இருப்பதை நான் அவரது செயல்கள் மூலம் அவதானித் திருக்கிறேன். தான் எடுத்துக் கொண்ட பொறுப்புகளை அதி சிறப்பாகச் செய்ய வேண்டுமென்பதில் தீவிரமாக இருப்பார். தனது நலனைக் கவனிக்காமல் தான் பொறுப்பெடுத்த கடமையே கண் எனக் கொண்டு இரவு பகல் என்று பாராமல் உழைப்பார். அவரது பொறுப்பாளர்கள் அவரைப்பற்றி விமர்சிக்கும் போது "குறைந்த பேச்சு நிறைந்த செயல்" என் றுபோற்றுவதை நான் கேட்டிருக்கிறேன். அவர் யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளராக இருந்த போது, மாணவர் நலத்தைப் பேணுவதற்கான முயற்சிகள் பலவற்றை முன்னெடுத்தார். மாணவர்களுக்கென ஒரு சஞ்சி கையை உருவாக்குதல், வானொலியில் அவர்களுக் கென ஒரு தனி நிகழ்ச்சி ஒலிபரப்பாக வேண்டுமென்ற கருத்துக்களை முன் வைத்திருந்தார். அவரது முயற்சி யினால் தான் முதன் முதலாக பாடசாலைகளில் மாணவர்களின் பாண்ட் வாத்தியக் குழு உருவாக்கப் பட்டது.*

*இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் அவருக்கு ஈர்ப்பு இருந்தது, அதனால்தான் இருபது வயது வாலிபனால் இரண்டு பரிசுபெற்ற நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் என உருவாக்க முடிந்தது.*

**பரணீ:**

**சிறுகதைத் துறையை விட உங்களுக்கு ஈடுபாடான துறைகள் பற்றி கூறுங்கள்?**

**மலரன்னை:**

*நாவல், குறுநாவல் ஆகிய துறைகளில் நான் தற்போது கவனம் செலுத்தி வருகிறேன். நாவல்களை நான் எழுதியிருந்தாலும் முதன் முதலில் நூலுருப்பெற்ற நாவல் "மறையாக சூரியன்". மறைந்த எனது மைந்தனின் வாழ்க்கை வரலாற்றுப் பதிவு அது. 2016 ல் வெளிவந்த அந்த நாவலுக்கு "முத்துமீரான் விருது" கிடைத்திருக்கிறது. 2017 ல் வெளிவந்த நாவல் "மௌனத்தின் சிறகுகள்". இது ஒரு சமூக நாவல். மற்றொரு நாவலான "பாலைவனத்துப் புஸ்பங்கீள்" கலாசார அலுவல்கள் திணைக்கள மற்றும் உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஒன்றிணைந்து நடத்திய போட்டியில் பரிசு பெற்றது. இன்னும் சில நாவல்களை நான் எழுதியிருந்தாலும் இவைதான் குறிப்பிடக்கூடிய மூன்று நாவல்கள். குறுநாவல்கள் சிலவற்றையும் எழுதி யுள்ளேன். அவற்றுள் மூன்றைத்தொகுத்து ஒரு நூலுருவாக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது.*

*நாடகத்துறையிலும் ஆர்வம் காட்டி வந்துள்ளேன். மோல்டே தமிழ் கலாசார மன்றம் நடாத்திய நாடகப் போட்டியில் பரிசு பெற்றிருக்கிறேன். முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட நாடகங்களும், நாற்பத்தி மூன்று அங்கங்களைக் கொண்ட தொடர்நாடகமும் எனது பி ரதியாக்கத்தினால் வானொலியில் ஒலிபரப்பாகி யிருக்கிறது.*

*1994 ம் ஆண்டு காலப்பகுதியில் எம் மண்ணி லிருந்து வெளிவந்து கொண்டிருந்த Hotspring ஆங்கிலப் பத்திரிகைக்கு கவிதை எழுதினேன். இடப்பெயர்வு காரணமாக பத்துக்கவிதைகளுடன் அந்த முயற்சி நின்று விட்டது.*

**பரணீ:**

**உங்கள் நூல்களின் வெளியீட்டு விழா நிகழ்வுகள் பற்றி கூறுங்கள்?**

**மலரன்னை:**

*இதுவரையில் நான் மிகச்சில நூல்களையே அச்சமைத் திருக்கிறேன். எனது உடல்நிலை காரணமாக நான் விழாக்களில் பங்கு பற்றுவதில்லை. இருந்த போதும் எனது "மறையாத சூரியன்" நாவலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் 2016 ல் வெளி வந்த "கீறல்" என்ற சிறுகதைத் தொகுப்பினையும் இணைத்து இரண்டு நூல்களையும் வெளியீடு செய்யலாம் என விருப்பம் ஏற்பட்டது. "எழு கலை இலக்கியப் பேரவை" எனது நூல்களை வெளியீடு செய்ய முன் வந்ததால் நான் நிறைவடைந்தேன். ஏனைய மூன்று நூல்களுக்கும் வெளியீடு செய்யவில்லை.*

**பரணீ:**

**ஈழத்து இன்றை இலக்கிய முயற்சிகள் பற்றிய உங்கள் கணிப்பீடு...**

**மலரன்னை:**

*இன்றைய காலகட்டத்தில் வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் இலக்கிய முயற்சிகள் ஆர்வத்துடன் மேற்கொள்ளப்படுவதை நாம் அறிகிறோம். இளம் தலைமுறையினர் பலர் முனைப்புடன் செயற்படு கின்றனர். அவர்களது படைப்புகளில் வெறும் கற்பனை மட்டுமல்ல. யதார்த்தமும் இருக்கிறது. உணர்வு பூர்வமான அவர்களது எழுத்துக்களை வாசிப்பதற்கான வாசகர் வட்டம் மட்டும் குறுகிப் போய்கிடக்கிறது. குறிப்பிட்ட ஒரு சில ஆர்வமுள்ள இலக்கியப் பிரியர்களே வாசிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். இது விசனத்துக் குரிய ஓர் விடயம். இன்றைய எமது வாழ்வியலின் இரண்டறக் கலந்துவிட்ட நவீன தொலைத்தொடர்புச் சாதனங்களில்தான் அதிகமானோர் கவனம் செலுத்து கிறார்கள். முகநூலில் பதிவாகும் இலக்கியப் படைப்புக் களையும் அத்துறையில் ஆர்வமுள்ளோர் மட்டும் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றனர். நிறைய நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவை ஆர்வமுள்ள வாசகர்களைப் போய்ச் சேருவதில்லை. இலக்கியப் படைப்புக்கள் வாசகர்களின் மனதைத் தொட்டால்த் தான் படைப்பாளிக்கு அது வெற்றியைத் தரும்.*

க.சட்டநாதன்



# உறையும் உணர்வுகள்

இப்ப எனக்குப் பன்ரெண்டு வயது. பக்கத்தில இருக்கிற கல்லூரியிலதான் படிக்கிறன். ஆறாம் வகுப்பு. ஸ்கொலஷிப்பெல்லாம் பாஸ் பண்ணினனான். ஆனால், பட்டணம் போய் படிக்க அம்மா விடேல்லை. அவவுக்குப் பயம். நான் சின்னப் பெட்டை; அதோட நல்ல வடிவு. ஊரெல்லாம் காவாலிப் பெடியள். 'பட்டண மெல்லாம்போய் நான் வரேலுமா...?' எண்ட நினைப்பில என்னை அங்கை இங்கை எல்லாம் போகாமல் மறிச்சுப் போட்டா...

இப்ப நான் படிக்கிற பள்ளிக்கூடம் பெரிசு. வீட்டுக்குப் பக்கத்தில இருக்கு. கலவன் பாடசாலை. பொம்பிளைப் பிள்ளையள் மட்டும் படிக்கிற பாட சாலை எனக்கு விருப்பம் - எண்டாலும் இதிலையும் எனக்கு விருப்பம் இருக்கு. இஞ்ச படிச்சால் ஏ.எல். வரை படிக்கலாம்.

பள்ளியில் படிக்கிற பிள்ளையள் நல்ல மாதிரி. ரதீஸ், பல்லவி, ரூபன் எண்டு எல்லாரும் என்ரை ஃபிரண்ட்ஸ். பல்லவி அச்சாப் பெட்டை. என்னில அவளுக்கு உயிர். கதைக்கேக்க முத்துச் சொரியும்.

"என்னடி உன்ரை வடிவு.... குவிஞ்ச உதடுகள், செப்புவாய், நேர் கோடு போல மூக்கு, உயிரையே எடுக்கிற மாதிரிப் பென்னம் பெரிய கண்கள், நீண்ட வழுவழுத்த கழுத்து, பவுண் பூசின மாதிரியொரு நிறம்..!

இதை என்னைக் காணிற நேரமெல்லாம் அவள் திரும்பத் திரும்பச் சொல்லி மாஞ்சு போவாள்.

ரூபனுக்கும் என்னில சரியான விருப்பம் "சுதா உன்னைத் தொட்டுப் பாக்கட்டா...?" எண்டு ஒரு நாள் கேட்டான்.

"ம்..." எண்டன்.

அவன் அவசர அவசரமாக என்ரை உதடுகளை விரல்களை குவித்துப் பிடித்தபடி.. "பஞ்சு மாதிரி இருக்கு பெட்டை" எண்டான். பின்ன ஏதும் சொல் லாமல் கன்னத்தை தொட்டு லேசாய் நுள்ளினான்.

அந்தச் சேட்டை எனக்கு ருசியாயிருந்தது.

ரதீஸாம் நல்ல பிள்ளை. நான் பள்ளிக்கூடம் போகேக்கையும் வரேக்கையும் நிழலாய் என்னோட வருவாள். சில வேளைகளில் என்ரை புத்தகப் பையையும்தானே காவுவாள்.

இன்னும் சதீஸ்,ரகு,திலீப் எண்டு கன பொடியங்கள் என்ரை வகுப்பில இருக்கினம். அவையள் அதிகம் கதைக்க மாட்டினம்.சிரிப்பதோடு சரி.... நானும் அவையளைப் பார்த்துச் சிரிப்பன்.திலீப் கொஞ்சம் வெக்கறை.கிட்ட வர மாட்டான்.நான் பார்க்காத நேரம் பார்ப்பான்.அது எனக்குத் தெரியும். எனக்குத் தெரியுமெண்டு அவனுக்கும் தெரியும். அவனுக்குக் கிட்டவாகப் போனால் சிவக்க,கண்களை மூடிக் கொள்வான்.உதடுகள் மட்டும் மலர்ந்திருக்கும். கணக்கில அவன் விண்ணன்.தெரியாத கணக்கெண்டு கேப்பமெண்டு கிட்டப் போனாலும் சொல்லித் தராமல் ஒதுங்கிக் கொள்வான்.வகுப்பில அவன்ரை பட்டப்பெயர் "லேடி" அவன்ரை கூச்சம் தான் அந்தப் பேரை அவனுக்குத் தேடித் தந்தது.அவன் என்னைப் பார்க்கேக்கை என்ரை உசிரே அவனோடை ஒட்டி யிருப்பது போல இருக்கும். எனக்கு அவனில நல்ல விருப்பம்.

தமிழ்,விஞ்ஞானம்,ஆங்கிலப் பாடமெண்டு வந்தால்,வகுப்பில என்னை அடிக்க ஆளில்லை. இப்பாடங்களில் என்னோட சமனாய்ப் போட்டி போடுகிறது திலீப் தான்.

மதி ரீச்சர் தான் எங்களுக்குத் தமிழ். படிப்பிக் கேக்கை பாடத்தில லயித்து,ஒன்றி தன்னை மறந்து பாடம் நடந்து வா!பாடத்துக்கு வெளியில போயும் அவ படிப்பிப்பா....! பாரதி பாடலெண்டா அவவுக்கு உயிர்.எதைப் படிப்பிச்சாலும் மனசில பதியிற விதமா அவவால படிப்பிக்க முடியும்.

எனக்குக் கிட்ட வரும்போதெல்லாம் "ஏன்ரி பெட்டை இவ்வளவு வடிவா இருக்கிற...! கவனம் ஆரன் உன்னை ராஞ்சிக் கொண்டு போயிடு வாங்கள்..." எண்டு மெல்லமாய்ச் சொல்லுவா...!

அட நான் அவ்வளவு வடிவா...? இந்த ரீச்சர், என்ரை அம்மா எல்லாரையும் விடவா நான் வடிவு. அவையள் பளிச்சிடும் சூரியனெண்டால் நான் வெறும் சற்றிலைற் தான்.

ரீச்சர் இதைச் சொல்லேக்க, கொஞ்சம் பெருமையா, மனசு பொங்கிற மாதிரி இருக்கும். அதோட பயமாவேற இருக்கும். பயத்தில முழி சாட்டம் போடுவன். அப்பை ரதீஸ்தான் என்ரை முதுகைத்தடவி நிதானப்படுத்துவாள்.

எங்கட விஞ்ஞான ஆசிரியர் முகுந்தன் ஸேர் ஒரு மாதிரி... நல்லாய் படிப்பிச்சாலும் பெட்டை யளில நல்ல விருப்பம். அவையின்ரை வெடிலை மூச்சு முட்டும் வரை உறிஞ்சி எடுப்பார். விடலை நாம்பன்ரை சேமறிக்குணம் எல்லாம் அவரிட்ட நிரம்ப இருக்குது. குறிப்பா எனக்குப் பக்கத்தில வரேக்க, கொஞ்சம் சாய்ஞ்சு நடந்து வந்து உணர்ச்சி வசப்படுறது எனக்குத் தெரியும். ரதீஸ் இதைக் கவனிச்சு என்னைப் பல தடவையள் உசார்ப்படுத்தி இருக்கிறாள். அவர் எனக்குக்கிட்டவாக வந்து, செல்லப் பூனை மாதிரி, உரசி உரசி நிப்பதும் 'இதென்ன பெட்டை கண்புருவத்தில இருக்கு...!' எண்டு வலது புருவத்தை உரசி விடுறதும். இன்னும் நெருக்கமாய் வந்து அவற்றை வெப்பமான மூச்சுக் காற்று என்னில படிற மாதரி நிற்கிறதெல்லாமே எனக்குக் கூச்சமாயும் அருவருப்புமாயுமிருக்கும்.

எப்பொழுதுமே அமுசடக்கியாய் இருக்கும் திலீப் அவரது சேட்டைகளைப் பொறுக்காதவனாய், உதடுகளைக் குவித்து பின்னர் பிரித்துத் தனது வெறுப்பைக் கூட்டுவதை நான் கவனித்திருக்கிறன்.

வகுப்புப் பெடியள் பெட்டையள் எல்லோருக் குமே அவரது சேட்டையள் பட்டும் படாமலும் தெரியும்.

முதன் முதலாக எனக்குக் கிட்டவாக வந்த திலீப் என்னைப் பார்த்து "சயன்ஸ் வாத்தி கொஞ்சம் வழியிற ரைப் ... கவனமாக இரு என்றான்.

அவனைப் பட்சமாகப் பார்த்து, கண்களை மலர்த்தி நன்றி சென்னேன்.

அவன் சற்றுப் படபடப்புடன் "இதுக்கெல் லாமா நன்றி..." என்று உதடுகள் மலரச் சிரித்தான்.

அவனது அந்தப் புன்னகை எனக்கு நிரம்பப் பிடித்திருந்தது. உந்தச்சிரிப்பு உயிரை உரசும் சிரிப்பு... என எனக்குப்பட்டது.

நான் எட்டாம் வகுப்புக்கு வந்த போது ரதீஸும், திலீப்பும் தான் என்ரை பிரிவுக்கு - எட்டு "ஏ" க்கு வந்தார்கள். ரகு, ரதீஸ், ரூபன், பல்லவி எண்டு எல்லாருமே, எட்டில வெவ்வேறு டிவிசன்களில சிதறுண்டு போயிருந் தார்கள்.ஆனா நமது நட்பு மட்டும் தொடர்ந்தது.புது வகுப்பில சிலர் புதிசா சிநேகிதமானார்கள். கௌதமி, நிமலன்,வரதன் எனது புதுச் சிநேகிதர்கள்.இப்ப எங்களுக்கெல்லாம் கொஞ்சம் முதிர்ச்சி வந்திட்டுது. திருத்தமாச் சிந்திக்கவும் பேசவும் முடியுது. அந்த வகை யில எல்லாரையும் விட நிமலன் மட்டும் தனி. நல்ல வசதியான குடும்பத்துப் பிள்ளை. அவன், நாங்க... நண்பர்கள் சாப்பிட ஏதாவது தின் பண்டங்கள் எடுத்து வருவான். பொரிவிளாங்காய், பூந்திலட்டு, தோற்பன், தொதல், பொரிகடலை எண்டு ஏதாவது அவனது புத்தகப்பையில் அடசிண்டு இருக்கும்.

குறுகிய நேரலீவில தின்பண்டங்களை நண்பர் களுடன் பகிர்ந்து கொள்வான்.கன்ரீனில எல்லாருக்கும் ஸ்பெஷல் பால் ரீயும் ஓடர் கொடுப்பான்.இதுகள் போதாதா அவனில எங்களுக்கு ஒட்டுதல் ஏற்பட...! எனக்கு அவனில விஷேசமான ஈர்ப்பு இருந்தது: காரணம் அவன்ரை வயதுக்கு மீறின கதையள் தான். எங்களை விட புத்தி பூர்வமாய்க் கதைப்பான். பேசும் போது தடைகள் ஏதுமில்லாமல்,கொட்டிற அருவி போல ஒரு சரளம் இருக்கும். மனசைத் தொடுற மாதிரி, குளிர வைக்கிற மாதிரி அவனால பேச முடியுது.புதிசு புதிசு எங்களுக்கு முன் பின் தெரியாதவையெல்லாம் அவன்ரை வாயில இருந்து கொட்டிண்ணும்.

புதிசாப் பார்த்த திரைப்படம் பற்றி,சர்வதேச

விளையாட்டுப் போட்டிகள் பற்றி,ரெனிஸ் வீரர் பெடரர் பற்றி மகேந்திரசிங்டோனி பற்றி,கால்பந்து வீரர்களான மெஸ்ஸி,றோனால்டோ பற்றி எல்லாம் பேசுவான். தெரியாத விளையாட்டுக்கள்,விளையாட்டு வீரர்களெண்டு அவன் சொரிவதை நம்மால் கேட்காமல் இருக்க முடியாது.

அவன் சில வேளைகளில் "சுதா... சுதாப் பெட்டை...! எண்டு கூப்பிடுவான்.அப்படிக் கூப்பிடும் போது உள்ளாக மனசின் இழைகள் லேசாக உருகி விம்மும்... இந்த அனுபவம் எனக்கே எனக்கானது எண்டு சொல்லேலாது.எல்லாரிடத்திலையும் இந்தச் சொரிவும் பரிவும் அவனுக்கு உண்டு.தனித்தும் சேர்ந்தும் அவன் நண்பர்களுடன் உறவாடி உரையாடு வான்.அவனது பேச்சு ஒவ்வொருவரது கவனத்தைக் கோருவதோடு அவர்களனைவரது முழுமையான நுண்ணுணர்வையும் தொட்டு உசுப்புவதாயிருக்கும்.

கலைகளிலும் மெல்லிய ஈடுபாடு இருப்பதை அவன் எங்களுக்கு உணர்த்துவான். சித்திரத் தொடர் கதைகளையும் கதைகள் எண்டு வந்தால், சுபாவையும் ரமணிச்சந்திரனையும் படிக்கும் எங்களுக்கு அவன் சுஜாதாவையும் ஜெயகாந்தனையும் அறிமுகம் செய்தான். பாடல்கள் எண்டு வரும் போது பம்பாய் ஜெயஸ்ரீ, நித்திய ஸ்ரீ, உண்ணி கிருஷ்ணனது சினிமாப் பாடல்கள் பற்றிக் கூறுவான். ஒரு சமயம் சுதா இரகு நாதன் பற்றிக் கதைத்தான். "சுதா இரகுநாதனா...?" என்று நான் குழம்பியபோது "சங்கீதம் எண்டால் அவரையும் கேட்க வேணும்..." என்றான்.

அவனது ருசிகளை, ரசனைகளை மேலும் மேலும் வளர்க்க அவன் முனைவது எங்களுக்குத் தெரியும். இவனை அடியொற்றிமுன்னேற வேண்டும் என்ற தூண்டுதலை அவன் நிரம்பவே எங்களெல்லாரிடத்திலும் தொற்ற வைத்தான்.

எட்டில் மட்டுமல்ல, அடுத்து வந்த வகுப்பு களிலும் நமது நட்புக் குறையவில்லை; நிலைத்து நின்றது. அத்துடன் அவனுடன் அதிக நெருக்கமும் எங்களுக்கு ஏற்பட்டது. ஓ.எல்.லில் நல்ல பெறுபேறு களை அனேகமாக எல்லாரும் பெற்றோம். எல்லாரை யும் விட அதிக விசேட சிறப்புச் சித்திகளை திலீப்பும் விமலனும் பெற்றுக்கொண்டார்கள்.

ஏ.எல்.லில் நாம வர்த்தகப்பிரிவில் சேர்ந்து படிக்க வாய்ப்புக் கிடைத்தது. அது நாம் விரும்பிய ஒன்றாகவும் இருந்தது. அப்பிரிவில் திலீப், விமல், பல்லவி, ரதீஸுடன் சேயோன் என்ற பெடியனும் எங்களது வகுப்புக்குப் புதிதாக வந்தான். அவனும் எங்களுடன் இசைவாகப் பழகினான். கற்றல், கற்றல் என்பதைத்தவிர எங்களுக்கு வேறுவேலை இல்லாமல் இருந்தது. பாடத்திட்டத்தில் புரிந்ததை, புரியாததை நண்பர்களாகிய நாம் பகிர்ந்து கொண்டோம். இவ்விஷயத்தில் கொஞ்சம் புறநடையாக விமலன் தான் நடந்து கொண்டான்.

தமிழ் இலக்கியத்தின கொடுமுடிகளான - இது அவன் தான் சொன்னது. புதுமைப்பித்தன், சுந்தரராம சாமி, மௌனி, தி.ஜானகிராமன் ஜெயமோகன் என்று அவனது வாசிப்புப் பரப்பு விரிவு பெற்றுள்ளதாக ஒரு சமயம் என்னிடம் சொன்னான். நான் அதிகம் அக்கறைப்படாததால் "ஞானசூனியம்..." என என்னைத் திட்டவும் செய்தான். அடுத்த கணமே "ஸொறிசுதா...! இவ்வளவு வடிவும் புத்திக் கூர்மையுமுள்ள பெட்டையாக இருக்கிற நீ படிப்பில எவ்வளவு சூரத்தனம் காட்டிற... கொஞ்சம் எக்ஸ்ராக் கெயர் எடுத்து எழுத்து, இலக்கியம், கலைகள் எண்டு மினக்கெட்டால் என்ன...? குடியா முழுகிப்போகும். மனம் நோகிற மாதிரி ஏதன் பேசிப் போட்டனா சுதா...! என்று கூறுவதுடன் மெலிதாகச் சிரிக்கவும் செய்வான்.

அவனில இது விஷயத்தில எரிச்சல் அடைந்த போதும் அவனை அநுசரித்து நடந்து கொள்வதே சேமம் என நினைத்துக் கொண்டேன்.

ஏ.எல். பெறுபேறுகள் நல்ல மாதிரியாக அனைவருக்கும் கிடைத்தது. திலீப்பும் விமலனும் மூன்று பாடங்களிலும் "ஏ" எடுத்தார்கள்.

விமலன் பொருளியல் கற்க அதிகம் விரும்பிய போதும் எங்களது விருப்பத்திற்கு இணங்கி, முகாமைத்துவத்தையே தெரிவு செய்தான். அனைத்து நண்பர்களும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கக் கூடிய பெறுபேறுகளைப் பெற்றிருந்தது நிரம்பிய மகிழ்ச்சியையும் மனநிறைவையும் எங்களுக்குத் தந்தது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நாங்கள் எல்லாருமே முகாமைத்துவப்பிரிவில் இணைந்து கொண்டோம். படிப்பதில் நாம் அதிகம் சிரமப்பட வில்லை, வழமைபோலக் கற்றல் விஷயத்தில் திலீப் தான் எங்களை விட முன்னால் நின்றான். அடுத்தது விமலன். அதன் பின்னரே ஏனையவர்கள். அதில் நானும் ஒருத்தி.

வளரிளம் பருவத்திலேயே திலீப்பில் ஒரு கவர்ச்சி எனக்கிருந்தது. மன உளைச்சல்களும் உடல்சார் உணர்வுகளும் திலீப்பின் பால் ஓர் ஈர்ப்பையும் ஒரு காந்தப்புலக் கவர்ச்சியையும் எனக்கு ஏற்படுத்தியது. இருவது வயசைத் தொட்டுவிட்ட அவனது தோற்றமும் அந்த வயதிலேயே அடர்த்தி கொண்டு விட்ட மீசையும், தேர்ந்த சிற்பியின் கரம்பட்டது போன்ற உடல் அமைப்பின் செழுமை யும் எனது மனஅரங்கில் சதா நிழலாடியது. அவன் மீது தீராத காதல் ஏற்பட்டு விட்டதை நான் உணர்ந்து கொண்டேன். எனது காதல் ஒரு தலைப்பட்சமானதாக ஆகிவிடக்கூடாது என்பதில் கவனம் கொண்டிருந்தேன். அவனது அதிகம் பேசாத இயல்பும் எப்பொழுதுமே அதீத திறமை இருந்த போதும் தன்னை முன் நிறுத்தாத போக்கும் எனக்கு நிரம்பப் பிடித்திருந்தது. வாழ்வில் லௌகீகப் பெறுமானங்களுடன் உயர... உயரக் கூடிய ஏதுக்களையுடைய அவனுடன் நான்

ஏன் இணையக்கூடாது? லட்சியம் அது இது என்பதெல்லாம் விமலனோடு மட்டுப் படுத்தப்பட்டு விட்ட ஒன்று என்பதே எனது முடிவாக இருந்தது. அந்தத் தந்தக் கோபுர வாழ்க்கையெல்லாம் எனக்கு வேண்டாம். சாதாரண யாழ்ப்பாணத்து மனுஷியாக மட்டும் இருந்தால் போதும் ஆனால், பொருள் என்று வரும் சந்தர்ப்பங்களிளெல்லாம் என்னையே நான் முழுமையாக நம்பவேணும். இது விஷயத்தில பிறரில தங்கி இருக்கக் கூடாது. அது காதல் கணவனாக இருந்தால் கூட அழகும் படிப்பும் ஒண்டு சேர்ந்த எனக்கு உத்தியோகம் ஊதியம் என்பன தூரத்துக் கனவாகி விடமுடியாது. தானாக வந்து சேரும். இவற்றையெல்லாம் ஸ்த்திரப்படுத்திக் கொள்ள என்னால் முடியும். திலீப்பே எனது லட்சியமான துணையாகவும் என்னை இயல்பு தப்பாமல் முன் நகர்த்தும் விசையாகவும் இருக்க முடியும். அழுத்தமாக நடந்து கொள்ளத் தெரியாத அவனால் என்னை அன்பால் அடிமை கொள்ள மட்டுமே முடியும். ஆண் என்ற முனைப்புடன் முசுட்டுத்தனம் எதனையும் என்பால் அவனால் படர விட முடியாது. He is my Man till my last breath.

அவனைப் போல அதே குணவியல்புகளோட ஒரு ஆண் குழந்தையும், என்னைப் போல ஒரு அழகான பெண்குழந்தையும் எங்களுக்கு வேணும்.

அவனைப் பற்றிய கனவுகளில் மிகுந்த நான் எனது படிப்புப் பாதிக்காத வகையில் நடந்து கொண்டேன்.

ரதிஸூக்கு என்னைப் போலவே திலீப்பற்றிய எண்ணமும் ரசிப்பும் இருப்பது மிக லேசாக எனது புலன்களுக்கு தெரியவே செய்தது.அது விஷயத்தில் நான் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. என்னுடன் பழகுவது போலத்தான் அவளுடனும் அவன் பழகு கிறான், இன்னும் கொஞ்சம் கூர்ந்து பார்க்கும் போது அவன் சில மனத்தடைகள் ஏதுமில்லாமல் அவளுடன் பழகுகிறான் என்பதையும் என்னால் கவனம்கொள்ள முடிந்தது. இந்த நிலையில் பதட்டம் ஏதும் இல்லாமல் அவன் என்னிடமிருந்து கைதவறி விடக் கூடாது என்பதில் நான் அதிக அக்கறை கொண்டேன்.

ரதீஸ் என்னைப் போல இல்லாவிட்டாலும் நல்ல அழகி. எனது அழகுக்கு முன்னால் அவள் சாதாரணம் தான். வாசனை இழந்த மலரின் ரகம்! இந்த நினைப்பு எனக்குக் கர்வத்தைத் தந்தது. இது சரியா? அவள் எனது உயிர்ச்சிநேகிதி. இதெல்லாம் வேண்டாமே என்று எனது மனது அடித்துக் கொண்டது.

திலீப்பை நினைப்பதும் மோகிப்பதும் மட்டும் போதுமா? எனது காதலை... எனது மனக் கிடக்கையை அவனுக்குத் தெரியப்படுத்த வேண்டாமா? அவன் மீதான பிரேமையை வளர்ப்பதும் அது தொடர்பாக அலாதிப்படுவது மட்டுந்தானே இப்பொழுது நடக்கிறது. இல்லை... இதற்கு மேலான நகர்த்தல்கள் எனக்குச் சாத்தியமாக வேணும்.

அவனது நினைவுகளுடனும் கனவுகளுடனும் இருந்த எனக்கு உடல் லேசாகி காற்றில் மிதப்பது போல இருந்தது. சுவை மிகுந்த ஒரு வகையில் போதை தரும் பானத்தை மாந்தி மாந்தி மயங்கிய நிலையில் இருப்பதான உணர்வே என்னுள் கிளர்ந்தது.

இந்தத் தெவிட்டுதல் இல்லாத ரகத்தை நான் அவனுடன் இணைவதன் மூலமே பருக முடியும் என்பதை நான் திடமாக நம்பினேன்.அந்த நம்பிக்கை உள்ளாக வேரோடி என்னைப் புளகமுற வைத்தது. அவனைச் சந்தித்து, தினம் தினம் தீவிரப்படும் இந்தத் தவிப்பை நான் தணிக்க வேண்டும்.இத்தகைய பரிதவிப்போடு இருந்த என்னை அணுகிய பல்லவி எனக்கு விளக்கம் தருவது போலச் சிலது சொன்னாள்.

"என்ன இரண்டு பேருமே போட்டி போட்டுக் கொண்டு திலீப்பை 'லவ்' பண்ணிற மாதிரி இருக்கு..."

"இரண்டு பேரா...?"

"அது தான் நீயும் ரதீஸீம்!"

"அவளுக்கும் அவனில ஒரு Crush இருக்கு....?

"ம் ..."

"சும்மா குழப்பாதையடி....!

"இல்ல.... குழப்பேல்லை... நான் சொல்லிறது உண்மை....! அவள் அவனிடம் காதல் வசப்பட்டிருக் கிறாள் என்பதற்கான அடையாளங்கள் நிறையவே இருக்கின்றன....."

"......................"

"அவள் வலியச் சென்று அவனுடன் கதைக்கிறாள்,காதல் மிளிரப் பார்க்கின்றாள், சடையைப் பின்னாமல் - அவனது விருப்பத்துக்காக - பறக்க விடு கிறாள்,கரம் பற்றி இணைந்து நடக்கிறாள், கன்ரீனிலும் நூல் நிலையத்திலும் ஒருவரை ஒருவர் ஸ்பரிசித்தபடி கண்கள் சொருக இருக்கிறார்கள்; இதெல்லாம் வேறென்னவாம்....!"

"போடி... இது உனது கற்பனை... திலீப் எனக்கானவன் எனக்கு மட்டுமானவன்... !"

"சரி அம்மா உன்ரை விருப்பத்துக்குக் குறுக்காக நான் வரேல்லை..."

பல்லவி கூறியதை அசட்டையாகவே நான் எடுத்துக் கொண்டேன்.திலீப்பை நான் தனித்துக் காண்பதென்பது முடியாமலேயே இருந்தது. இறுதி யாண்டும் பரீட்சை அதனால் அவன் நண்பர்கள் சூழ எப்பொழுதும் கலந்துரையாடல்களில் ஈடுபட்ட படி இருந்தான்.ஆனால் இன்று காலை பத்து மணியளவில், முகாமைத்துவ மண்டபத்துக்கு முன்பாக உள்ள வாகை மர நிழலில்,சீமெந்து இருக்கையில் தனியாக இருந்தான். ஏதோ புத்தகம் அவனது கைகளில் வசதியாகப் படவே,நான் அவனை அணுகி, பேச முற்பட்டேன்.

"திலீப் என்ன புத்தகம்...என்ன படிக்கிற...."

"தேசிய வங்கிகளின் முகபாமைத்துவ நடத்தை பற்றி...!"

பரீட்சைக்கு வருமா...?இருக்கட்டும் நான் இஞ்ச வந்தது... என்ரை மனசை உனக்குத் திறந்து காட்ட... மனம் விட்டுப் பேச... உன்னை எனக்கு நிரம்பிப் பிடிக்குமடா... உன்ரை அமைதி, ஒதுக்க சுபாவம், உன்ரை ஆர்ப்பாட்டமில்லாத நட்பு என்று எல்லாமே..."

"ம்.... சொல்லு.....!"

"படிப்பு முடிஞ்சதும் உனக்கு ஸ்பெஷல் செய்யிற எண்ணமேதாவது இருக்கா...?"

"அதுக்குக் கிளாஸ் கிடைக்க வேணும்...!"

"உனக்குக் கிடைக்குமடா... ஆனா எனக்குத் தான் தொடர்ந்து படிக்கிற ஆசை ஏதும் இல்லை. ஏதாவது தேசிய வங்கியிலையோ,ஃபினான்ஸ் கொம்பனியிலையோ வேலை தேட வேணும்..."

"நீ கெட்டிக்காரி,அத்துடன் அழகி, வேலையேன் கிடைக்காது? இந்த அழகும் அறிவும் உனக்கு எந்த வேலையையும் தேடித் தரும்"

"என்னை உனக்குப் பிடிக்குமாடா.....?

"ம்... பிடிக்கும்"

"எவ்வளவு பிடிக்கும்..."

"எவ்வளவோ....! என்று தன் இரு கரங்களையும் தூக்கி அகலித்துக் காட்டினான்.

எனக்குச் சிரிப்பாய் வந்தது.குலுங்கிச் சிரித்தேன்.

"நீ ஸ்பெஷல் டிகிறி செய்தால் நான் சிவனே எண்டு உனக்காகக் காத்திருக்க வேணும்"

"ஏன் .... ஏன் சுதா...?

உணர்ச்சி வசப்பட்டவளாய் "நா... நான் உன்னில பைத்தியமா இருக்கிறன்ரா... நீ என்னை... நாம ஏன் இணையக் கூடாது... சடங்க செய்யக் கூடாது.இதைக் காதல் அது இதெண்டு குழம்ப வேண்டாம் கேட்டுச் செய்த மாதிரிப் பார்த்துக் கொள்ளலாம்..." அரற்றினேன்.

"..............."

"என்ன மீளவும் மௌனமா...?

அவனது மௌனத்தைக கலைக்க விரும்பியவளாய் நான் அவனது தோளைத் தொட்டு உசுப்பினேன்.

"சுதா ஸொறி அம்மா....! உன்னட்டை நான் இதை எதிர்பார்க்கேல்லை. எனக்கொரு Commitment இருக்கடா...! உன்ரை பிரண்ட் ரதீஸை நான் விரும்பிறன். அவளுக்கும் என்னில..."

"................."

மௌனித்து நின்றேன். என்கண்களில் திரண்ட நீர் உடைந்து உதிர்ந்தது.

"சரி திலீப்" என்ற எனது குரல் ஈனஸ்வரத்தில் ஒலித்தது.

திலீப் என்னைப் பார்த்தபடி நின்றான். அவனை நிமிர்ந்து பார்க்கத் தைரியம் இல்லாத வளாய், அழுத்தமான மனப்பாரத்துடனும் உறைந்து போன உணர்வுகளுடனும் அந்த இடத்தை விட்டு நகர்ந்தேன்.

எல்லாவற்றையும் இழந்துவிட்டதான நிலை. சூனியம் என்னுள் குமைந்து இறங்கியது. திடீரென இருட்டில் சிறையுண்டது போல இருந்தது. லேசான விம்மல் அதைச் சிரமத்துடன் அடக்கிக் கொள்வதைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியவில்லை.

கால நகர்வு ஓரளவு மன ஆறுதலை எனக்குத் தந்தது. எதையுமே சிந்திக்கவும் பகுத்துப் பார்க்கவும் என்னால் முடிந்தது.

'ரதிஸ் ஏன் திலீப்பை விரும்பக் கூடாது...! அவன் ஏன் அவள்பால் இசைவு கொள்ளக் கூடாது...? நமது லபிதம் இவ்வளவு தான். இது தான் வாழ்க்கை. இத்துடன் எல்லாமே முடிந்து விட்டதாக நான் நினைப்பது சரியா? இல்லை... அப்படி இல்லை. இவற்றையெல்லாம் புறந்தள்ளி, நான் நன்றாகப் படித்துப் பரீட்சை எழுத வேணும்.... பாஸ் பண்ண வேணும்... பாஸ் பண்ணி, வேலை தேடி, எனது வாழ்க்கையை ஸ்தரப்படுத்திக் கொள்ள வேணும்... இதைச் சாத்தியப்படுத்திக் கொள்ள வேணும்...'

அழுத்தமான நினைவுகளோடு நூல் நிலையத்திலிருந்து வெளியே வந்த என்னை விமலன் இடைமறித்தான்.

"அட இவனது கைகளில் என்ன புத்தகங்கள்...? குந்தர்கிராஸின் The Tindrum. மற்றது பெருமாள் முருகனின் மாதொரு பாகனா...? இவன் திருந்தவே மாட்டானா? பரீட்சைக்குப் படிக்கும் லட்சணம் இதுதானா... இதென்ன கூத்து...?"

"என்ன... என்ரை தேவதையின்ரை உடல் தளர்ந்து முகம் கறுத்துக் கிடக்கு...?"

"Don't be silly"

"இது பொய்... எனக்கு எல்லாம் தெரியும். திலீப் சொன்னவன். எல்லாத்தையும் ஒதுக்கித் தள்ளு சுதா...! படிப்பு படிப்பு என்று அலையும் நீ இப்படி இருந்தால் பரீட்சை எழுத முடியுமா...? எல்லாத்தையும் விடு பெட்டை...! நீ பரீட்சையில் பாஸ் பண்ண வேணும்... பாஸ் பண்ணி, நீ விரும்பிற வேலை கிடைத்து, வாழ்க்கையில செற்றிலாக வேணும்."

"சுதா நீ மகாராணி... குட்டி இளவரசர்களும்... ஏன் மகாராசாக்களும் உன்னை நாடி வருவார்கள். உனக்குக் கிடைப்பார்கள். எங்களைப்போலச் சில்லறைகள் எதுக்கு?"

"மகராசாக்களா...?"

கவலைகள் தளர்ச்சியடைய நான் குலுங்கிச் சிரித்தேன். அப்பொழுது எனது கண்கள் கலங்கி நீர்திரையிட்டது.

"அச்சச்சோ ராணி அழலாமா...? கூடாது கூடாது..." என்று கூறிய விமலன் நான் எதிர்பாராத வேளை எனது கண்ணீரைத் துடைத்து விட்டான்.

நான் விமலனின் கரங்களை இழுத்து அழுத்தமாகப் பற்றிக் கொண்டு கூறினேன்:

"தாங்ஸ்"

"எதுக்கு...?"

"எல்லாத்துக்கும் தான்"

எனது கண்களில் மிகுந்த வாத்சல்லியம் வழிந்தது. விமலன் அதை மிகுந்த மன நெகிழ்சியுடன் கவனம் கொண்டான்.



## தீரன் ஆர்.எம்.நௌஸாத் எழுதிய

# "ஒய்த்தா மாமா" சிறுகதை பற்றிய ஓர் உளவியற் பார்வை

த.கலாமணி

தீரன் ஆர். எம்.நௌஸாத் அவர்கள் அண்மைக்காலங்களில் ஈழத்து இலக்கிய உலகில் முத்திரை பதித்து வரும் ஒரு முஸ்லிம் படைப்பாளி. 1970 களின் பிற்கூறில், பாடசாலைக்கல்வி கற்று வரும் நாட்களில் எழுதத் தொடங்கிய இவர், 2000 ஆம் ஆண்டில் "வல்லமை தாராயோ" என்ற சிறுகதைத் தொகுதியை வழங்கியதைத் தொடர்ந்து தீவிரமாக இலக்கிய ஊழியத்தில் ஈடுபாடு கொண்டார். இதுவரை மூன்று சிறுகதைத்தொகுதிகளையும் இரு நாவல்களையும் கடற்கோள் காவியம் ஒன்றையும் குறும்பாக்களின் தொகுதியொன்றையும் தந்துள்ள நௌஸாத் இன்று ஈழத்து இலக்கிய உலகில் "பேசப்படுபவராக" விளங்குகிறார். இப்பின்னணியில், இறுதியாக வெளிவந்த சிறுகதைத் தொகுதி "தீரதம்" ஆகும். இத்தொகுதியிலுள்ள "ஒய்த்தா மாமா" என்ற சிறுகதை சிறுவர் விருத்தி குறித்த ஒரு முக்கியமான விடயத்தை கலை அம்சத்தோடு சித்திரிப்பதனால் இச்சிறுகதையின் உளவியற் பெறுமானம் பற்றி நோக்குவது பொருத்தமானது.

மனித நடத்தை பற்றிய விஞ்ஞானமே உளவியல் என்று கூறுவர். இலக்கியப் படைப்புகளில் சமூகம் பற்றிய சித்திரிப்பு என்பதே நடத்தைகளின் சித்திரிப்புத்தான். எமது வாழ்வில் நாம் எவ்வாறு நடந்து கொள்கின்றோம், ஏன் அவ்வாறு நடந்து கொள்கின்றோம், அவ்வாறு நடந்துகொள்வதை எவ்வாறு நியாயப்படுத்துகிறோம் என்பவற்றை உள்ளடக்கியதான வியாக்கியானங்களே இலக்கியப் படைப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன. இலக்கிய ரசனையை முதன்மைப் படுத்தி, இலட்சிய நிலையில், கற்பனா ரீதியாகப் படைக்கப்படுபவையே இலக்கியங்கள் என்ற நிலைக்கும் அப்பால், மனித வாழ்வையும் அதன் சமூக யதார்த்தத்தையும் சித்திரிப்பதே இலக்கியப்படைப்பின் நோக்கமாக இருக்க வேண்டும் என்ற கொள்கை இன்று வலுப் பெற்றுள்ளது. அவ்வகையில், நௌஸாத் அவர்கள் சமூக வாழ்வியலின் பண்பாட்டு அம்சங்களையும் சமூக மாந்தர்களின் நடத்தைகளையும் சமூக விழுமியங்களையும் சமூகக் கட்டமைப்பின் இயல்பான கோலங்களையும் கூர்ந்து உற்றுநோக்கி தமது படைப்புகளில் சித்திரித்து வருகிறார் என்பதற்கு அவரது படைப்புக்களே சான்றாதாரங்கள் ஆகும். இச்சான்றாதாரங்களின் "பதச் சோறொன்றாக" "ஒய்த்தா மாமா" என்ற சிறுகதை விளங்குகின்றது.

முஸ்லிம்களின் வாழ்வியலை நெறிப்படுத்துவது இஸ்லாமிய மார்க்கமே என்பர். இஸ்லாமியமார்க்கம் காரணமாக முஸ்லிம் சமூகம் இறுக்கமான கட்டமைப்பையும் கொண்டுள்ளது. இந்நிலையில் முஸ்லிம்களின் வாழ்வு பற்றிய சமூக விமரிசனம் என்பது மிகவும் கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டியது. இக்கவனத்துடனேயே "ஒய்த்தா மாமா" சிறுகதையும்

எழுதப்பட்டிருப்பது அவதானிக்கப்படக் கூடியது.

"ஒய்த்தா மாமா" எனும் இச்சிறுகதையானது சுன்னத்துச் சடங்கு குறித்த ஒரு பிள்ளையின் பயம் பற்றியது. இதனால் ஒய்த்தா மாமாவைக் காணும் போதெல்லாம் அப்பிள்ளை அச்சம் கொள்கிறான். இப்பயம் எனும் தீ அப்பிள்ளையின் வீட்டிலே வேலை யாளாக இருக்கும் "கலந்தன் காக்கா"வினால் நெய்யூற்றி வளர்க்கப்படுகிறது. பிள்ளையின் மனதில் விடைகாண முடியாத கேள்விகள். சுன்னத்துச் சடங்கின் போது உயிர் உறுப்பை அறுத்தெறிந்து விட்டால் எவ்வாறு சிறுநீர் கழிக்க முடியும் என்ற ஏக்கம். சுன்னத் துச் சடங்கும் நெருங்க நெருங்க அப்பிள்ளையின் பய மும் அதிகரிக்கிறது. ஈற்றில், அச்சடங்கில் என்ன நிகழ்ந்தது என்பதை ஒய்த்தா மாமா சாதாரணமாகக் கூறி விட, ஒய்த்தா மாமாவைப் பற்றிய பயம் நீங்கி விடுகிறது.

இச்சிறுகதையானது "கதைசொல்லி"யின் பிள்ளைப்பராய நினைவுகளுக்கூடாகவே சொல்லப்படு கிறது. மேம்போக்காகப் பார்க்கும் போது சுன்னத்துச் சடங்கு பற்றிய ஒரு விவரணமாகக் காணப்படும் இச்சிறுகதையில் பல உட்கிடைகள் இருப்பதை ஆழ்ந்து நோக்குவோர் கண்டு கொள்ளலாம்.

முதலாவதாக, ஒய்த்தா மாமா பற்றிய பயமே இங்கு முதன்மைப்படுத்தப்படுகின்றது. இதுவே இச்சிறுகதையின் மையப் பொருளுமாகும். எமது சடங்குகளும் சம்பிரதாயங்களும் பண்பாட்டு அம்சங் களை வெளிப்படுத்துவனவாக உள்ள போதும் அச்சடங்குகளாலும் சம்பிரதாயங்களாலும் பிள்ளைப் பருவத்தினரிடத்து ஏற்படும் விளைவுகள் குறித்து நாம் எவரும் கண்டு கொள்வதில்லை என்பதனையே நௌஸாத் இச்சிறுகதையில் வலியுறுத்த விழைகிறார். இஸ்லாமிய மார்க்கத்தின் வழியே முஸ்லிம் ஒருவன் பருவமடையமுன் அவனின் உயிருறுப்பிலிருந்து ஒரு சிறுசதைப்பகுதியை அகற்ற வேண்டியது அவசிய மெனினும், சுன்னத்துச் சடங்கு ஒய்த்தா மாமாவினால் இன்று வீடுகளில் நிகழ்த்தப்படுவதில்லை. மருத்துவ மனைகளில் வைத்தியர்கள் மூலம் இது நிறைவேற்றப் படுகின்றது. இவ்வாறு அருகிப்போன சுன்னத்துச் சடங்கை மையப்படுத்தியதாக இச்சிறுகதையை எழுதியிருப்பது ஆவணப் பதிவுக்காக மாத்திரமன்று என்ற வகையிலேயே இச்சிறுகதையின் காத்திரம் கவனிப்புக்குரியதாகின்றது.

மனித வாழ்க்கை வட்டத்திலே பிள்ளைப் பருவம் என்பது ஒரு முக்கியமான பருவமாகும். எதிர் கால முழு மனித ஆளுமைக்குரிய பல அடிப்படைகள் இப்பருவத்திலேயே கட்டியெழுப்பப்படுகின்றன. பிள்ளைப்பருவத்திலே குறிப்பாக ஆரம்ப பிள்ளைப் பருவத்திலே ஏற்படும் அனுபவங்களும் உணர்வுகளும் "இட்" எனப்படும் ஆழ் மனத்திலே தேக்கி வைக்கப்படுவதாகவும் இவை எதிர்கால ஆளுமையில் வலுவான செல்வாக்குச் செலுத்துவதாகவும் உளவியல் நூல்கள் கூறுகின்றன.

ஒரு பிள்ளையின் வளர்ச்சியிலும் நடத்தையிலும் தாக்கம் விளைவிக்கும் காரணிகளை மூன்று வகுதிகளில் அடக்கலாம் என உடற்கூற்றியல் தெரிவிக்கின்றது. கருக்கொள்ள முன்னரான காரணிகள், கர்ப்பகாலக் காரணிகள், பிறப்புக்குப் பின்னான காரணிகள் என அமையும் இம்மூவகைக் காரணிகளுமே பொருத்தமாக அமையாத போது பிள்ளையிடத்து பல கோளாறுகளை ஏற்படுத்துகின்றன. இப்பிரச்சினைகளை நீண்ட ஒரு பட்டியலில் உள்ளடக்க முடியும். அவற்றுள் ஒன்றாக பிள்ளைப் பருவப்பயங்கள்(Childhood Fears) குறிப்பிடப் படும். பிள்ளைப்பருவப்பயம் அதீதமாக உள்ள போது அது நோயாகக் கருதப்பட்டு, பொருத்தமில்லாத அல்லது பகுத்தறிவுக்கொவ்வாத பீதி(Phobia) என அழைக்கப்படு கின்றது. இந்த அச்ச நோயானது பல்வேறு பொருட்கள் குறித்தும் விடயங்கள் குறித்தும் பிள்ளையிடத்து ஏற்படு கிறது. இவ்விடயங்கள் குறித்து ஏற்படும் அச்சநோய்கள் தனித்தனியாகப் பெயரிடப் பட்டுள்ளன. உதாரணங்களாக, பாடசாலைப் பீதி, சமூகப்பீதி, சிலந்திப்பீதி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பிள்ளைகளிடத்துக் காணப்படும் அசாதாரண மான பல நடத்தைகள் பிள்ளையிடம் காணப்படும் பதகளிப்பு நிலையில் உருவாகின்றன. பதகளிப்பு என்பது அமைதியின்மை, கலவரம், பீதி போன்றவற்றை உள்ளடக்குகின்ற ஒரு மனவெழுச்சிநிலையாகும். பயம் என்பது, சாதாரணமாக பிள்ளைகளிடத்து ஏற்படுகின்ற மனவெழுச்சி தான். ஆனால், இப்பயம் அடிக்கடி ஏற்படுவதாகவும் மேலும் மேலும் திகிலூட்டுவதாகவும் இருப்பின், திகிலுணர்வு ஏற்பட்டு, பிள்ளைகள் கலவர மடைந்து, அமைதியின்னமைக்கு உள்ளாகின்றார்கள். அவர்களிடத்துக் காணப்படும் பதகளிப்புக் கோளாறு காரணமாக பிள்ளைகள் இயல்பான வாழ்க்கையை இழந்து விடுகின்றார்கள்.


பிள்ளைப் பருவப் பயப்பீதியானது திகிலூட்டும் தாக்கங்களையும் ஏற்படுத்த வல்லது. மிதமிஞ்சிய பீதி நிலையில் இரத்த அழுத்தம் ஏற்படுவதோடு இதயத் துடிப்பு வீதமும் அதிகரிக்கின்றது. இதனால் மாணவ நிலையில் பிள்ளைகள் கல்வியில் கவனம் செலுத்த முடியாதவர்களாகவும் ஆக்கபூர்வமாகச் சிந்திக்கும் ஆற்றலை இழந்தவர்களாகவும் நிதானமாகத் தீர்மானம் எதனையும் எடுக்க முடியாதவர்களாகவும் மாறி விடுகின்றார்கள்.

---

**நூல்**
**தீரதம்(சிறுகதைத்தொகுதி)**

**ஆசிரியர்**
**ஆர்.எம்.நௌஸாத்**

**வெளியீடு - ஜீவநதி**
**விலை - 250/-**



"ஒய்த்தா மாமா" என்ற சிறுகதை கதைசொல்லி யின் பிள்ளைப்பருவப் பயத்திலிருந்தே ஆரம்பிக்கிறது:

"எனக்குப் பத்துவயதிருக்கும்போது அது நடந்தது... ஒய்த்தா மாமாவைக் கண்டாலே எனக்குப் பயம். அவர் சிறுவர்களின் குஞ்சாமணியை தயை தாட்சண்யமின்றி அறுத்தெறிகிறவர். என்று கேள்விப்பட்டதிலிருந்து இந்தப் பயம்... பள்ளிக்கூடம் செல்லும் வழியில் ஒய்த்தா மாமா தென்பட்டால் பதறிப்போய் வேறு வழியாக ஓட்டம் பிடிப்பேன். வீட்டருகே விளையாடிக் கொண்டிருக்கும்போது கண்டாலே துடித்துப் பதைத்து உள்ளறைக்கு ஓடி விடுவேன்..."

இந்த பயவுணர்வு படிப்படியாக எவ்வாறு வளர்த்தெடுக்கப்படுகின்றது என்பதையும் நேர்த்தியாக வும் கலாபூர்வமாகவும் நௌஸாத் சித்திரிக்கிறார்:

"கலந்தன் காக்கா தான் ஒய்த்தா மாமாவைப பற்றி கதைகதையாகச் சொல்வான்..."

"மூன்றாம் தவணைப் பரீட்சை சித்தியடைந்து மிகச் சந்தோசமாக ரிப்போர்ட்டை வாப்பாவிடம் காட்டியபோது, அவர் மகிழ்ந்து போய் "நாலாம் வகுப்புப்பாசாய்ட்டான் மகன்... இனி நீ அஞ்சாம் வகுப்பா...? பெரிய ஆள். உனக்கு வார வெள்ளிக் கிளம சுன்னத்து வெய்க்கப் போறம்டா மகனே" என்று என் சம்மதமில்லாமலேயே திடிரென்று அறிவித்தார். கூட நின்றிருந்த கலந்தன் காக்கா வாப்பாவுக்குத் தெரியாமல் என்னிடம் தன் விரலைக் காட்டி கத்தியால் கரகரவென அறுத்தெறிவது போல் பாவனை காட்டினான். நான் பயத்தில் "எண்டம்மா, எண்டம்மா" என்று கத்திக் கொண்டே உம்மாவிடம் ஓடி அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டேன்..."

"...இருந்தாலும், கலந்தன் காக்கா எங்கள் வீட்டி லிருந்த ஒரு பெரிய அருவாக்கத்தியை எடுத்து என்கண்களில் படும்படியாக ஒளித்து வைத்திருந்தான். அடிக்கடி அதை எடுத்துத் தீட்டிக் கொண்டுமிருந்தான். அக்கத்தியையும் என்னையும் பார்த்து அறுத்தறுத்துக் காட்டி என் பயத்தை சற்றும் குறைய விடாமல் அதிகரித்துக் கொண்டேயிருந்தான்..."

இவ்வாறாக, பிள்ளையின் பயம் அதிகரித்துக் கொண்டே செல்வதை அழகாக எடுத்துச் சொல்லி, பிள்ளையின் பயத்தால் ஏற்படும் விளைவுகளையும் கதாசிரியர் குறிப்பிட்டுச் செல்வதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

"அவன்(கலந்தன் காக்கா) சொன்ன கதைகள் பல. அதிலிருந்து நானும் எனது துடுக்குத்தனத்தையெல்லாம் அடக்கி கப்சிப்பென்றிருப்பேன்..."

"எனக்கு ஒரே குழப்பமாகிப் போய்விட்டது. என் அங்க இழப்பில் அவர்களுக்கென்ன சந்தோஷம் என்று புரியவில்லை. முதல் ஆளாக வகுப்பேறிய சந்தோஷமும் போய்விட்டது..."

"...நான் வாய் குளறிப் போய் உம்மாவின் பின்னால் நின்று அழத் தொடங்கினேன்..."

"...நான் பயத்தால் விறைத்துப் போனேன்..."

ஒரு சிறுகதையின் வெற்றிக்கு அதன் ஒருமை விளைவும் முடிவிலுள்ள திருப்பமும் முக்கியமானவை. இச்சிறுகதையின் சித்திரிப்பானது பிள்ளையின் ஒய்த்தாமாமா பற்றிய பயத்தையும் சுன்னத்துச் சடங்கு பற்றிய பயத்தையும் மையப்படுத்துவதாகவும் ஒருமை விளைவை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருப்பது கதாசிரியரின் படைப்பாக்க ஆளுமையை (Creative Personality) வெளிக்காட்டுவதாகும். அதேவேளை, சிறுகதை பற்றி "தீரதம் சிறுகதைத்தொகுதியில் "என்மொழிவு என்ற தலைப்பின் கீழ் நௌஸாத் குறிப்பிடுவது முக்கியமானது:

"சிறுகதைகளின் வார்ப்பு என்பது தனி ஒரு கவர்ச்சிகரமான நுட்பம். ஒரு சிறுகதையின் வெற்றிக்குப் பல காரணங்கள் இருந்த போதிலும் என்னைப் பொறுத்தவரையிலும் இதுவரை அறிப்படாத தளங்களில் இருந்தும் அறியப்பட்ட தளங்களில் உள்ள, தெரியப் படாத பக்கங்கள் பற்றியும் கூடுதலாகச் சிந்திக்கிறேன்"

இக்கருத்திலிருந்து, "ஒய்த்தா மாமா" சிறு கதையை உளவியல்தளத்தில் நின்று நுணுகி நோக்கு வது பொருத்தமானது எனலாம். உளவியல் அறிநிலையி லிருந்து(Awareness) இச்சிறுகதை எழுதப்பட்டதா என்பதை கதாசிரியர் வெளிப்படையாகக் கூறாதபோதி லும், பிள்ளை விருத்தியில், உடல்நலத்தோடு உளநல மும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்ற உளவி யல் நோக்கின் அடிப்படையிலேயே இது எழுதப் பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. அவ்வாறெனின், நடத்தைக் கொள்கையின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட ஓர் உளவியற் பரிசோதனையையும் இங்கு நோக்குவது பொருத்தமானது.

"தூண்டிகளே உயிரிகளின் நடத்தை வெளிப் பாடுகளுக்குக் காரணம்" என்பது நடத்தைவாதம் எனும் உளவியற்கொள்கையாளர்களின் கருத்தாகும். நமக்கு நன்கு பரிச்சயமான, விருப்பமான ஒன்றைக்கூட அதனோடு இணைந்த தூண்டி ஒன்றின் மூலம் விருப்பமற்றதாக, அச்சங்கொள்ளத்தக்கதாக மாற்றிவிட முடியும் என நடத்தைவாதிகள் நம்பினர். இதற்காக, 1920இல் வாற்சன், றெய்னர் ஆகியோர் மேற்கொண்ட "குட்டி அல்பேர்ட் ஆய்வு" (Little Albert Study) முக்கியத்துவம் வாய்ந்தது.

திடீரென மனவெழுச்சிகளுக்கு உட்படாத, சாந்தமான குழந்தை எனக் கருதப்பட்ட குட்டி அல்பேர்ட் தெரிவு செய்யப்பட்டு இந்த ஆய்வில் ஈடுபடுத்தப் பட்டான். அல்பேர்ட் தனது செல்லப்பிராணியான வெள்ளை எலியுடன் விளையாடும் வழக்கமுடையவன். ஆனால் இந்த ஆய்வின்போது அவன் தனது செல்லப் பிராணியுடன் விளையாடும் வேளைகள் தோறும் இரும்புச்சட்டமொன்றில் பலமான ஒலி எழுப்பப்பட்டது. இதன் பின், தனது செல்லப்பிராணியைக் காணும் போதெல்லாம் எலி பற்றிய பயத்தை, அச்ச உணர்வை அவன் வெளிப்படுத்தினான். அழுகை மூலமும் எலியி லிருந்து விலகித் தவழ்ந்து செல்வதன் மூலமும் குழந்தை யின் பயம் வெளிப்பட்டதன் மூலம் எலியை ஒத்த உயிரினங்களுடனான பயத்தையும் கூட புறத்தூண்டி களினால் ஏற்படுத்திவிடலாம் என்ற பொதுவான கொள்கையை உளவியலாளர் உருவாக்க வழி வகுத்தது.

உண்மையில், இந்த ஆய்வு மூலம் குட்டி அல்பேர்ட் பயப்பீதிக்குப் (phobia) பழக்கப்பட்டான் என்றே சொல்ல வேண்டும்.

இதனை ஒத்ததாகவே "ஒய்த்தா மாமா" சிறுகதையிலும் ஒய்த்தா மாமா பற்றிய பயம் கலந்தன் காக்காவினாலும் அவன் சொல்லும் வார்த்தைகளாலும் கதைகளாலும் அவன் காட்டும் கருவிகளாலும் பிள்ளையிடத்துத் தோற்றுவிக்கப்படுகின்றது. இப்பயப்பீதி நீக்கப்பட வேண்டும் என்பதில் நௌஸாத் உறுதியாக இருக்கிறார் என்பது இச்சிறுகதையின் முடிவில் வெளிப்படுகிறது. அந்தப் பயத்தை, ஒய்த்தா மாமாவின் வார்ததைகளே இல்லாமற் செய்து விடுகின்றன என்று அமையும் சிறுகதை முடிப்பிலுள்ள திருப்பம் சிலாகிக்கத்தக்கது:

"ஒய்த்தா மாமா என்னைப் பார்த்து "என்ன மருமகனே, ஒரு சின்னத் துண்டை நோண்டி விட்டேன்.. எப்பிடி?, நோகிச்சா... ல்லியே... வாப்பாட்டச் சொல்லி எனக்கி காணிக்கை கூடயா வாங்கித்தா..." என்று சிரித்தார். அதன் பிறகு எனக்கு ஒய்த்தா மாமாக்களைக் கண்டால் ஒரு பயமும் இல்லை."

பொதுவாகவே, பெற்றோர் பலரும் பிள்ளை உளநலம் பற்றி அறியாதவர்களாக பிள்ளைகளின் நடத்தைகளைச் சகிக் முடியாத வேளைகளில் "உம்மாண்டியிடம் பிடிச்சுக் குடுத்திடுவன்", "தாடி வைச்ச மாமா உன்னைப் பிடிச்சுக் கொண்டு போய் உன்னை இருட்டறையில் அடைச்சு வைச்சிடுவார்" என்பவை போன்ற வார்த்தைப் பிரயோகங்களால் தமது பிள்ளைகளை அச்சுறுத்து வதையே நாம் காண்கிறோம். ஆனால் பிள்ளைகளின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் அவர்களின் உள ஆரோக்கியம் எத்துணை முக்கியமானது என்பதை உணர்த்துவதற்காகவே பிள்ளை உளநலத்தில் கதாசிரியர் கரிசனை கொள்கிறார். "ஒய்த்தா மாமா" என இச்சிறுகதைக்குத் தலைப்பிடப் பட்டிருப்பதும் ஒய்த்தா மாமாவின் இறுதி வார்த்தைகளும் உளவியற் பார்வைக்கும் அப்பால் சமூகவியற் பார்வையினூடாக வேறு சில பரிமாணங்களை அலசி ஆராய்வதற்கும் வழி வகுக்கின்றது என்பதும் கவனிப்புக்குரியதாகும்.

## மாயக்கோடுகள்

மாயக்கோடுகளில்....
ஊர்ந்து தொலைந்திற்று காலம்.
அக்காலத்து நினைவுகளைப்
பெட்டகமொன்றில் சேமிக்கிறேன்.
பெட்டகம் நிரம்பி
வழிந்தோடும் நினைவுகள்...
பேராறாயிற்று.



சலசலத்தோடி
எனையிழுக்கிறது பேராறு.
தவித்துக்கரையேறுகிறேன்.
என்காலத்து எச்சங்கள்...
சிந்திக்கிடக்கின்றன.
ஒவ்வொன்றாய்
பொறுக்கியெடுத்து
கரையில் குவிக்கிறேன்.
அவையென் முகம் பார்த்துச்
சிரித்துக் குதிக்கின்றன.
விழிகளால்..
அவற்றை எரிக்கிறேன்.
எச்சங்கள்
சாம்பலாகி
ஆற்றில் கலக்க,
நானும் என்நினைவுகளும்
பேராறாய் பாய,
கடல் பெட்டகமாகி
மாயக்கோடுகளால்....
நிரம்பிற்று.

– சு.க.சிந்துதாசன்

## சமகாலம்

முன்பொருகாலம்
உவகையின் உச்சத்தில் ஆரவாரப்பட்ட
அனைத்து நிகழ்வுகளும்; எழுத்துக்களும்
யதார்த்தமாய் எங்கனும்
அடங்கிக் கிடக்கின்றன
ஆடிபோய் பம்பரம் போன்று.

வெறுமை போர்த்துக் கிடக்கும் இதயத்துள்–தொடர்ந்தும்
விரவிக் கொண்டு நடக்கின்றது இருண்மை.

ஒளி பரவும் இடங்களைத்தேடி–இதுவரையும்
ஓயாது நடக்கும் பாதங்களில் தேய்மானத்தை
கண்டறிந்தோர் இங்கு யாருளரோ?– சொல்க!

போதாக்குறைக்கு புன்னகைக்குப் பதிலாக நேரெதிரே
உமிழ் நீரினை உமிழ்ந்து விட்டுச் செல்லும் – சில
ஊத்தைத்தனங்களின் உற்சாகக் கெக்கலிப்பு.

தட்டிக்கேட்க எவருமில்லையென்ற
தலைக்கனத் துணிவுகளுக்கு நடுவில்
தளம்பல் கொள்கிறது சமகால வாழ்வு.

"வலுவுள்ளவன்" ஒருவன்
வழிதவறிப்போனதாக
பொய்யுரைக்கும் பதிவுகள் மீது
அனலாய் விழுகின்றன
ஆழுகைகளோடு கூடிய
ஆற்றாமையின் சாபங்களும் விமர்சனங்களும்

- அலெக்ஸ் பரந்தாமன்

இராஜினிதேவி சிவலிங்கம்



# துடிப்பின் எல்லை

யாழ் நகரிலிருந்து தென்மராட்சி செல்லும் வீதி இடம் பெயர்ந்து செல்லும் மக்கள் கூட்டத் தால் நிரம்பி வழிந்தது. எங்கு பார்த்தாலும் மனிதத் தலைகள். கையில் அகப்பட்ட பொருட்களை எடுத்துக் கொண்டு உயிரைக் காப்பாற்றுவதொன்றே அப்போதைய பிரதான விடயம் என்பதை மனதில் கொண்டு செல்லும் மக்கள் கூட்டத்தோடு தனது சைக்கிளிலில் தந்தையை முன்பாரிலும், முக்கிய ஆவணங்கள் அடங்கிய பாக் ஒன்றை பின் கரியரிலும் வைத்தவண்ணம் நடந்து செல்லும் சிவகுமாருடன் இணைந்து அவரது மனைவி சந்திராவும் தாய் பார்வதியும் தென்மராட்சி நோக்கி விரைந்தனர்.

குடாநாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற அவசரமான அறிவிப்பைத் தொடர்ந்து மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய போது எங்கே போவது எங்கே தங்குவது என்று அவர் தடுமாறிய போது அவரது மனைவியின் சகோதரன் திருமணம் செய்த இடமான மட்டுவில் ஞாபகத்திற்கு வரவே தற்காலிகமாக அங்கே சென்று தங்கி விட்டு மீளவும் வந்து விடலாம் என்ற நம்பிக்கையோடு புறப்பட்டு விட்டார் சிவகுமார்.

தன்னையே நம்பியிருக்கும் மூன்று ஜீவன் களைக் காப்பாற்ற வேண்டிய காரணத்தால் பல தடவைகள் இடப் பெயர்வைச் சந்தித்து விட்ட அவரால் தொடரும் துன்பங்களுக்கு முகம் கொடுக்க முடியவில்லை.

கால் நடக்க முடியாத தந்தை, ஆஸ்துமா நோயின் அவதியால் அவதிப்படும் தாய் இவர் களுடன் அவரது இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு முகம் கோணாது இவருடன் இசைந்து வாழும் அவர் மனைவி மூவரையும் எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற கடமை உணர்வோடு மக்களோடு விரைந்து செல்லும் சிவகுமாரின் சிந்தனை பின்னோக்கி விரைந்தது.

வயது முதிர்ந்த பெற்றோர்களுடன் எங்கே சென்று தங்குவது என்று அவர் தடுமாறிய போது அவரது தாயும், தந்தையும் "தம்பி.... எங்களை எத்தினை இடத்திற்கெண்டு கொண்டு திரிவாய் தெல்லிப்பளையிலிருந்து இடம்பெயர்ந்த நாள்

தொடக்கம் நீ பட்ட பாடு போதும் எங்களை இங்கு விட்டிட்டு போ சந்திராவும் நீயும் போங்கோ நாங்கள் இங்க இருக்கிறம்…." கண்ணீர் மல்க கூறிய அவர்களை மனம் மாற்றி கொண்டு வருவதற்கு அவரும் அவர் மனைவியும் பட்டபாடு அவர்களுக்குத்தான் தெரியும்.

சிறுவயதில் பெற்றோர்களை இழந்த அவர் மனைவி சந்திராவை ஆதரித்து தாய், தந்தையர் இல்லை என்ற குறை தெரியாது வளர்ந்து ஆளாக்கி யவர் அவளது அண்ணன் திருச்செல்வம். கல்வியில் ஆர்வமுடைய தன் தங்கையைப் பட்டதாரி ஆக்கி ஆசிரியையாக உருவாக்கிய அவர் தன் சகோதரிக்கு ஆசிரியரான சிவகுமாரைத் திரு மணம் செய்து கொடுத்த பின்னரே தான் திருமணம் செய்து கொண்ட வர் தங்கைமீது உயிரையே வைத்திருப்பவர்.

தென்மராட்சிக்குச் செல்லும்படி செய்தி அறிந்ததும் வயது முதிர்ந்த பெற்றோர்களுடன் சென்று எங்கு தங்குவது என சிவகுமார் தடுமாறிய போது சந்திராதான் "நாங்கள் அண்ணா வீட்டில போய் இருக்கலாம். அண்ணை சந்தோஷப் படுவார். ஒரு இரண்டு, மூண்டு நாளைச் சமாளிப்பம் பிறகு நிலைமையைப் பாத்து ஏதாவது செய்யலாம்…" சந்திராவின் வார்த்தைகளைக் கேட்டு வேறுவழி யின்றி பெற்றோருடன் புறப்பட்டார் சிவகுமார்.

தங்கையின் குடும்பத்தவர்களை அன்புடன் வரவேற்ற திருச்செல்வம் தன் வீட்டிலே அவர்களைத் தங்க வைத்ததுடன் அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுத்தார்.

இரண்டு மூன்று நாட்களில் மாறி விடும் என்ற நாட்டுச் சூழ்நிலை இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது. அவர்களது உறவினர்களும் திருச்செல்வத்தின் உதவியை நாடி வந்தனர்.

நிலமையைப் புரிந்து கொண்ட சிவகுமார் உறவினர்களுடன் கலந்தாலோசித்து திருச்செல்வத் தின் காணிக்குள் தற்காலிகமாகக் கொட்டில்களை அமைத்து தனது குடும்பத்தவர்களுடனும் உறவினர் களுடனும் அந்தத் தற்காலிக வீடுகளில் தஞ்ச மடைந்தார்.

நாளுக்கு நாள் குண்டுகளின் ஓசையால் தென்மராட்சி மண்ணே நடுங்கியது. வானத்திலே வட்ட மிட்டு குண்டுகளை வாழியும் விமானங்களும் உலங்குவானூர்திகளும் மக்களின் இருப்பிடங்களைக் குறிவைத்துத் தாக்குதல்களை நடாத்தின.

தென்மராட்சியில் தஞ்சமடைந்து ஆறு மாதங்கள் கடந்து விட்டன. இந்த ஆறுமாதத்தில் ஊருக்கும் செல்ல முடியவில்லை. தண்ணிப் பிரச்சினையால் குடிக்க, குளிக்க பல வழிகளிலும் சிவகுமார் குடும்பம் சொல்ல வொண்ணாத் துன்பங்களை அனுபவித்தது. அவர் துன்பப்படும் போதெல்லாம் ஆதரவளித்தனர் திருச்செல்வமும் அவர் மனைவி கலைவாணியும்.

இரண்டு நாட்களாக அமைதியாக ஒரு வித சத்தமுமில்லாமல் இருந்தமையால் நிலமை சீரடைந்து விட்டதோ என்ற நப்பாசையில் சிவகுமார் "சந்திரா…. இரண்டு நாளாய் ஒரு சத்தமும் கேட்கேல்ல நான் ஊர் பக்கம் ஒருக்கா போய் வரப்போறன். நீங்கள் கவனமாயிருங்கோ நான் தெரிஞ்ச ஆக்கள் யாரோடை யெண்டாலும் போய் வந்திடுவன்….." சிவகுமார் கூறியதற்கு யாரும் உடன்படவில்லை.

சந்திரா அவரிடம் "நீங்கள் எங்களை விட்டிட்டு போக வேண்டாம். நிலமை சீரெண்டால் எல்லாரும் சேர்ந்து போகலாம். அண்ணையும் பேசிறார் உங்களை ஒரு இடமும் போக வேண்டாமாம்…" அவளின் உறுதியான முடிவால் அவர் தன் எண்ணத்தை மாற்ற வேண்டியதாயிற்று.

இரண்டு நாட்கள் அமைதியாக இருந்த பிரதேசம் அதிகாலையில் கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களால் அதிர்ந்தது. மக்கள் பீதியுடன் அலறி அடித்துக் கொண்டு எழுந்தனர். எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கும் சத்தம், வானத்தில் வட்டமிடும் உலங்கு வானூர்திகளினதும் குண்டு வீச்சு விமானங்களின் இரைச்சலும் மக்களைப் பீதி கொள்ளச் செய்தது.

சிவகுமார் திருச்செல்வத்திடம் "மச்சான் ஆமி மூ பண்ணுறான் போல இருக்கு வெடிச்சத்தங்களும் கிட்ட கேட்குது ஷெல் அடிச்சுக்கொண்டு வாறாங்கள் போல இருக்கு…." அவர்கூறியதை கேட்ட திருச்செல்வம் "நீங்கள் எதற்கும் பாதுகாப்பா மாமா, மாமி, சந்திரா மூண்டு பேரையும் கூட்டிக் கொண்டு பாதுகாப்பான இடமொண்டுக்கு போங்கோ. எங்கையாவது கோயிலில இருங்கோ நாங்கள் பின்னால வாறம்…" அவரது வார்த்தை களைக் கேட்ட சந்திரா "இல்லை அண்ணை நீங்களும் வாருங்கோ எனக்கு பயமாயிருக்கு…" சந்திரா அவரை விட்டு பிரியமனமில்லாமல் தடுமாறினாள். தங்கையை சமாதானப்படுத்தி சிவகுமாருடன் அனுப்பியவர் நின்மதிப் பெருமூச்சு விட்டார்.

தொடர்ந்து வீழ்ந்து வெடிக்கும் எறிகணை கள் சமீபமாக விழும் சத்தம் கேட்டு திருச்செல்வம் குடும்படும் வீட்டைவிட்டு வெளியேறியது.

தொடர்ந்து இரண்டு நாட்களும் குண்டுகளின் ஓசை, எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கும் ஓசையால் குடும்பங்கள் எல்லாம் நாலாபுறமும் சிதறி ஓடி பாது காப்பாக தூர இடங்களில் அடைக்கலம் தேடின.

சிவகுமார் குடும்பம் வரணியிலுள்ள ஆலயமொன்றில் தஞ்சமடைந்திருந்தது. அண்ணன் குடும்பத்தைப் பற்றிய செய்தி ஒன்றும் அறியாது தவித்தாள் சந்திரா. ஆலயத்திற்கு வந்த உறவினர் ஒருவர் சிவகுமாரிடம் ஏதோ கூறுவதும் அவர் தன்னைப் பார்த்து விட்டு கூறியவரை தூர அழைத்துச் செல்வதையும் பார்த்தவள் தன் அண்ணனுக்கு ஏதாவது ஆபத்தோ என அஞ்சி அவர்கள் பின்னால் சென்றாள். வந்த உறவினர் "சிவகுமாரண்ணை…. வீட்டை விட்டு வெளியேறி திருச்செல்வமண்ணை குடும்பம் வரேக்க சந்தியில ஷெல் விருந்து அந்த இடத்திலயே அவர்ரை உடல் சிதறிப் போச்சு…." அவர் கூறியதைக் கேட்டவள் "அண்ணா என்னை விட்டிட்டு போட்டீங்களே…." அலறிய வண்ணம் மயங்கிச் சாய்ந்தவள் மீண்டும் எழுந்திருக்கவே யில்லை.

அ. யேசுராசா



# தர்மசேன பத்திராஜவை நினைவுகூர்தல்....!

இலங்கையின் முக்கிய திரைப்பட நெறியாளரில் ஒருவரான தர்மசேன பத்திராஜ, தை 28 இல், தனது 75 ஆவது வயதில் கண்டியில் காலமானார்!

சிங்கள மொழியில் சிறப்புப் பட்டத்தைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தை அவுஸ்திரேலியாவில் மொனாஷ் பல் கலைக்கழகத்திலும் பெற்ற அவர், யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம் உள்ளிட்ட இலங்கைப் பல்கலைக் கழகங்கள் சிலவற்றில் விரிவுரையாளராகவும், இறுதியில் இலங்கை ஊடகப் பயிற்சி நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

ஆரம்பத்தில் நாடகங்களையும், பின்னர் - குறும்படங்கள், முழுநீளத் திரைப்படங்கள், விவரணப் படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் என்பவற்றையும் உருவாக்கியுள்ளார். அவரது திரைப்படங்கள் பல உலகத் திரைப்பட விழாக்கள் பலவற்றில் பங்குபற்றியுள்ளன; சிலவற்றில் விருதுகளையும் பெற்றுள்ளன. அவ்வாறே இலங்கையில் திரைப்படத்திற்கான அரச விருதுகளையும், மற்றும் தனியார் அமைப்புகளான "திரைப்பட விமர்சகர் - பத்திரிகையாளருக்கான கழகம்" (FCJAC), "உலக கத்தோலிக்கத் திரைப்பட நிறுவனம்" (OCIC - கொழும்பு) ஆகியவற்றின் விருதுகளையும் பத்திராஜ பெற்றுள்ளார்.

முதலில் சத்துரோ (எதிரிகள்) என்னும் குறும் படம், 1969 இல் அவரால் உருவாக்கப்பட்டது. சிங்களக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட சுமார் 15 குறும்படங் களைக் கொண்ட காட்சி, திரையரங்குகளில் அக்காலத் தில் நடைபெற்றபோது இதனைப் பார்க்க முடிந்தது. விமல் டி கொஸ்தா என்பவர் அடிமட்ட மனிதனாக நடித்திருந்தார். ஒரு பூங்காவில் வசதியான தோற்றத்தில் உள்ள ஒருவர், நீளமான வாங்கில் அமர்ந்திருக்கிறார். அவரின் முன்னால் வரும் அடி மட்டத்தைச் சேர்ந்த ஒருவன், வெறுப்புடன் அவரை உற்று நோக்கியபடி வலம் வருகிறான். பிறகு கையிலுள்ள கத்தியினால், அவருக்குப் பக்கத்தில் - வாங்கில் ஓங்கிக் குத்துகிறான்; அவர் பதற்றமடைகிறார்; இவனது முகத்தில் கோபமும் பிறகு திருப்தியும்! வர்க்க முரண்பாட்டின் அடிப்படையிலான வர்க்கக் கோபத்தின் வெளிப்பாடாக இதனைக் கொள்ளலாம். ஆனால், சாதாரண ஒருவர் மீதான இவ்வெளிப்பாடு - வகை மாதிரித்தன்மையுடன் - பொருத்தமானதாக அமைய வில்லை; இயல்புத்தன்மையும் காணப்படவில்லை. சிங்களத் திரைப்பட விமர்சகர்களான விமல் திசநாயக்கவும் அஷ்லி ரத்னவிபூஷணவும் கூட ஓரிடத்தில் பின்வருமாறு கூறுகின்றனர் : "திரைப்பட ஊடகம் குறித்த அவருடைய ஈடுபாட்டினையும் சமூக விமர்சனம் குறித்த அவருடைய அபிலாஷைகளையும் இந்தக் குறும்படம், முதிராத வடிவத்தில் வெளிப்படுத்திக் காட்டியிருந்தது."

பத்திராஜவின் முதலாவது முழுநீளத் திரைப் படமாக "அஹஸ் கவ்வ" (ஆகாய கங்கை) 1974 இல் வெளி யானது. அது வேலையற்ற மூன்று இளைஞரைப் பற்றியது; சமூக நிலைமைகள் பற்றிய விமர்சனத்தை உள்ளடக்கியது.

இரண்டாவது திரைப்படமான "எயா தன் லொக்கு லமயெக்" (அவள் இப்போது பெரியபிள்ளை) 1977 இல் வெளிவந்தது. யாழ்ப்பாணம் மனோகரா திரையரங்கிலும் சில நாள்கள் இது திரையிடப்பட்டது. வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணின் நிலைமைகள், அவள் வன்புணர்வுக்கு உள்ளாதல், வறியவர்கள் மீதான அதிகார சக்திகளின் அழுத்தங்கள் முதலியனவற்றை இது சித்திரிக்கிறது.

அடுத்ததாக 1978 இல், "பம்பரு அவித்" (குளவிகள் வந்துவிட்டன) வெளியானது. மீனவக் கிராமத்தில் நடக்கும் சுரண்டலையும், நகரிலிருந்து வரும் இளைஞர் குழுவால் மாற்றுக் குரல் எழும்புவதையும், வெறும் பேச்சொன்றை

நிகழ்த்திவிட்டு அமைதியாகும் (செயலற்ற) ஓர் இடது சாரியையும்; தொடரும் நிகழ்வுகளால் அங்கு புதிதாகப் பொலிஸ் அரண் அமைக்கப்படுவதையும் படம் காட்டுகிறது. பொலிஸ்காரர்தான் குளவிகளாகச் சுட்டப்படுகின்றனர்!

1978 இல், 'பொன்மணி' தமிழ்ப் படமும் வெளி வருகிறது. யாழ்ப்பாணச் சூழலில், தமிழ் வாழ்க்கைப் பின்னணியில் படம் அமைகிறது. சாதி, சீதனப் பிரச்சினை கள் குவிமையப்படுத்தப்படுகின்றன. காட்சிப்படுத்தல் பண்பு முக்கியம் கொள்கிறது.

அடுத்து 1980 இல், 'பாற திகே' (பாதை நெடுகிலும்) வருகிறது. ஒரு நகர்ப்புற இளம் ஜோடியின் பொருளாதார நிர்ப்பந்தங்கள், உறவில் உருவான கர்ப்பத்தைக் கலைக்கத் தேவையான பணத்தைச் சேகரிப்பதற்கான முயற்சியின் கஷ்டங்கள் முதலிய வற்றைக் காட்டுகின்றது.

முக்கிய திரைப்படமான 'சொல்தாது உன்னஹே' (திருவாளர் படைவீரன்), 1981இல் வெளிவந்தது. சுதந்திர தினமான மாசி 4 ஆம் திகதியன்றும்; அதன்முன் வரும் 3 ஆம் திகதியும், பின்னர் வரும் 5ஆம் திகதியுமாகிய மூன்று நாள்களிலும் நடைபெறும் கதை. யதார்த்தத்தில் வறியவர்களுக்குச் சுதந்திரம் இன்னும் கிட்டவில்லை என்பது, படத்தின் செய்தி!

1994 இல், "வா சுழி"யை (சுழற்காற்று) உருவாக்கினார்.

2001 இல், "மத்து யம் தவச" (எதிர்காலத்தில் சில நாள்கள்) உருவாக்கப்பட்டது. ஒப்பந்தக் கொலைகாரர் பற்றியது இது. சிங்கப்பூர் உலகத் திரைப்படவிழாவிலும், டெல்லி திரைப்பட விழாவிலும் திரையிடப்பட்ட இது, யாழ். பல்கலைக்கழக் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற திரைப்பட விழாவிலும் காட்டப்பட்டது.

காஃவ்காவின் கதையொன்றைத் தழுவி, "ஸ்வரூப" (சுயஉருவம்) திரைப்படம், 2014 இல் உருவாக்கப்பட்டது.

2006 இல், "இன் சேர்ச் ஒஃவ் ஏ ரோட்" (ஒரு பாதையைத் தேடி) என்ற "விவரண – புனைவுத்" திரைப் படத்தை வெளியிட்டார். யுத்தகாலத்தில் ஏ 9 பாதை மூடப் பட்டு, தொடருந்துச் சேவையும் இல்லாத காலங்களில் – வட பிரதேச மக்களின் தெற்கு நோக்கிய பயணங்கள் எவ்வாறிருந்தன என்பவற்றை இப்படம் ஆராய்கிறது; பின்னணியாக, முந்திய கால நிலைமைகளும் விபரிக்கப் படுகின்றன.

**

அ) தர்மசேன பத்திராஜவைச் சில தடவைகள் சந்தித்துக் கதைத்தமை நினைவுக்கு வருகிறது. அஹஸ் கவ்வ திரைப்படத்தை அக்காலத்தில், கண்டி டி. எஸ். சேனநாயக்க நூலகத்திற்குப் பக்கத்திலுள்ள திரைய ரங்கில் பார்த்தேன்; எனக் குப் பிடித்துக்கொண்டது. 1975 ஆம் ஆண்டளவில் விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்தபோது, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குச் சென்றவேளை, பேராதனையில் ஏற்கெனவே சந்தித்திருந்த ஆனந்த நடராஜாவைக் கண்டேன். அவர் பொருளியற்றுறையில் விரிவுரையாளராக இருந்தார். விரிவுரையாளருக்கான பொது அறைக்கு என்னைத் தேநீர் அருந்தக் கூட்டிச்சென்ற போது, அங்கிருந்த ஒருவருக்கு, "திரைப்படங்கள் இலக்கியங்களில் ஆர்வமுடையவர்" எனச் சொல்லி, என்னை அவர் அறிமுகப்படுத்தினார். அவர்தான் தர்மசேன பத்திராஜ எனத் தெரியவந்தது. நான் அவரது சத்துரோ குறும்படத்தையும், அஹஸ் கவ்வையும் பார்த்திருப்பதாகச் சொன்னபோது ஆச்சரியத்துடன் மகிழ்ச்சியையும் வெளிக்காட்டினார். தொடர்ந்த கதையாடலில் ஏற்கெனவே இரசித்துப் பார்த்திருந்த லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் படங்களையும், சிறி குணசிங்க வின் 'சத் சமுத்திர', செனரத் யாப்பாவின் 'ஹந்தானே கதாவ' மற்றும் 'மினிசா சஹ கப்புட்டா" குறும்படம் முதலிய வற்றையும் குறிப்பிட்டேன். தனது படம் உட்பட வேறு முக்கிய – கலைத்துவங்கொண்ட சிங்களப் படங்களைப் பார்த்த ஒருவரின் கருத்துக்களை யாழ்ப் பாணத்தில் அறியவந்தமை, அவருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியமையை நான் உணர்ந்துகொண்டேன். ஒரு முக்கிய திரைப்பட நெறியாளரைச் சந்திக்க நேர்ந்ததில் எனக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

ஆ) கண்டியிலிருந்து இடமாற்றம்பெற்று, 1976 ஆம் ஆண்டு தை மாதம் சுண்டுக்குழி அஞ்சலகத்தில் பணி யாற்றத் தொடங்கினேன். அக்காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களாக இருந்த பத்திராஜவும், சுனில் ஆரியரத்னவும் (பிந்திய நாள்களில் 'சருங்கலே' முதலிய படங்களின் நெறியாளர்), சுசரித்த கம்லத்தும் (முக்கியமான விமர்சகர்) – நூறு யார் தூரத்துள் இருந்த 'ஃப்ளூரிபன் ஹொட்டேலு'க்குப் பக்கத்திலுள்ள வீடொன்றில் தங்கியிருந்தனர். சில நாள்களின் பின்னேரங் களில், மூவரும் முன்புற வீதியில் சறத்துடன் நடந்து வருவார்கள்; அஞ்சலகத்துக்கும் சிலவேளைகளில் வரு வார்கள். மாலையில் அஞ்சலகத்தில் கூட்டம் இருக்காது. எனவே அவ்வேளைகளிலும், திரைப்படம் உட்பட வேறு பலவற்றையும் பத்திராஜவுடன் கதைத்துள்ளேன்.

இ) 1981 ஆம் ஆண்டில், கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் பணியாற்றிக்கொண்டிருந்தேன். ஒருநாள் பின்னேர முறைவேலை முடிந்ததும், இரவு 8.45 மணிபோல், வெள்ளவத்தைக்குச் செல்ல வழமைபோல் கோட்டை தொடருந்து நிலையத்துக்குச் சென்றேன். தொடருந்து நிலைய வெளிப்புறத்தில் பத்திராஜ நின்றுகொண்டிருந்தார்; அப்போது மழை பெய்துகொண்டிருந்தது. அவரைக் கண்டதும் உள்ளே செல்லாமல், அவருடன் கதைக்கத் தொடங்கினேன். அப்போதுதான் கண்டியிலிருந்து தொடருந்தில் வந்திறங்கியதாகச் சொன்னார். அதற்கு முந்திய கிழமைதான் வெள்ளவத்தை சவோய் திரை யரங்கில், அவரது "சொல்தாது உன்னஹே" திரைப் படத்தைப் பார்த்திருந் தேன்; றெஜி சிறிவர்த்தன அத்திரைப் படத்தை உயர்வாகப் பாராட்டி எழுதிய 'லங்கா காடியன' கட்டுரையையும் வாசித் திருந்தேன். படம் என்னை மிகவும் கவர்ந் திருந்தது. அதனைத் தெரிவித்துவிட்டு, நான் சவோயில் படம் பார்த்த போது, ஏழு






பார்வையாளர் மட்டும்தான் இருந்தனர்! மிக உயர்தரமான அப்படத்துக்கு ஏன் குறைவான பார்வை யாளர்? சிங்களப் பார்வையாளரின் இரசனைத் தரம் உயர்ந்தது என்று சொல்லப்படுகிறதே! என, எனது வியப்பைச் சொன்ன போது, அவர் சொன் னார்: "ஒக்கோம பச்ச ஃபொறு!" (எல்லாமே பச்சைப் பொய்!). மேதை மைசார் அக்கலைஞனின் சொற்களில், புறக்கணிப்பு யதார்த்தத்தின் கசப்பை உணர்ந்தேன்!

ஈ) 2005 அளவில், 'ஒரு பாதையைத் தேடி' என்ற திரைப்பட உருவாக்கத்தின்போது அவர் யாழ்ப்பாணம் வந்த வேளை, நீண்ட காலத்தின் பின் அவரைச் சந்தித்தேன்; யாழ்ப்பாணத்தில் தங்கிப் படப்பிடிப்பில் ஈடுபட்டார். பல தடவைகள் எனது வீட்டுக்கும் வந்தார். அல்லைப்பிட்டி தடை முகாம் அருகிலும், இடம்பெயர்ந் தோர் தங்கியுள்ள சுன்னாகம் சபாபதிப் பிள்ளை முகாமி லும், அகதிகள் தங்கியிருந்த சுன்னாகம் தொடருந்து நிலையத்திலும் படப்பிடிப்புகள் நடைபெற்றபோது, என்னையும் கட்டாயம் வரும்படி அழைத்துச் சென்றார். அங்குள்ளவர்களுடன் உரையாடுவதில் மொழிரீதியில் உதவியாக இருந்தேன். அத்திரைப்படத்தின் இறுதியில் நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கும் பட்டியலில், எனது பெயரும் இடம்பெற்றுள்ளது. கிளாலிப் பயணக் காட்சிகள் எடுப்பதில் சிக்கல்கள் இருந்தன. குறிப்பாக கிளாலியில் துறை அமைத்துப் படமாக்குவதற்கு அரசாங்க அனுமதியில்லை. எனவே வன்னியில் கிளாலித்துறையை உருவாக்கிப் படமாக்க எண்ணினார். வன்னிக்குச் சென்று, புதுவை இரத்தினதுரையினதும் நிதர்சனம் சேரலாத னினதும் உதவியைப் பெற்று, தான் நினைத்தவாறே படமாக்கினார். பிறகு யாழ்ப்பாணம் வந்தபோது, வன்னி யில் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பைக் கூறி, மனம் நெகிழ்ந்து நன்றி பாராட்டினார். இவ்வாறான பெரும் ஒத்துழைப்புக் கிடைக்குமெனத் தானும் படக்குழுவினரும் எதிர்பார்த்திருக்கவில்லை என்றும் சொன்னார்!

உ) 2015 இல், கொழும்பில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவுக்குச் சென்றிருந்தேன். எமில் குஸ்தூரிக்கா என்ற யூகோஸ்லாவிய நெறியாளரின் திரைப் படங்கள் 'மீள்நோக்கு' என்னும் பிரிவில் காட்டப்பட்டன. ஒரு படத்தைப் பார்ப்பதற்காக, இலங்கை ஊடகப் பயிற்சி நிறுவனத்தின் சிறிய திரையரங் கிற்குச் சென்றிருந்தேன். படம் தொடங்க இன்னும் நேரம் இருந்தது. பயிற்சி நிறுவனத்தின் தலைவராகப் பத்திராஜ இருக்கிறாரென அறிந்திருந்தேன். எனவே, அவரைச் சந்திக்கலாமென அதே கட்டடத்தில் இருந்த அவரது அலுவலகத்துக்குச் சென்றேன். மேசை பின்னால் கதிரையில் அமர்ந்திருந்தார். நான் முன்னே சென்று வணக்கம் சொன்னேன். எழுந்து கை நீட்டியவர் "யூ ஆ மிஸ்ரர்....?" எனக் கேட்டார். அவர் என்னை அடையாளங் காணவில்லை என்று உணர்ந்ததும், "ஐ ஆம் யேசுராசா" என்றதும் மேசைக்கு அப்பால் வந்து, "ஓ! யேசுராசா...." என்று சொன்னபடி தோளுடன் சேர்த்து அணைத்தார். அறைக்கு வந்த ஒருவரிடம், "மகே பரண யாழுவா" (எனது பழைய நண்பர்) என்று கூறியபடி, தேநீர் கொண்டுவருமாறு சொன்னார். அவருடன் சிறிது நேரம் உரையாடினேன். எமில் குஸ்தூரிக்காவின் படம் பார்க்க வந்ததைச் சொன்ன போது, "இணையத்தில் அவரது படங்களைப் பிறகும் பார்க்கலாம்; விழாவில் வேறு படங்களைப் பாருங்கள்" என்றும் அறிவுறுத்தினார். கொழும்புக்கு வரநேர்கையில் மறுபடி சந்திக்கிறேன் எனக் கூறி விடை பெற்றேன்.


சென்ற வருட யாழ்ப்பாண உலகத் திரைப்பட விழாவில், வாழ்நாள் சாதனையாளர் விருது அவருக்கு வழங்கப்பட்டமை மகிழ்வைத் தந்தது. ஆயினும், கொள்கை நிலைப்பாடு காரணமாக பகிஷ்கரிப்பு முடிவின்படி, அத்திரைப்பட விழா நிகழ்வு எதிலுமே நானும் நண்பர்களும் பங்கேற்கவில்லை. அதனால், பத்திராஜவையும் சந்திக்க வாய்ப்பேற்படவில்லை. தற்போதோ, இனிமேல் யாருமே சந்திக்க முடியாத வகையில், எல்லோரையும் விட்டு அவர் சென்றுவிட்டார்!

**

அதுவரையிலுமான திரைப்படப் போக்கிலிருந்து தர்மசேன பத்திராஜவின் படைப்புகள் வேறுபடுவதாக விமர்சகர் தெரிவிக்கின்றனர். அவரது இடதுசாரி நிலைப் பாடிலான பார்வையே அவரது படைப்புகளை வேறுபடுத்து கின்றன. சமூக முரண்பாட்டு நிலைமைகள் மனிதரைக் கட்டுப்படுத்துவது பற்றிய கவனக் குவிப்பும், அவற்றிலிருந்து அவர்கள் விடுபடுவது பற்றிய விழிப்புணர்வைத் தூண்டு வதும் அவரது படைப்புகளின் தளமாக அமைந்துள்ளன.

பியல் சோமரத்ன என்ற விமர்சகர், பத்திராஜவின் கலைக் கொள்கையில் முரண்பாடுகள் உள்ளதாகக் குறிப்பிடுகிறார். "திரைப்படத்தின் அழகியல் பெறுமானம் எந்த மேன்மையான உள்ளடக்கத்திலும் தங்கியிருக்க வில்லை. ஒரு படத்தின் மதிப்பு, அதன் வடிவத்திலும் அமைப்பிலும்தான் தங்கியிருக்கின்றது. ஒரு படத்தின் உள்ளடக்கத்தை விட, அதன் உருவமே முக்கியமெனக் கருதுகிறேன்." என்று 1970 இல் கூறிய பத்திராஜ, 1982 இல் பின்வருமாறு கூறியிருப்பதை, அவர் சுட்டிக்காட்டுகிறார்: "எனது படைப்புகளில் உள்ளடக்கத்திலிருந்துதான் உருவம் தோன்றுகிறது. எந்தக் கலை வடிவத்தையும் போலவே திரைப்படத்திலும் உள்ளடக்கம்தான் தீர்மான கரமானது; உருவமல்ல."

1981 இல், "இருக்கும் யதார்த்தம் பற்றிய விழிப்புணர்வைத் தான் பெறுவதும், அதனைத் தனது கலைகளுக்கூடாக - எத்தகைய சூழலில் தாங்கள் வாழ்கிறார்கள் என்பது பற்றிய உண்மையானதும் சரியானது



மான சமூக யதார்த்தப் பார்வையைத் தனது பார்வையாளர் பெறுமாறு செயற்படுவதுமே, கலைஞனின் பொறுப்பும் கடமையுமாகும்." என்று, பத்திராஜ கூறினார்.

ஆனால், "பார்வையாளரின் கண்களுள் விரலோட்டி, இதுதான் நான் உனக்குச் சொல்ல வருவது என்று சொல்ல நான் விரும்பவில்லை. நான் சொல்ல வருவதை அவர்கள் புரிந்து கொள்ள முடிந்தால் நல்லது; அல்லா விடில் மிகவும் கூடாதுதான்." என்று 1982 இல் அவரே கூறியிருப்பதையும் பியல் சோமரத்ன சுட்டிக் காட்டுகிறார்.

ஒரு திரைப்பட ஆர்வலனாக அஹஸ் கவ்வ, சொல்தாது உன்னஹே, பொன்மணி ஆகியன என்னைக் கூடுதலாகக் கவர்கின்றன.

வேலையற்ற மூன்று இளைஞர்களின் வாழ்வு நெருக்கடிகள், வேலையற்ற தன்மை, அதனால் ஒருவனின் காதலில் சிக்கல் ஏற்படுவது, பொருளாதாரப் பிரச்சினையின் நிர்ப்பந்தத்தில் சமூக விரோத - கள்ளக் கடத்தல் கோஷ்டியில் இணைந்து அவன் இறந்து போவது என்பவை, அவலமான சமூக யதார்த்தப் பதிவுகள்; காட்சிபடுத்தும் பண்பினாலும் சிறப்பாக அமைந்தவை. எதிர்கால சுபிட்ச வாழ்வுக்கான அரசியல் கருத்துக்களைப் பகிரும் தொழிற்சங்கவாதியும் - குப்பை லொறிச் சாரதியுமான பாத்திரமும் முக்கியமானது.

சொல்தாது உன்னஹே மிகவும் சிறப்பாக அமைந்த திரைப்படமாகும். சுதந்திர நாளுக்கு முதல் நாளிலும், சுதந்திர நாளிலும், அடுத்த நாளிலும் கதை நிகழ்கிறது. பெண் பாலியல் தொழிலாளி, முடிச்சுமாறி, மனநலன் சிதைவுற்ற முன்னாள் போர்வீரன், சூழல் நிர்ப்பந்தங்களினால் குடிகாரனாகியுள்ள ஒருவர் ஆகிய நான்குபேர் முக்கிய கதாமாந்தர். இந்த மக்களுக்குச் 'சுதந்திரம்' என்பது பெறுமதியற்றது என்பதும், அரசின் இறைமை ஆயுதப் படைகளிடம்தான் உள்ளது என்பதும் கலைத்துவமாக வெளிக்கொண்டுவரப்படுகின்றன. இலங்கையின் மதிப்புக்குரிய கலை இலக்கிய விமர்சகரான றெஜி சிறிவர்த்தன, "அனுபவத்தையும் உருவத்தையும் கோட்பாடையும் இணைத்த, முழுவதும் அரசியலமைந்த முதற் சிங்களத் திரைப்படம்" என இதனைப் பாராட்டி, "லங்கா காடியன்" இதழில் முன்னர் எழுதியிருப்பது முக்கியமானது.

வழமையான தமிழகத் திரைப்படங்களிலிருந்து 'பொன்மணி' மாறுபட்ட ஒரு படைப்பாகும். பிறநாட்டுத் திரைப்பட விழாக்களிலும் பாராட்டுப் பெற்ற ஒரு திரைப்படக் கலைஞனின் முயற்சி என்பது, நல்லதோர் ஆரம்பத்தை எமக்கு அளித்தது. காட்சிகளால் கதை சொல்லல், யாழ்ப்பாண வாழ்வு யதார்த்தத்தை - அதன் முக்கிய சமூகப் பிரச்சினைகளான சாதிப் பாகுபாடு, சீதனப் பிரச்சினை, சம்பந்தப்பட்ட மனிதர்களின் நசுக்கப்படும் உணர்வுகள், வரட்டுக் கௌரவத்தால் நிகழும் மனித அவலங்கள் போன்றவை பற்றிய விழிப்புணர்வை தூண்டுவது என்பனவெல்லாம் முக்கியமானவை. வழமையான தமிழ்ப் பாடங்களின் மிகை யதார்த்தக் கனவுலகச் சித்திரிப்புப் போலித்தனம் எதுவும், படத்தில் இல்லை. பொதுவில் பாத்திரங்கள் இயல்பாகவுள்ளன; மிகை நடிப்பு இல்லை. தாய் பாத்திரமும் அண்ணன் பாத்திரமும் மிகச் சிறப்பாக உருவாக்கப் பட்டுள்ளன; பவானி திருநாவுக்கரசும், குழந்தை சண்முகலிங்கமும் மிகவும் பாராட்டுக்குரியவர்கள். ஆயினும், சில கட்டங்களில் சில பாத்திரங்கள் பேசும் மொழியும், அதனைப் பேசும் முறையும் செயற்கைத் தனத்தைத் தோற்றுவித்துக் கேலிக்குரியனவாகின்றன; சாதாரண உரையாடல் பிரசாரத் தொனியை ஏற்படுத்தியும் விடுகிறது. இக்குறைபாடுக்குப் பொறுப்பானவர், திரைப் பிரதியை எழுதிய காவலூர் ராசதுரை அவர்களே! பத்திராஜவுக்குத் தமிழ் தெரியாதமை, இவை குறைபாடுகள் என்பதை அவர் கண்டு கொள்வதைத் தடுத்துவிட்டன. இலக்கிய, நாடக முயற்சிகளுடன் நெருங்கிய தமிழர் பலர் இத்திரைப்பட முயற்சியில் இணைந்திருந்தபோதிலும், அவர்களில் யாரும் இக்குறைகளை அவதானிக்கவோ சீர்செய்யவோ முனையாதது - இன்று நோக்குகையில் பெரும் விநோதமானதாகத் தெரிகிறது! இக்குறைபாடு சீர்செய்யப்பட்டிருந்தால், தமிழ்த் திரைப்பட வரலாற்றில் மிகவும் முக்கியமானதொன்றாக, ஈழத்தவரான எம்மைப் "பொன்மணி" பெருமைப்படுத்தியிருக்கும்! எப்படியிருந்தாலும், தமிழ்த் திரைப்பட முயற்சிகளின் வரலாற்றில் பத்திராஜவின் பாத்திரம், முன்னோடித் தன்மையைக் கொண்டுள்ளது!

இலங்கைத் திரைப்பட வரலாற்றில் மாறுபட்ட மரபொன்றைத் தோற்றுவித்தவர் என்ற வகையிலும், கவனத்துக்குரிய படைப்புகள் சிலவற்றைக் கலைத்துவம் பேணி உருவாக்கியவர் என்ற வகையிலும், தர்மசேன பத்திராஜ முக்கியமான - மதிப்புக்குரிய திரைப்படக் கலைஞன் என்பதில் ஐயமேதுமில்லை! ஆனால், எழுபதுகளில் மேலோங்கியிருந்த தீவிர இடதுசாரி அலையில் - லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் கீழிறக்கம் செய்யப்பட்டு, தர்மசேன பத்திராஜ மேலுயர்த்தப்பட்டமையை ஏற்றுக்கொள்வது என்பது கடினமாயுள்ளது! அதே காலகட்டத்தில் - இதே விதமாக, இந்திய இடதுசாரி விமர்சகர்களால் சத்யஜித் ரே கீழிறக்கம் செய்யப்பட்டு மிரினாள் சென் மேலுயர்த்தப்பட்ட கசப்பான வரலாறும், தவிர்க்கவியலாது நினைவில் தோன்றுகிறது!

*05.02.2018*

***

மூதூர் மொகமட் ராபி



# உத்தம வில்லி

"ஆன்ரி இது உங்கடது தானே...?"

தோளிலே டியுஷன் பையுடன் சைக்கிளை நிறுத்தி மேலே அண்ணாந்து பார்த்துக் கேட்டவனின் கையில் இருந்த பொருளைப் பார்த்ததும் ஓர் உயிர்ப்பான மின்சாரக்கம்பியை மிதித்ததைப் போலிருந்தது எனக்கு. இந்த நேரம் பார்த்து பொதுநூலகத்துக்குச் சென்றிருக்கும் எனது கணவரோ டியூஷன் போயிருக்கும் சுஜன்யாவோ வந்துவிடாமலிருக்க வேண்டுமே என்று மனம் பதைபதைத்தது.

"இரு தம்பி கொஞ்சம், கீழே இறங்கி வாறேன்"

"இது எப்படி இவன்ட கையில் வந்தது" என்று யோசித்தவாறு, என்று அவசர அவசரமாய் படியிறங்கத் தொடங்கினேன். எனது இளைய மகள் தனுஷாவுடன் கனகம் அக்காவின் டியூட்டரியில் படிக்கும் அடுத்த தெருப்பையன் துவாரகன்தான் அவன். அவனைப் "புறா துவாரகன்" என்றால்தான் எல்லோருக்கும் தெரியும். இரண்டு கிழமையாக எனது வீட்டிலே வீசிக் கொண்டிருக்கும் புயல்காற்றின் மையமாக இருக்கும் சனியன் எப்படி இவன் கைக்கு வந்தது?

மூன்று நாட்களுக்கு முன்புதான் நடுச்சாமத்திலே ஓசைப்படாமல் எழுந்து யாருக்கும் தெரியாமல் அதை நான் ஏற்கனவே ஒளித்து வைத்திருந்த இடத்திலிருந்து திரும்பவும் கையிலெடுத்தேன். பேய் பற்றி எனக்குள்ள மெலிதான பயத்தையெல்லாம் சிறிதுநேரம் ஒத்தி வைத்து விட்டு நாங்கள் வசித்த நாலுமாடிக்குடியிருப்பின் மொட்டை மாடிக்குப் படியேறி வீசும் குளிர்காற்றிலே நின்று நிதானித்தேன்.

செய்யப்போகும் காரியத்தை நினைத்து அன்றிரவு ஒரு மெலிதான குற்றவுணர்வு இருக்கத்தான் செய்தது. இருந்தாலும் என்னைப் புரிந்து கொள்ளாத கணவரையும் தனுஷாவையும் நினைத்த மாத்திரத்திலே மனதிலே மண்டிக்கொண்டு வந்த கோபத்தையெல்லாம் ஒன்று திரட்டி அதை இருட்டிலே ஏதோ ஒரு திசையிலே வீசியெறிந்துவிட்டு ஓசைப்படாமல் கீழிறங்கி வந்து படுத்துக்கொண்டேன். அத்தனை உயரத்தில் இருந்து வீசியதால் நிச்சயம் அது வெகுதூரத்தில் எங்காவது விழுந்து நொறுங்கிச் சிதறியிருக்கும் என்று முற்று முழுதாக நம்பினேன். அப்படித் தலைமுழுகிய இந்தப் பீடை எப்படி இவனின் கையிலே முழுதாக வந்து சேர்ந்தது...?

"ம்மா... அம்மா!"

படியிறங்கிக் கொண்டிருந்த எனக்கு மேலே வீட்டுக்குள்ளிருந்து அலறும் என் கடைக்குட்டிப் பையன் யதுவின் குரல் கேட்டது. "இப்போதுதானே தூங்க வைத்தேன் அதற்குள்ளே எழும்பிட்டானே.. அவனைப் போய்த் தூக்கிக்கொண்டு வருவதற்குள் கீழே நிற்பவன் போய் விடுவானோ?" என்று யோசித்தபடியே திரும்பவும் அவசர அவசரமாக மேல் நோக்கி ஏறத் தொடங்கினேன். மின்னலாய் வீட்டிற்குள் நுழைந்து தொட்டிலினுள் கிடந்தவனைத் தூக்கித் தோளிலே போட்டபடி மீண்டும் படிகளில் தடதடவென இறங்கினேன்.

நான், என் கணவர், தோளுக்கு மேல் வளர்ந்த இரு மகள்கள், கடைசியாய்ப் பிறந்திருக்கும் ஒன்பது மாத யதுஷன் இவர்கள்தான் எனது குடும்பம். எனது கணவர் சேவையிலிருந்து சுய விருப்பத்துடன் ஓய்வுபெற்றிருக்கும் ஒரு விமானப்படை உயரதிகாரி. அவருக்கு எல்லாமே நேர்த்தியாக இருக்க வேண்டும். அவர் இப்படித்தான் வாழவேண்டும் என்ற இலட்சியமுள்ளவர். ஆனால் நானோ எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்று நினைப்பவள். எதைச் செய்வதானாலும் முன்கூட்டியே திட்டமிட்டு நிறைவேற்றி வருபவர் அவர். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எதையாவது செய்துவிட்டு அதை நியாயப் படுத்துவதிலே கெட்டிக்காரி நான்.

நேர்மை, நேரந்தவறாமை, தேசப்பற்று, அதீத சுத்தம், பரவலான உலக அறிவு உட்பட எனது கணவரது சகல குணங்களையும் எனது மகள்களுக்கும் மற்றவர் களுக்கும் மிகவும் பிடிக்கும். அக்கம் பக்கத்திலுள்ளவர் களிலிருந்து அவருடன் வேலைபுரிந்தவர்கள் வரை அவற்றுக்காகவே அவரைப் பெரிதும் மதிப்பார்கள். இத்தகைய உதாரண மனிதராய் திகழும் அவரிடம் எனக்குப் பிரச்சினையாக இருப்பதே அவரது மேற்படி

குணங்கள்தான் என்றால் உங்களுக்கு ஆச்சரியமாகத் தானே இருக்கும்.

திருமணம் புரிந்த புதிதில் அவரது குணங்களை நானும் பெருமையாக நினைத்தவள்தான். ஆனால் நாளாக ஆக என்னால் அவற்றுக்கு ஈடுகொடுக்க முடியா திருந்தது. அவருக்கு வீடு எப்போதுமே பளிச்சென்று சுத்தமாக இருக்க வேண்டும். அவருக்குரிய விருந்தினர்கள் குறைவாக இருந்தாலும் விருந்தாளிகள் வீட்டுக்கு வந்த பிறகு முன்னறையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருப்ப தெல்லாம் அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. திருமண மான புதிதில் சிறிதுகாலம் நானும் ஒழுங்கானவள்தான் என்று அவரிடம் காட்டிக்கொள்ளப் பகீரதப் பிரயத்தன மெல்லாம் செய்து பார்த்தேன். ஆனால் சாயம் வெளுத்துப்போக அதிக நாட்கள் தேவைப்படவில்லை.

தன்னைப்போலவே தன்னைச் சார்ந்தவர்களும் இருக்க வேண்டும் என்று நினைப்பவர் அவர். ஆனால் மற்றவர்களை வருத்துகின்ற ரகமில்லை. மாறாக பிறர் செய்யத்தவறும் வேலைகளையும் தானே இழுத்துப் போட்டு அமைதியாகச் செய்துகொண்டிருப்பார். அதைத்தான் இன்றுவரை என்னால் தாங்கமுடிவதில்லை. அப்படிச் செய்வது அவருக்கு வெகுஇயல்பானதாக இருந்தாலும் அது ஏனோ என்னைக் குத்திக்காட்டுவதற் கென்றே அவர் செய்வது போலத் தோன்றும் எனக்கு.

“சே! இப்படிப் பண்ணுவதற்கு பதிலாக அடித் தால் கூடத்தாங்க முடியுமே” எனும் ஆற்றாமை மனதிற் குள் ஆத்திரமாய் திரளும். அதை வெளிப்படையாகக் காட்டவும் வழியில்லாமல் மறைக்கவும் முடியாமல் சமையலறைப் பாத்திரங்களில் மீதுதான் காட்டுவேன்.

“ஹேய், என்ன இண்டைக்கு சத்தமெல்லாம் கூடுதலாக் கேக்குது? ஓகோ.. என்ட காதில இருந்த அடைப்பு சரியாயிட்டுது போல” என்பார்.

அதிலும்கூட எத்தனை நையாண்டி பார்த்தீர் களா? இதைக்கேட்டு அடுத்த அறையிலே படித்துக் கொண்டிருக்கும் மூத்தவள் சுஜன்யா வாய்விட்டுச் சிரிப்பாள். அது என்னை இன்னும் கோபப்படுத்தும்.

ஒரு சராசரிக் கணவனைப்போல இந்த ஆள் இருந்திருந்தால் கூட ஒரு சண்டைபோட்டு மனதினுள்ளே மண்டிக் கிடக்கும் ஆற்றாமைகளைத் தீர்த்துவிடலாம். ஆனால் எல்லாவற்றிலும் கண்டிப்பான அந்த மனிதரின் செயல்களிலே இருக்கும் ஒழுங்கும் நேர்த்தியும் அவரது வார்த்தை வெளிப்பாட்டிலும் தவறாமல் வீற்றிருக்கும். அவரைப்போல வெளிப்படையாகவும் திறமையாகவும் பேசும் குணம் என்னிடம் கிடையாது என்பதால் அவரோடு விவாதம் செய்யப்போனால் மூக்குடைபடு வதைத் தவிர வேறுபலன் கிட்டுவதில்லை.

மணமான புதிதில் அவரது உத்தியோகம் காரணமாக குடும்பத்தைப் பிரிந்து நான் தலைநகருக்கு வரவேண்டியதாக இருந்தது. சகல வசதிகளுடன் கூடிய குவார்ட்டர்ஸ் ஒன்றில்தான் இருவரும் குடித்தனத்தை ஆரம்பித்தோம். குழந்தைகள் பிறக்கும் வரையிலே இருவருக்குமிடையிலே முரண்பாடுகள் ஏதும் பெரிதாய் தலையெடுத்திருக்கவில்லை. அதற்காக நாங்கள் மிகவும் அந்நியோன்னியமாக இருந்தோம் என்றும் சொல்லிவிட முடியாது. ஆரம்பத்திலே இனிமையாகத் தோன்றிய திருமண வாழ்க்கை, சிறிதுகாலம் போனதும் பெண்ணின் சுதந்திரங்களைப் பூட்டிவைக்கும் ஓர் அலங்காரச் சிறைதானோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது.

பிறந்து வளர்ந்த ஊரைவிட்டு வெகுதொலை விலே அதுவும் ஒன்றுக்குள் ஒன்றாய்க்கிடந்த உறவுகளைப் பிரிந்து பெரும்பகுதி நேரத்தை தனிமையில் கழிப்பது வேதனை தந்தது. ஊரிலிருந்து உறவினர்கள் யாராவது கொழும்புக்கு வந்தால் என்னையும் அவரையும் வந்து பார்த்துவிட்டுச் செல்வதுண்டு. அவ்வாறு வருபவர்க ளோடு புறப்பட்டு ஊருக்கே திரும்பப் போய்விட்டாலென்ன என்று சிலசமயங்களிலே நினைக்கத் தோன்றியிருக்கின்றது.

ஊருக்குச்சென்று எல்லோரையும் பார்த்துவிட்டு வரவேண்டும் போலிருக்கும். ஆனால் அவரது தொழில் அதற்கு இடம் தருவதில்லை. நான் மட்டும் தனியாக போகலாமென்றால் அதை உரிமையோடு நேரடியாக அவரிடம் கேட்டிருந்தால் ஒருவேளை அவரே, “சரி போய் வா” என்று அனுமதி தந்திருக்கூடியவர்தான். ஆனால் அதையும் நான்தான் கெடுத்து வைத்தேன். ஆம், அவர் தனக்குத் தேவையானதை சுற்றிவளைக்காமல் நெற்றிக்கு நேரே கேட்டுப் பெறுகின்ற பழக்கமுடையவர். நானோ எனக்கு விருப்பமான எதையுமே முரண்பட்டுத்தான் பெறும் இயல்புடையவள். சிறுவயதிலிருந்தே எதையாவது ஒன்றை நான் ஆசைப்பட்டுவிட்டால் அது எனக்கு கிடைத்தேயாக வேண்டும். “கிடைக்காது” என்று ஒரு தெரிவும் வாழ்க்கை யில் நிறையவுண்டு என்பதை அப்போதெல்லாம் நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இதனால் எதையும் சண்டை போட்டு அடைந்தே பழகியிருந்தேன்.

ஊருக்குப் போய்வர அனுமதி கேட்டால் எங்கே ஒருவேளை மறுத்து விடுவாரோ என்ற அங்கலாய்ப்பிலே அவர் வேலைக்குச் சென்ற பின்பு ஏதாவது ஒரு திடீர் காரணத்தை உருவாக்கி ஊருக்கு பஸ்ஸேறும் பழக்கத்தை ஆரம்பித்தேன். யாராவது உறவினர்கள் கொழும்புக்கு வந்திருப்பதாக அறிந்தால்போதும் மனிதர் வேலைமுடிந்து வருவதற்கிடையில் அவர்களோடு பாதி தூரத்தைக் கடந்திருப்பேன்.

இப்படி அனுமதி கேளாமல் புறப்படுவதிலே இன்னுமொரு வசதியும் எனக்கிருந்தது. அனுமதி கேட்கப் போனால் ஒன்றில், “நானும் வருகிறேன்” என்று சிலவேளை அவரும் கிளம்பி வந்துவிடுவார். அல்லது அவருக்கு வசதி யான தினத்தைத் தெரிவுசெய்து என்னைக் காத்திருக்கச் சொல்வார். அப்படி அவரும் ஊருக்கு வந்துவிட்டால் அங்கு நான் சுதந்திரமாக இருக்கத்தான் முடியுமா? அங்கே யும் வந்து என்னைச் சுதந்திரமாக இருக்க விடமாட்டாரே.

திடீரென புறப்பட்டு போவதற்காக ஊரிலுள்ள பலரை திடீர்ச் சுகவீனர்களாக்கினேன். சாகும் வயதிலிருந்த சிலருக்கு மரணச் சடங்குகளை முன்கூட்டியே வைத்தேன். பொய்களின் சுவாரசியமெல்லாம் அவை என்றாவது ஒருநாள் உண்மைகளிடம் பலியாகிவிடும் என்பதில்தானே இருக்கின்றது? என்னுடைய புளுகுகளும் ஒவ்வொன்றாக அவரிடம் வெளுத்துப்போகலாயின. ஆயினும் புதுமனைவியான என்னை பலமுறை பெருந்தன்மையுடன் மன்னித்தே வந்திருக்கின்றார்.

விளையாட்டுப்போல நினைத்து ஆரம்பித்த சொல்லாமல் ஊர்கிளம்பும் படலம் அவரது புத்திமதி, ஆலோசனை, எச்சரிக்கை, கட்டளை எல்லாவற்றையும் மீறித் தொடர்ந்து நிகழவே மண வாழ்விலே பல குழப்பங்கள் உருவாகின. ஒருகட்டத்தில் நல்ல மனிதராக அனைவராலும் அறியப்பட்டிருந்த எனது கணவருக்

குள்ளே ஒளிந்துகிடந்த சில நிழலான பக்கங்களும் வெளிப்படலாயின. என்னைத் தனியாக விட்டுவிட்டு வேலைக்குச் செல்வதற்கே யோசிக்க ஆரம்பித்தார். இயல்பாக வீட்டிற்கு வரும் எனது உறவினர்களையெல்லாம் சந்தேகக்கண் கொண்டு பார்க்கத் தொடங்கினார்.

"உன்னுடைய தேவைக்காக எந்தவொரு பொய்யையும் தயங்காமல் சொல்லக்கூடியவள்தான் நீ!" என்று ஒருநாள் என் முகத்துக்கு நேரே கூறினார். அன்றுதான் ஆரம்பித்தது தொல்லை. அதற்காகவே காத்திருந்த நான் வலியச்சண்டைபிடித்து மீண்டும் ஊருக்குப் படையெடுத்தேன். இந்தத் தடவை கோபித்துக்கொண்டு வந்ததனால் அதையே சாக்காக வைத்து ஊரிலேயுள்ள உறவுகளோடு நீண்ட காலம் தங்கினேன். முறைப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தால் இப்படியெல்லாம் இஷ்டத்திற்கு இருக்க முடியுமா என்ன?

கிராமத்திலே ஏறத்தாழ ஒரு கோயில் பசுவாய் அலைந்தேன். என்னைப் பெற்று வளர்த்த குடும்பத்தினரும் சம்பிரதாயங்கள் அறியாதவர்களாக அல்லது அதைப் பற்றி அலட்டிக்கொள்ளாதவர்களாக இருந்தது இன்னும் வசதியாகிப்போனது. அப்படியும் அவர்களில் சிலர் கணவரைப் பிரிந்திருப்பதைப்பற்றி பேசத்தான் செய்தார்கள். உடனே எனக்குள்ளே பொதிந்திருக்கும் கற்பனை வளம் மற்றும் சமயோசித சாகசக் குணங்களையெல்லாம் பயன்படுத்தி எனது கணவரை ஒரு பெண்ணை வதைக்கும் கொடுமைக்காரராக அவர்களிடம் சித்தரித்து விடுவேன். எனது புனைவுகளையெல்லாம் அவர்கள் நம்பினார்களோ அல்லது நம்பியதுபோல நடித்தார்களோ தெரியவில்லை. அதற்குமேல் என்னைக் கேள்வி கேட்காமல் வாளாவிருந்தார்கள். இதனால் என்பாடு கொண்டாட்டமாகியது.

ஒரு விமானப்படை அதிகாரியின் வசதியான வீட்டில் கூண்டுக்கிளியாக இருப்பதைவிட சொந்த ஊரின் புழுதியிலே புரண்டு மகிழும் சிட்டுக்குருவியாக இருப்பது அதிக சுவாரசியமாகத் தோன்றியது எனக்கு. ஆனால் இத்தகைய முதிர்ச்சியற்ற போக்குகள் சிறுகச் சிறுக எனக்காகத் தயாரித்து வைத்திருந்த நீண்டகாலப் பாதிப்பைப்பற்றி அந்த இருபத்து மூன்று வயதிலே நான் அறிந்திருக்கவில்லை.

குழந்தைகள் பிறந்த பிறகு வாழ்க்கை எனக்கு தந்த சிக்கல்களையும் வாழ்க்கைக்கு நான் ஏற்படுத்திய சிக்கல்களையும் சொல்வதற்கு இந்தக் கதையின் களம் சத்தியமாய்ப் போதாது. ஒவ்வொரு குழந்தையைச் சுமக்கும்போதும் குறைந்தபட்சம் இரண்டு தடவையாவது அவரிடம் வலிந்து கோபித்துக்கொண்டு ஊருக்கு வந்து விடுவதும் பின்பு உறவினர்கள் தலையிட்டுப் புத்திமதிகூறி சேர்த்து விடுவதும் வழமையாகிப்போனது. அவருக்கும் அது பழகிப்போனது.

கணவரை விட்டு ஊருக்கு ஓடிவரும் ஒவ்வொரு தடவையும் கையிலிருக்கும் காசும் கழுத்திலிருக்கும் ஆபரணங்களும் கரையும். நான் விட்டெறியும் சில்லறைக்கு ஏவல்களை நிறைவேற்றும் உறவுகளும் ஏனைய காலங்களிலே சோற்றுக்கில்லாமல் அலையும் உறவினர்களின் பிள்ளைப் பட்டாளமும் என்னோடு திரிவார்கள். என் கையிலே பசையுள்ளபோது இளநீர், மாங்காய் புளியங்காய் பறித்துத் தருவது, ஆற்றிலே தோணியில் வைத்து வலிப்பது, கடைகளுக்குச் சென்று கொத்துரொட்டி மற்றும் தின்பண்டங்கள் வாங்கிக் கொண்டு வருவது என்று எனது பின்னால் அடியாட்கள் போலவே அலையும் அவர்களுக்கு நிறைய வேலை இருக்கும்.

அதேவேளை, கையிலே காசில்லாமல் ஊரிலிருப்பது தற்கொலைக்கு ஒப்பானது. கொழும்பிலும் கிராமத்திலுமாக மாறிமாறியோடும் எனது வாழ்க்கை வண்டியின் அச்சாணியே அதுதானே. சில்லறைகளும் தீர்ந்து நகைகளும் அடவுக்குப்போய்விட்டால் என் பின்னே அலையும் பட்டாளமும் இயல்பாகவே குறைந்து விடும். அதன் பின்பு அடுத்திருக்கும் சில்லறைக்கடைக்குச் சென்று ஒரு தலைவலி மாத்திரை வாங்கித்தரக்கூட ஆளிருக்காது.

அதுவரையில் எனது சாகசப்புளுகுகளை நம்பியவர்களும் நம்புவதுபோல நடித்தவர்களும் தர்க்க ரீதியாகப் பேசவும் புத்திமதி கூறவும் ஆரம்பித்து விடுவார்கள். நாட்டுக்கோழியறுத்து புரியாணி சமைத்துத்தந்த உறவுகள் பலர் ஒருவாய் தேனீர் தருவதற்கே அலுத்துக் கொள்வார்கள். சின்னச்சின்னக் கோபங்களும் மனத்தாபங்களாய் மாறத் தொடங்கும். நான் விட்டெறிந்த எலும்புகளுக்கு ஒன்றுசேர்ந்து சுற்றியவையெல்லாம் உறுமிக் குரைக்கத் தலைப்படும்போதுதான் என் கணவரின் மேன்மை மண்டையிலே உறைக்கும்.

திடீரென ஒருநாள் ஊரிலிருந்து யாருமறியாமல் மாயமாகி அடுத்த காட்சியில் கொழும்பிலுள்ள கணவரின் குவாட்டர்சில் இருப்பேன். வீடு திரும்பும் கணவர் கதவுகள் திறந்திருப்பதைப் பார்த்துப் புரிந்துகொள்வார். சில நாட்கள் ஒரே வீட்டிற்குள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளாமல் நடமாடியபிறகு தவிர்க்கமுடியாத உடல் தேவைகளின் நிமித்தம் உறவாகிவிடுவோம். கடைத்தெரு உலாவல், ஷொப்பிங் மற்றும் தமிழ் சினிமா என்று சில மாதங்கள் தாக்குப் பிடிப்பேன். அதன் பிறகு வேதாளம் முருங்கைமரக் கதையாய் ஊருக்கு ஓடிவந்து விடுவேன்.

இப்படி நான் ஓடுகாலியாய் அலைந்ததற்கு காரணமாய் ஊரிலே பலரும் எனது கணவரைத்தான் நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் ஒரு கட்டத்தில் கணவரின் சீர்மைக்கு ஈடுகொடுக்கமுடியாத எனது இயலாமைதான் உண்மைக் காரணம் என்பதை புரிந்துகொண்டார்கள். இன்று நடுத்தர வயதைத் தாண்டிக் கொண்டிருக்கும் என்னை எனது உறவுகள் மட்டுமல்ல தோளுக்குமேல் வளர்ந்து நிற்கும் என்னுடைய இரு பெண் பிள்ளைகளும் கூட அறிந்து கொண்டு விட்டார்கள்.

எனது பெண்கள் இருவரும் குணத்திலும் நடத்தையிலும் என்னைப் போலல்லாமல் அவரைப் போலத்தான் வந்திருக்கின்றார்கள். நியாயப்படி பார்த்தால் அதற்காக நான் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். எந்தத் தாய்தான் தனது பெண்கள் ஒழுங்கின்றி இருப்பதை விரும்புவாள்? இருந்தாலும் அதைக்கூட என்மீது அவர்கள் விடுக்கும் சவாலாகத்தான் என்னால் பார்க்கமுடிகின்றது.

அன்று விமானப்படை அதிகாரியின் நேர்த்திக்கு ஈடுகொடுக்க முடியாதிருந்தது போலவே இன்று அவரது வாரிசுகளிடமும் நான் தடுமாறிக்கொண்டிருக்கின்றேன். அவராவது என்னை ஓரளவு சகித்து விட்டுக்கொடுத்துச் சென்றார். ஆனால் ஏஎல் வகுப்பிலும் பத்தாம் ஆண்டிலும் கற்கும் ராட்சசிகள் இருவரும் ஒரு சின்ன விடயத்தில்கூட விட்டுத்தரமாட்டார்கள்.

"அம்மா, இதென்ன இப்படிக் குப்பையா அயன் பண்ணி வச்சிருக்கீங்க. ஸ்கூல் யுனிபோமை இப்படியா அயன் பண்றது? தெரியாட்டி தெரியாதென்று நேரடியாச் சொல்ல வேண்டியதுதானே" என்பாள் மூத்தவள் சுஜன்யா.

"அம்மா தலையைக்கட்டி நீங்க ஸ்கூலுக்குப் போனதேயில்லையா? ஏன் இப்படி ஏனோதானோன்று இழுத்துக் கட்டி வச்சிருக்கீங்க. ப்ரெண்ட்ஸ் எல்லாம் சிரிக்கப்போறாங்க!" என்று தன் பங்குக்கு நையாண்டி செய்வாள் இளையவள் தனுஷா.

எனக்கு பொறுமை எல்லை மீறும்.

"அடியேய்! எனக்கு இவ்வளவுதான் செய்யத் தெரியும்.. நான் குப்பைதான்.. இது பிடிக்கலண்டா இந்தா சுஜன்யா! நீயே உன்ட உடுப்பை அயன் பண்ணு. தனுஷா! நீ எல்லாத்தையும் ஒழுங்காச் செய்யுற உன்ட அப்பாவைக் கூப்பிட்டு அவரையே உனக்குத் அழகாக தலைகட்டச் சொல்லு சரியா?" என்று ஆத்திரத்தில் வெடிப்பேன்.

"உங்களுக்கு அப்பாவை இழுக்காட்டி சோறு செமிக்காதே! அப்பாவுக்குத் தலைகட்டத் தெரியாது தான். ஆனா அதுக்கென்று வந்தாரெண்டால் அதையும் அழகாகத்தான் செய்வார் தெரியுமா? சும்மா போம்மா!" என்பாள் தனுஷா.

எனக்கு அது சுருக்கென்று தைக்கும். அந்தநேரம் பார்த்து வோக்கிங் போய்விட்டு உள்ளே வரும் அவர் நிலைமை புரியாமல், "இதென்ன கிச்சன் இப்படிக் கிடக்கு..?" என்று முணுமுணுத்தபடி சமையலறையைத் துப்பரவுசெய்ய ஆரம்பித்து விடுவார்.

"இஞ்ச, தாங்க பாப்பம் அந்தத் தும்புத்தடியை விளையாடாமா!" என்று வெடுக்கென்று அவர் கையிலிருந்து பிடுங்கி கோபம் உச்சிக்கேற கிச்சனைக் கூட்டிப்பெருக்க ஆரம்பிப்பேன்.

"இதை எப்பவோ செய்திருக்கலாம்" என்று முனகியபடி வெளியேறி வீட்டின் முன்புற வாசலைக் கூட்டிப்பெருக்குவதற்கு ஆரம்பித்து விடுவார். வீட்டிலிருந்தால் கொஞ்ச நேரம்கூட சும்மாவே இருக்காத ஜென்மம்தான் அவர்.

"அது எப்படிம்மா அப்பாவுக்கு மட்டும் சமையல் தொடங்கி எல்லா வீட்டு வேலைகளுமே செய்யத் தெரிந்திருக்குது?" என்று அப்பாவி போல பேச்சை ஆரம்பிப்பாள் இளையவள்.

"அது அவர் என்னைக் கலியாணஞ் செய்ய முந்தி இருந்தே கொழும்புல தனியா இருந்தவர்தானே.. அதனால சமைச்சுப் பழகி இருப்பார்." என்பேன் நான்.

"அப்படியா..? ஆனா நாங்க அப்படிக் கேள்விப் படல்லியே.."

"அப்ப எப்பிடிடீ கேள்விப் பட்டீங்க?"

"அப்பா கொழும்புல பேச்சுலரா இருந்த காலம் முழுக்க ஸ்லேவ் ஐலண்ட் கேம்ப் மெஸ்லதானே சாப்பிட்டவராம்.. உங்களைக் கட்டினாப் பிறகுதான் வீட்டுல சமைக்கவே பழகினாராமே.."

"டீயேய்! உனக்கு இதை யாருடி சொன்னது? இவள் சுஜன்யாதானே..? அவள்தாண்டி சொல்லியிருப்பாள் உனக்கு. அவள்தாண்டி அப்பா திறம் இந்த அம்மா குப்பையெண்டு அப்பாவுக்கு காவடி தூக்கிறவள்.. சனியன்"

"அம்மா, இப்ப எதுக்கு அக்காவை ஏசுறீங்க? எனக்கு அக்கா சொல்லவேயில்ல சொர்ணா மாமிதான் சொன்னவ."

"நான் நம்ப மாட்டன்டீ! சொர்ணா கடைசி வரையும் சொல்லியிருக்க மாட்டா? அவாவுக்கு இதெல்லாம் தெரியவே தெரியாது."

"சரிம்மா.. அக்காதான் சொன்னவ. ஆனால் அக்காக்கு சொர்ணா மாமிதான் சொல்லித்தான் தெரியுமாம்"

"அப்பிடியா சேதி..? அந்தத் திமிர்புடிச்ச சொர்ணா என்னவெல்லாம்டி சொல்லித்தந்தவள்..? இப்ப சொல்லப்போறியா இல்லையா?" என்று நான் பத்ரகாளியாய் மாறியதால் பயந்துபோன தனுஷா, இந்த உரையாடலுக்கு முன்புள்ள அத்தனை பராக்களிலும் நான் உங்களுக்கு மாய்ந்து மாய்ந்து கூறியவற்றையெல்லாம் சொல்லி முடித்தாள்.

அதற்குப்பிறகு என்னால் வாய்திறக்கவே முடியாமல் போனது. பெற்ற பிள்ளைகளிடமே ஒரு தாய் தலைகுனியும்படி ஆவது எத்தனை சங்கடமானது என்பதை யோசித்துப்பாருங்கள். அந்தச்சங்கடமும் லேசான அவமானமும் ஒன்றுதிரண்டு உள்ளூர மெல்லிய பழியுணர்வாக உருவெடுத்தது. ஆனால் அது முதலில் எனக்கே தெரிந்திருக்கவில்லை என்பதுதான் உண்மை.

"ஏனம்மா அந்தநேரம் அப்பாவை இப்படிக் கஷ்டப்படுத்தின நீங்க? ஒழுங்கா மரியாதையா அப்பாவோட கொழும்பிலயே இருந்திருந்தா இப்ப இங்க திருகோணமலைக்கு வந்திருக்கவும் தேவையில்ல.. தேவையில்லாத கதைகேட்கவும் வேண்டியதில்லையே."

அதைக் கேட்டதும் கோபம் எனக்குப் பொத்துக்கொண்டு வந்தாலும் தனுஷா கேட்டதிலிருந்த நியாயம் வாயை அடைத்துவிட்டிருந்தது. ஆனால் சகலமும் ஒன்றுதிரண்டு மூத்தவள் சுஜன்யா மீது திரும்பியது. அவளை எனக்குச் சும்மாவே அவ்வளவாகப் பிடிப்பதில்லை. போதாததற்கு அவள் தகப்பனில் வைத்திருக்கும் மரியாதையில் பாதியளவுகூட என்னிடம் இல்லாதவளாக இருந்து வந்தாள். அதுதான் தாய்ப் பாசத்தையும் மீறிய பழியுணர்வுக்குக் கூட காரணமாக இருந்து வந்தது.

சுஜன்யா மட்டுமென்றில்லை.. எனது கணவரோடு ஓரளவுக்கு மேல் நெருங்கிப் பழகும் யாரையுமே எனக்குப் பிடிப்பதில்லை. அதிலும் அவரைத்தேடிவந்து அவருக்கு ஈடாக அரசியல், சினிமா, கிரிக்கட், விஞ்ஞானம் இலக்கியம் என்று சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருக்கும் பேர்வழிகளை எனக்கு ஆகவே ஆகாது. ஆனாலும் எனது வெறுப்பை அவர்கள் மீது வெளிப்படையாகக் காண்பிக்க மாட்டேன்.

அந்த விருந்தினர்களுக்கு உபசரிப்புகளிலெல்லாம் குறை வைக்கமாட்டேன். அவர்களோடு தேனாய் இனிக்கப் பேசி, "இத்தனை இனிமையான மனைவியா இவருக்கு?" என்று என் கணவரைப் பார்த்து அவர்கள் பொறாமைப் படுமளவுக்கு உபசரிப்பேன். ஆனால் என் ஆற்றாமையெனும் உமி அடுப்பு யாருமறியா வண்ணம் தணல்பூத்துக் கனன்று கொண்டிருக்கும்.

அவர்களது நட்பைப் பிரித்துவிடுவதற்கு என்னவெல்லாம் செய்யலாம் என்று யோசித்து யோசித்தே எனக்குத் தூக்கம் வராது. கூடிய விரைவிலே எதையாவது செய்து அந்த சகவாசம் அதிக நாட்களுக்குத்

தொடராதளவுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவேன். அவரது நண்பர்களை மட்டுமல்ல எனது உறவினர்களைக் கூட அவரிடம் திருட்டுப்பட்டம் பெறுமளவுக்கு கூட மாட்டிவிட்டிருக்கின்றேன்.

என்னைப்பற்றி நானே இப்படிச் சொல்வதை வைத்து தொலைக்காட்சி நெடுந்தொடர்களிலே வரும் எதிர்மறைப் பெண் பாத்திரம்போல என்னை நினைத்து விடாதீர்கள். நிஜ வாழ்க்கையில், கதாநாயகிகள் என்றும் வில்லிகள் என்றும் தனித்தனியான குணாம்சங்களோடு யாரும் இருப்பதில்லையல்லவா? எனது சில இயல்பு களுக்கு எனக்கே காரணம் தெரிவதில்லை. சிலசமயம் என்னையே எனக்குப் பிடிக்காமல்போகும் ஒரு சிக்கலான ஜென்மம்தான் நான்.

ஒருவிதத்திலே எல்லோரையும் திருப்திப்படுத்தி எல்லோருக்கும் வேண்டியவளாக இருக்க வேண்டு மென்று நினைப்பவளும் கூட. எனது நலன்கள் பாதிக்கப் படும்போது மட்டும்தான் எனது கணவரையோ பிள்ளை களையோ பற்றி எனது உறவினர்கள் யாரிடமாவது குறைசொல்லிக் கொண்டிருப்பேன். அவர்களும் எனது முகத்துக்காக அவற்றைக் கேட்டுக்கொண்டிருப்பதுண்டு. சிலவேளை பேச்சுவாக்கில் அவர்களும் தங்கள் பங்குக்கு எனது கணவரையோ பிள்ளைகளையோ ஏதாவது குறை சொல்ல ஆரம்பிக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை என்னால் தாங்க முடியாது என்ப தால் சட்டென அந்தர் பல்டியடித்து அதுவரை எனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் நபரை வாரி விட்டு ஆளை விட்டால் போதும் என்று ஓட வைத்து விடுவேன்.

சகலரையும் விரட்டிய பின்பு அவர் பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் தனியாக உட்கார்ந்திருப் பார். அதைப் பார்க்கும்போது உள்ளூர கவலையாகவும் குற்றவுணர்வாகவும் இருக்கும். முன்பு நான் காய்வெட்டி விட்டவர்களை எங்காவது சந்திக்கும்போது மீண்டும் வீட்டுக்கு வரவழைப்பதற்கு முடியுமான முயற்சிகளைச் செய்துபார்ப்பேன். ஆனால் பழையபடி அவர்கள் கணவரோடு நெருங்கிவிட்டால் மறுபடியும் வெட்டி விடும் படலத்தை ஆரம்பித்து விடுவேன்.

இப்படி என்னிடம் மாட்டியவர்களின் பட்டி யலிலே கடைசியாக இடம்பிடித்தது யார் தெரியுமா? வேறுயாருமல்ல. எனது மூத்த மகள் சுஜன்யாவேதான். அவள் உயர்தரவகுப்பு படிக்கும் பெண்ணாக வளர்ந்து விட்டது மட்டுமன்றி அப்படியே தகப்பனைப்போல பரந்த அறிவுள்ளவளாகவும் தர்க்கரீதியாகச் சிந்திக்கு மாற்றல் உள்ளவளாகவும் இருந்ததால் எனது கணவருக்குச் சமதையாக உட்கார்ந்து அரசியல், அரபு வசந்தம், செவ்வாய் கிரக ஆய்வுகள், எல்நினோ-லாநினா காலநிலை, இலக்கியம், கிரிக்கட் என்று உரையாடத் தொடங்கியிருந்தாள். சுஜன்யா என்னுடைய பெண்தான். இருந்தாலும் இது பொறுக்குமா எனக்கு..? இவளுக்கும் ஏதாவது செய்தாக வேண்டுமே.. செய்தாக வேண்டுமே என்று பரபரத்தது மனது.

அவளுக்கு வெளியில் நிறைய நண்பர்களுண்டு. அவர்களோடு அடிக்கடி கைத்தொலைபேசித் தொடர்பில் இருப்பாள். அவர்களோடு நிறைய அறிவு பூர்வமான விடயங்களைப் பேசிக்கொண்டிருப்பாள். அவளது விலையுயர்ந்த போனில் சகல வசதிகளையும் வைத்துக்கொண்டு இருந்ததால்தான் அவளுக்கு இந்தளவு அறிவும் திமிரும்..

ஆகவே அதற்கு என்ன செய்யவேண்டும் என்று எனக்குப் புரிந்து விட்டிருந்தது.

000

"ஆன்ரி கிரிக்கட் ப்ரக்டிசுக்கு நேரமாகுது.. நான் போகணும் கெதியா வாங்க" என்று கீழேயிருந்து அவசரப்பட்டுக் கொண்டிருந்தான் துவாரகன். மனம் திக்திக்கென்று அடித்துக்கொள்ள தினேஷைத் தோளிலே கிடத்தியபடி கீழே இறங்கி அவனை நோக்கி வாசலுக்கு நடந்து வந்தேன். தெருவை ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு

"இது எப்பிடி உனக்கு..?"

"இது வந்து.. எங்கட வீட்டு மேல்மாடியில கட்டியிருந்த புறா வலைக்குள்ள சிக்கிக் கிடந்திச்சு. காலையில துப்புரவாக்க ஏறினேன். அப்பதான் இதைக் கண்ட நான். சுஜன்யா இதை வகுப்புக்குக் கொண்டு வந்து நாஸா எடுத்த விண்வெளிப் படங்கள் வீடியோவை யெல்லாம் காட்டுறவ. அதாலதான் பாத்ததும் டக்கெண்டு நினைவுக்கு வந்தது. செவ்வாயில க்யுரியோசிட்டி இறங்கினதைக்கூட எல்லாருக்கும் சுஜன்யாதான் இதுல தான் காட்டினா. அவ இண்டைக்கு க்ளாசுக்கு வரல்ல. அதான் தர்றதுக்கு கொண்டு வந்தேன்" என்று அவன் என்னிடம் நீட்டிய அந்த அழகான விலையுயர்ந்த வெளிநாட்டு செல்போனை கைநீட்டி வாங்கிக் கொண்டு நான் திரும்பியபோது..

என்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தார், என் கணவர்.

## மூத்த ஊடகவியலாளர் கமலா தம்பிராஜா அஞ்சலி



இலங்கையில் வீரகேசரி பத்திரிகையிலும் தகவல் திணைக்களத்திலும் ரூபவாஹினி தமிழ்ச்சேவையிலும் முன்னர் பணியாற்றிய செல்வி கமலா தம்பிராஜா கனடாவில் காலமானார். பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர், வீரகேசரியில் தனது ஊடகப் பணியை ஆரம்பித்தவர். பின்னர் தகவல் திணைக்களத்திலும் பணியாற்றினார். இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் பணிபுரிந்தவர். இலங்கையில் முதல் முதலில் ரூபவாஹினி தொலைக்காட்சி தொடங்கப்பட்டபோது, அங்கு தமிழ் செய்தி வாசிப்பாளராகவும் சிறுவர் நிகழ்சித் தயாரிப்பாளராகவும் பணியாற்றியவர். இலங்கை தகவல் அமைச்சு, ஈரானிய உயர்ஸ்தானிகராலயம் முதலியவற்றிலும் செய்தித் தொடர்பாளராகவும் சேவையாற்றியவர். 1980 களின் பிற்பகுதியில் கனடாவுக்குக் குடிபெயர்ந்த கமலா தம்பிராஜா, 1991ஆம் ஆண்டு டொரன்டோவில் ஆரம்பிக்கப்பட்ட தேமதுரம் வானொலியில் பிரதான அறிவிப்பாளராகவும் 2001ஆம் ஆண்டு அங்கு ஆரம்பிக்கப்பட்ட TVI தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகவும் செய்தி ஆசிரியராகவும் பணியாற்றியவர். கனடாவில் தமிழோசை, CTBC வானொலி, கீதவாணி முதலிய வானொலிகளிலும் செய்திகளைத் தொகுத்து வழங்கியவர். இலங்கையில் 1976 இல் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்ட காவலூர் ராஜதுரையின் கதை வசனம், தயாரிப்பில் தர்மசேன பத்திராஜவின் இயக்கத்தில் வெளியான பொன்மணி என்ற திரைப்படத்திலும் பொன்மணியின் அக்காவாக தோன்றி நடித்திருக்கிறார்.

தகவல் - லெ.முருகபூபதி




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.